TAMIL VERSE IN TRANSLATION



P. N. Appuswami

Tamil Verse in Translation

(SANGAM AGE)

தமிழ்ப் பாடல்களும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பும்

(சங்க காலம்)

Translated by

P. N. APPUSWAMI

மொழி பெயர்த்தவர்

பெ. நா. அப்புஸ்வாமி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை-600 113

BIBILOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamil Verse in Translation
Translator	:	P.N. Appuswami
Publisher	:	International Institute of Tamil Studies, Tharamani, Madras-600113
Publication No.	:	131
Language	:	Tamil and English
Date of Publication	:	August 1987
Edition	:	First
Paper used	:	16 Kg. White Printing
Size of the Book	:	14 cm × 21 cm
Printing types used	:	10 Point
Number of Copies	:	1200
Number of Pages	:	XLVIII+304=352
Price	:	Rs. 40
Printers	:	Novel Art Printers, 137, Jani Jan Khan Road Madras-600 014
Binding	:	Paper Back
Subject	:	English translation of Sangam Poems

TO LOVERS OF TAMIL
ALL OVER THE WORLD
AND TO
ALL LOVERS OF ENGLISH
IN INDIA AND IN TAMIL NADU

அனைத்துலகிலும் உள்ள
தமிழ் அன்பர்கள் அனைவருக்கும்
இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் உள்ள
ஆங்கில மொழி அன்பர்கள் அனைவருக்கும்

FOREWORD

Dr. AVVAI NATARAJAN

The author, the late Thiru. P. N. Appusamy, proved himself a doyen among translators because he loved the substance called truth and wished to convey it with fearless adherence and accuracy. Twenty years of my close and intimate association with him emboldens me to say that his sudden death with tasks unaccomplished has left a void which is difficult to fill.

Appusamy devoted 70 years of a life span to Tamil studies and he brought out these translations during the time he worked at the International Institute of Tamil Studies. My relationship with him was as son to father and hence it gives me much happiness that he had proved himself capable of bringing about the correct perspectives in translating from a classical language such as Tamil into a modern language such as English.

Cankam poetry presents many difficulties for the translator but sheer dedication and hard work has made Appusamy's task an object to be followed—for it is only the few who can choose the way of hard effort and single-minded devotion. He was a lawyer with a different discipline altogether. But he took the path of the traditional scholar and savant of Tamil. He persevered in that direction so that this work is testimony to his scholarship and dedication. His life should remain example for many others who wish to live and work for Tamil and, especially today, where there is an international outlook on language in which Tamil is gaining much recognition and value as something greatly, if not substantially, contributing to the enrichment of the human race.

Tamil Nadu needs many scholars dedicated to translation of the vast and voluminous literature found in the Tamil language. No doubt attempts have been made by Western and Indian scholars in the past but more effort is called for to

bring out the meaning more clearly and to reach the depths more effectively. The words of George L. Hart III are apposite here—words which conclude his book entitled, "The Poems of Ancient Tamil" : "Perhaps if the Tamils rediscover their most ancient literature and understand correctly its techniques, a new dimension will be added to the works of Tamil writers that will make Tamilnadu once again the home of one of the world's finest literature".

There has been a tradition with able scholars that, when they take upon themselves the task of conveying in English what is known as Cankam poetry, they do this only after deep study and understanding of its background. As example there is a poem of Avvaiyar, the poetess, in Kurunthokai, which deals with the case of a maiden tormented by love who, in sleep, tossses about uneasily and thus hardly able to sleep. At the same time the neighbourhood is in deep sleep unable to understand the maiden's mental torment. A swaying chilly wind with its intermittancy keeps on its gusts which even more aggravates the maiden's anguish.

Wondering how others could sleep so soundly when she is herself so tormented, the maiden is in grave agitation, strikes herself and thereby gives expression to her miserable condition. This poem entitled, "முட்டுவேன்கொல் தாக்குவேன் கொல்" is found in Kurunthokai—meaning "Shall I strike myself or hurt myself". It is common with Tamil Nadu women even today that, when overwhelmed with unbearable grief, they beat their heads with their hands. Translators of this poem, without proper understanding, have given altogether different meanings such as in the following instance :

> "Shall I charge like a bull
> against this sleepy town
> or try beating it with sticks,
> or cry wolf
> till it is filled with cries
> of Ah's and Oh's?"

It is only after deep study and understanding of the background of Cankam poetry that the task of conveying in English has to be undertaken by competent scholars. Appusamy had deep and abiding interest in sc ience and had contributed thousands of articles on scientific subjects. I am aware that this thirst for a scientific approach had made him throw overboard many traditional beliefs and religious practices. I still remember his words to me that, after his demise, his funeral should see no religious rites. To that extent his sincerity calls for much respect.

I cannot pass by Cankam poetry without reference to the translated meaning given by some scholars to **'anthanar'** as 'Brahmins'. Appusamy retained the original term wisely. In this context, the distinction has been clearly brought out by George L. Hart III in his book already quoted from: "Some of the Brahmins who lived in Tamilnadu at the time of the anthologies were not very much like their Northern counter-parts. Brahmins were called **antanars**, a word whose folk etymology is "those who are lovely (**am**) and cool (**tan**) and **parpans**, the "seers" from **par**, to see...some of the Brahmins accepted the Tamil language and its culture wholeheartedly, for many of the finest Tamil poets were Brahmins, and their poems do not mention Aryan or Sanskritic ideas or customs any more than those of non-Brahmin authorship. Thus it is clear that some of the Brahmins of ancient Tamilnadu had so accomodated themselves to the customs and beliefs indige-nous to Tamilnad that they bore little resemblance to the northern idea of a Brahmin".

I feel that Appusamy could have well retained the word **'Anthanar'** throughout used by the poet instead of substitu-ting "Brahmins" which today signifies a caste identity different from the Dravidian understanding of **'Anthanar'**. No doubt Cankam poetry presents many difficulties for the translator but sheer dedication to the task has enabled Appusamy to become a strident fore-runner in the

methodology of translation as can be applied to Tamil. His was a different output from the many that have come before us as translations of Cankam or metaphysical poetry.

It does happen sometimes that a translation can achieve something better than the original. This has been said, by way of example, in the case of what is now known as King James' Version of the Bible. The translation from Greek to English was so brilliantly done that the translated version became far superior to the Greek original. Today the Authorised Version is a classic in the English language and has contributed a great deal to the enrichment of the English language. I dare say Appusamy worked hard to bring about perfectability in translation keeping in mind this example and, to his credit, it has to be mentioned that his translations are perhaps the most valuable and competent that we have had in the recent past.

I must commend these translations for their fidelity to the originals and, though Appusamy is no more with us, I am certain that this book will serve as forerunner to the many that must needs follow, if Tamil is to emerge as the one language which has still a great deal of enrichment and wisdom to offer to the world.

பதிப்புரை

அறிவியற் கருத்துக்களைத் தமிழாக்க வேண்டுமென்ற ஆவலில் எழுத்துப் பணிகளை ஏராளமாகச் செய்து வந்த அறிஞர் பெ. நா அப்புசாமி அவர்கள் மனமுவந்து எழுதிய சங்க விலக்கிய மொழி பெயர்ப்பு நூலை வெளியிடுவதில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமைப்படுகிறது. திரு. அப்புசாமி அவர்கள் நிறுவனத்தில் மொழி பெயர்ப்பு ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பெரிதும் முயன்று இந்நூற்பணியைச் செய்து தந்தார். இந்நூல் 1980 நவம்பரில் முதன் முதலில் அச்சிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 1982 வரை 160 பக்கங்கள் மட்டுமே அச்சாகியிருந்தன. அதன் மேன் 1986 ஆம் ஆண்டு தொடக்கத்தில் மீண்டும் அச்சுப்பணி தொடங்கப் பெற்று 48 பக்கங்கள் நடந்தேறியுள்ளன. எஞ்சிய 96 பக்கங்கள் இப்பொழுது முடிக்கப் பெற்று இன்று நூல் வடிவமாகி யுள்ளது.

இந்நூலில் மொத்தம் 120 சங்கப்பாடல்கள் ஆசிரியரால் திறம்பட மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வேற்று மொழியினர் சங்கவிலக்கியச் சிறப்புக்களை நன்கறிய இந்நூல் ஒரு பலகணியா யுள்ளதெனலாம். ஐங்குறுநூற்றில் 30 பாடல்கள், அகநானூற்றில் 10 பாடல்கள், கலித்தொகையில் 5 பாடல்கள், குறுந்தொகையில் 30 பாடல்கள், நற்றிணையில் 10 பாடல்கள், பரிபாடலில் 5 பாடல் கள், பதிற்றுப் பத்தில் 5 பாடல்கள், புறநானூற்றில் 20 பாடல்கள், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், பட்டினப்பாலை ஆகியவற்றி லிருந்து சிற்சில பகுதிகள் ஆக மொத்தம் 120 பாடல்கள் மொழி பெயர்ப்பாகியுள்ளன.

எளிமை இனிமை இரண்டுங் கலந்த ஆங்கிலத்தில் சங்கப் பாடல்கள் விளங்குவது இந்நூலின் தனிச்சிறப்பாகும். ஆசிரியர் அறிஞர் பெ. நா. அப்புசாமி அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் இந்நூலின் முழுமையடைந்த அச்சுப்படியைக் கண்ணாரக் கண்டு களிக்க விரும்பிய வேட்கையுணர்வை நினைக்கும் போது நம் கண்கள் பனிக்கின்றன. ''செப்பம் உடையவர் ஆக்கம் சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்புடைத்து'' என்ற திருவள்ளுவப் பேராசானின் கருத்திற்கேற்ப இன்று வையம்வாழ் தமிழர்க்கும் வையத்தின்

பிறமொழி இன நல்லறிஞர்கட்கும் பழந்தமிழரின் சிந்தனையாறு அறிஞர் அப்புசாமி வழியாகக் கால்கொண்டு ஓடத்தொடங்கு கின்றது என்று நினைக்கும்போது நமக்கு ஆறுதல் சிறிது ஏற்படு கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இத்தகைய பணிகளை நிரம்பச் செய்ய வேண்டுமென்பது நிறுவனத்தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விருப்பமாகும். தொடர்ந்து நிறுவனம் இத்தகைய பணிகளைச் செய்யும் என்று உறுதி கூறுகின்றோம். நிறுவனப் பணிகட்குத் தொடர்ந்து நற்றுணையாய் இருந்து வரும் நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் **சி. பொன்னையன்** அவர்களுக்கு நன்றி பாராட்டுகின்றோம். நடமாடும் பல்கலைக் கழகம் தமிழக நிதியமைச்சர் **டாக்டர் நாவலர்** அவர்கள் சங்க விலக்கியச் செழுமை பேசும் செந்நாவில் ஆய்ந்து அவர்கள் நிறுவனப் பணிகட்குத் தொடர்ந்து ஊக்கம் கொடுத்து வரும் தகைமையறிந்து இவ்வேளையில் நன்றியை அன்னார்க்குத் தெரிவிக்கிறோம்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுவின் தலைவராகவிருந்து சிறந்த முறையில் நிறுவனத்திற்குக் கருத்துரை வழங்கி வருகிறார் கள். இவர்கட்கும் நிறுவனம் நன்றி தெரிவிக்கிறது.

தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை அரசு செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் மொழி பெயர்ப்பியல்துறை இயக்குநராகப் பல்லாண்டுகள் பாரித்த முறையில் பணியாற்றி யவர்கள். அவர்கள் அறிஞர் அப்புசாமி அவர்களின் இம்மொழி பெயர்ப்பு நூல் வெளிவரப் பெரிதும் நாடி உதவினார்கள். அவர் கட்கும் நிறுவனம் நன்றி கூறுகிறது.

நூலின் அச்சுப்பணிகளை நன்முறையில் செய்து தந்த செல்வி சயலட்சுமி அவர்கட்கும், நூலைச் சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த நாவல் அச்சகத்தார்க்கும் நன்றி.

7-8-1987

அ. நா. பெருமாள்
இயக்குநர்

PREFACE

Ancient Tamil verse, as we now have it, consists of about thirty three thousand lines embodied in nine anthologies. Some scholars think that they may have been bardic, and sung by professional bards and dancing songstresses to the music of the lute and drum in the courts of kings and princes, and in the assemblies of men and women. It is fairly generally accepted now that they may have been composed in the first to third centuries A.D., and compiled into nine anthologies a couple or so centuries later. But others argue that they are much earlier, and some suggest, may be even later.

These are the earliest Tamil verses now extant. But there is a claim that there were earlier and larger bodies of verse which have been lost entirely without leaving any trace, The anthologists have classified and often arranged the verses in terms of landscapes and themes, and fauna and flora and deities to match. In this they purport to follow an amazing grammar—**Tolkāppiyam**—about whose date there is a good deal of dispute among scholars of the present day, some holding that it preceded the anthologies, and others arguing that it must have been later. The grammarians also hold that there are several layers of meaning, and that the verses are not just simple poetry, but very sophisticated cryptic and intricate compositions to be decoded with the aid of the ancient grammar.

The present translations do not attempt to div e into these depths, but seek to present the shimmering beauty of the verses of an ancient period as far as was possible to the translator. The translator has enjoyed many of these verses for over half a century, and has been occasionally getting his translations published in newspapers and journals in Madras,

Bombay, Calcutta, Delhi, Vijayawada, Machilipatnam. Bangalore and Madurai. But all those attempts were stray and spasmodic. The present is a more ambitious attempt to give a Cross-Section of that body of that already selected ancient verse in book form with appropriate titles and with corresponding Tamil verses to match, with such notes as seemed necessary to help the reader understand the verses better.

The translator's estimate of the quality of these ancient verses is justified by the opinion of a highly capable and relatively recent translator, Dr. A. K. Ramanujam of the University of Chicago. He writes, 'In their antiquity and in their contemporaniety there is not much else in any indian literature equal to these quiet and dramatic Tamil poems. In their values and their stances, they represent a mature classical poetry; passion is balanced by courtesy, transparencies by ironics and nuances of design, impersonality by vivid detail, leanness of line by richness of implication.'

The authors of these ancient verses were born poets, who had developed fine and sensitive imaginations which responded to their environment. But they were controlled in their thinking and expression by the milien in which they lived, and by the pressures of their needs. Their vocabulary was limited, and their language was agglutinative. Both these factors tended towards brevity and ambiguity , and gave the verses an clusive eharm and grace, but also made them occasionally perplexing. So commentators, direct and indirect, of various kinds and grades kept stepping in at various periods to help, but unwittingly they hindered too.

This process began quite early with the compilers of the anthologies acting as a sort of interpretators. They not only chose, selected and compiled, but also cribbed, cabined and confined the verses, and also cast them into moulds of rigid patterns, thus interpreting and plaining them according to

their lights, brilliant though they were. But later on, learned commentators and scholiasts, some of whose names we know, and others whose names we do not, commented on these verses mostly on the bases of the rules laid down by that all powerful ancient grammarian, Tolkappiyar. In this they sometimes differed from the anthologist, and more often among themselves. After the rediscovery of these verses by C. V. Damodaram Pillai, and in a very much larger measure by U. V. Swaminatha Aiyar, a few other expounders have stepped into this field, and they have often dared to differ from, and even to criticise, the old expositors. Some translators too of these verses, like G. U. Pope, J. M. Nallasami Pillai, K. G. Sechier, and others, have agreed and differed, narrowly or widely.

I have mostly taken my choice from among these; but I have now and then, broken free altogether from their skackles. This is a right I have in virtue of my claimed ancestry. I am a kaucika on the paternal side, and a gārgya, on the maternal, both of which are clans of the northern part of India. Those clansmen had migrated down south in those far-off days of two thousand years ago, had made Tamil their mother tongue, and had attained such proficiency in it, that over half a dozen of their verses have been included in the ancient anthologies. I proudly claim that these ancient clansmen of mine were among the earliest integrators of our great country which in the old days was so rich in commerce, wealth, and knowledge, and in languages which dwelt in gracious amity with each other, in a spirit of rivalry perhaps, but in a spirit of animosity never. Languages commingled with each other, and freely took words and ideas from a common pool or till, and enriched each other. That all mankind is kin were not words which came not from the tip of the tongue, but from the depths of the heart.

முகவுரை

இப்போது நமக்குக் கிடைத்துள்ள சங்க காலத் தமிழ்ப் பாடல கள் ஏறத்தாழ முப்பத்து மூவாயிரம் அடிகளை உடையவை. அவை ஒன்பது நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பல புலவர் கள் பாடிய அந்தப் பாடல்கள் பெரும்பாலும் இசையோடு பாடு வதையே தொழிலாகக் கொண்ட பாணர்களாலும், யாழும் கிணையும் ஒலிப்ப, நடனமாடும் விறலியராலும், பாடலில் வல்ல பாடினிகளாலும், அரசர்களின் பேரவைகளிலும், குறுநில மன்னரின் சிற்றவைகளிலும், ஆணும் பெண்ணும் நிரம்பிய மக்களின் மன்றங் களிலும் பாடப்பட்டிருக்கலாம் என்று இக் கால ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். இந்தப் பாடல்கள் கி. பி. முதல் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் பாடப்பட் டிருக்கலாம் என்பது பொதுப்பட இக்கால ஆய்வாளரின் கருத்து. அந்தக் காலத்துக்கு இரண்டொரு நூற்றாண்டுக்குப் பின்பு அவை தொகுக்கப் பட்டிருக்கலாம் என்னும் கருத்தும் பொதுப்பட ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அவை எல்லாம் அக் காலத்துக்கு வெகு முன்னமேயே பாடப்பட்டன என்று சிலர் கூற, வேறு சிலர் அவை இன்னும் சற்றே பிற்காலத்தைச் சேர்ந்தவை என்று வாதாடுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும், இப்போது தெரிந்த வரை, அவையே மிகப் பண்டைக் காலத் தமிழ்ப் பாடல்கள் என்றாலும், அவற்றுக்கு மிக மிக முற்காலத்தில் மிகப் பெரிய பாடல் தொகுதிகள் இருந்தன என்றும், அவற்றுள் ஓர் அடி கூட மீதமின்றி, அவை அடியோடு அழிந்து போயின என்றும், சிலர் கூறுகிறார்கள். இப்போது நமக்குக் கிடைத்துள்ள பாடல்களைத் தொகுத்துள்ள தொகுப்பாசிரியர்கள் அவற்றோடு அவ்வவற்றுக்கு உரிய மரம், செடி, விலங்கு, பறவை, தெய்வம், நிகழ்ச்சி, முதலிய வற்றைப் பொருத்தி, அவற்றை வகுத்துத் தொகுத்திருக்கிறார்கள். இந்தப் பாகுபாடு தொல்காப்பியம் என்றும் வியத்தகு இலக்கணம் ஒன்று கூறிய விதிகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அந்த இலக்கணம் உருவாகிய காலம் எது என்பதைப் பற்றிய விவாதம் ஆய்வாளர்களிடையே இன்றும் இருந்து வருகிறது. இதுவும் அன்றி, இப் பாடல்களுக்கு இலக்கண முறையில் பொருள் காண்பவர்கள் ஆழப் புகப் புக இவை பற்பல கருத்துக்களை அளிக்

கின்றன என்றும், இப் பாடல்கள் மேலெழுந்தவாரியாகப் பாடப் பட்ட பாடல்கள் மட்டுமாக அல்ல என்றும், இவை சிக்கலான, நுட்பம் வாய்ந்த, மறை புதிர் போன்ற, கருத்துக்களை உள்ளடக் கியவை என்றும், கருதுகிறார்கள். இத்தகைய கருத்துக்கள் நிலவி வருவதால், பண்டைக் காலப் பாடல்களில் சிறந்து காணப்படும் கவிதைப் பண்புகளையும் நயங்களையும், அப் புலவர்கள் வழங்கிய சொற்களின் அடிப்படையில், கருத்தோடு ஊன்றி உணர்ந்தும், அப் பாடல்களின் அடி தளம் வரை ஆழ மூழ்கிக் கலக்காமலும், அவற்றின் கவிதை நயங்களை எடுத்துக் காட்டுவதே இந்த ஆங்கில மொழி பெயர்ப்பின் நோக்கம். அமெரிக்காவில், சிக்காகோ பல்கலைக் கழகத்தில், மொழிப் பணி புரிந்துவரும் டாக்டர் ஏ. கே. ராமானுஜன் வருமாறு கூறுகிறார் :

'பழமையையும் புதுமையையும் சம காலத் தன்மையையும் கொண்டு, இத்துணை அமைதியாகவும் நாடகப் பண்புடனும் பாடப்பட்டுள்ள இந்தப் பாடல்களுக்கு ஈடாகக் கூறத்தக்கவை வேறு எந்த இந்திய மொழியிலும் இல்லை. இவை கொண்டுள்ள மதிப்புகளை நோக்கினாலும், இவை என்றும் நிலைநிற்க வல்லவை யாகவும், பக்குவம் பெற்றவையுமான கவிதைகளாகவும், காணப் படுகின்றன. இவை வெளியிடும் தீவிரமான கருத்துக்களை இவற் றில் பொதிந்துள்ள பண்பு நயங்கள் ஈடுசெய்கின்றன. தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அங்கதங்கள் முரண் படைப்புக்கள், அமைப்பின் நய நுட்பங்கள், முதலியவை ஈடு செய் கின்றன. ஆளைக் குறிப்பிடாமல் பொதுப்படக் கூறும் தன்மை களை ஒளிவீசும் விவர நுட்பங்கள் ஈடு செய்கின்றன. மெல்லியவை போல் தோன்றும் அடிகளைக் குறிப்பாகச் சுட்டும் செறிந்த கருத்துக்கள் ஈடு செய்கின்றன.'

இம் மொழி பெயர்ப்பாளர் இத்தகைய பாடல்களை ஓர் அரை நூற்றாண்டுக்கு மேலாகச் சுவைத்து வந்திருக்கிறார். ஆகவே, தம்மை அன்றி வேறு பலரும் அவற்றை ஓரளவேனும் சுவைக்கு மாறு, சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, விஜயவாடா, மசிலிப்பட்டினம், பங்களூர், மதுரை, முதலிய நகர்களிலிருந்து வெளி வந்துகொண்டிருந்த தினத்தாள்கள், மாதப் பத்திரிகைகள், முதலியவற்றில் இவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களை வெளியிட்டு வந்திருக்கிறார். ஆயினும், அவை எல்லாம் முறை யான ஒரு தொடராக அமைக்கப்படவில்லை. இப்போது

அவற்றின் குறுக்கு வெட்டுப் பகுதி ஒன்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, நூல் வடிவமாக அமைத்து, வெளியிடவும், நூலின் எதிர்ப் பக்கத்தில் அவற்றுக்கு ஈடான தமிழ் மூல பாடல்களை அரும்பத உரையோடு கொடுக்கவும், முயன்றுள்ள முயற்சியே இது. இத்தகைய அமைப்பு வாசகருக்குத் துணையாக உதவும் என்பது மொழி பெயர்ப்பாளரின் கருத்து.

இப் பண்டைக்காலப் பாடல்களைப் பாடியவர்கள் பிறக்கும் போதே கவிமனம் படைத்தவர்களாகப் பிறந்தவர்கள். பயிற்சி, சூழ்நிலை முதலியவற்றால் ஏற்கெனவே உணர்ச்சி மிக்க தங்கள் நுட்பம் வாய்ந்த கற்பனைத் திறனை வளர்த்தவர்கள். அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைக் காட்சிகளும், நிகழ்ச்சிகளும், அவற்றின்மீது உறைந்தபோது அவர்களின் மனங்கள் அவற்றுக்கு ஏற்ப, செயல் பட்டன. ஆயினும் அந்தச் சூழ்நிலை அவர்களுடைய சிந்தனைப் போக்குகளையும், அவற்றை வெளியிடும் சொல் நடைகளையும், ஒரு வகையில் கட்டுப்படுத்தின. அவர்களுக்கு வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த பலவகைத் தேவைகளும் அவ்வாறே அவர்களைக் கட்டுப்படுத்தின. அந் நாளில் அவர்கள் வசம் இருந்த சொல்-தொகுதி அதிகம் இல்லை. தமிழ் மொழி உருபுகளை உடையதாக இருந்தாலும் அவற்றை விட்டும் மாற்றியும் வந்தது; அதன் சொற்கள் பகுதி வடிவிலேயே ஒட்டவல்ல சொல் அமைதியை உடையதாக உள்ளன; இவ் இரண்டு காரணங்களாலும் அதன் சொற்செட்டு மிகுந்தது; ஆனால், பல பொருள்களுக்கு இடம் தன்மை உடையதாகவும் அது ஆயிற்று. ஆகவே அது எளிதில் பிடிபடாத இனிமையையும் நயங்களையும் உடையதாயிற்று. ஆனால் சிற்சில போதுகளில் நமக்குப் பொருள் எளிதில் விளங்காத வாறு ஏமாற்றியும் வந்தது. ஆதலால், நேரடியாகவும் மறைமுக மாகவும் பற்பல காலங்களில் அப்பாடல்களுக்கு விளக்கம் கொடுத்து வந்த உரையாசிரியர் முதலியோர் அப் பாடல்களுக்குள் புகுந்து நமக்கு அவற்றைப் பெரும்பாலும் விளக்கியும், சிற்சில வேளை களில் நம்மை மயக்கியும் திகைக்க வைத்தும், வந்திருக்கிறார்கள்.

இத்தகைய விளக்க முறை மிகப் பழங்காலம் முதலே தொடங்கி விட்டது. சங்ககாலப் பாடல்களைத் தொகுத்த தொகுப்பாசிரியர்கள் தங்களுடைய அடிக்குறிப்புகள் முதலிய வற்றால் ஒரு வகையில் உரையாசிரியப் பண்பை மேற்கொண்டவர் கள். அவர்கள் பாடல்களைப் பொறுக்கி, தேர்ந்தெடுத்து, தொகுத்ததோடு அமையவில்லை. அவற்றைத் 'தட்டி மடக்கிப்

பெட்டியிலே போட்டார்கள்'. விறைப்பான அச்சுக்களிலே அவற்றை வார்த்துத் தனி உருக்களைக் கொடுத்தார்கள். ஒள்ளொளி மிக்க தங்களுடைய அறிவின் திறத்தால், பழைய இலக்கணத்துக்கு ஏற்பத் தாங்கள் கண்ட பொருளை அவற்றுக்கு ஊட்டி, நமக்கு அளித்தார்கள். அவர்கள் செய்த உதவி பெரிது. ஆயினும் அவர்களுக்குப் பிற்காலத்தில் பல உரையாசிரியர்கள் தோன்றினார்கள். அவர்களுள் சிலரின் பெயர் நமக்குத் தெரியும்; வேறு சிலரின் பெயர் கூட நமக்குத் தெரிய வழி இல்லை. ஆயினும் அவர்களும் இன்றளவும் குன்றாத, எல்லாம் வல்ல, பண்டைக்கால இலக்கண ஆசிரியர், தொல்காப்பியர் கூறிய விதிகளின் அடிப்படையிலேயே, விளக்கம் கூறி வந்தார்கள். இப்படி அவர்கள் கூறுகையில், சிற்சில இடங்களில், பாடல்களைத் தொகுத்த ஆசிரியர்கள் கொண்ட கருத்துக்களிலிருந்து மாறுபட்டார்கள். அவர்களுள் ஒருவருக்கு ஒருவர் இடையேயும் பல இடங்களில் கருத்து வேற்றுமைகள் இருந்தன. ஓரளவில் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களும், பேரளவில் உ. வே. சாமிநாதையர் அவர்களும், மறைந்து ஒதுங்கிக் கிடந்த சங்ககால இலக்கியங்களைக் கண்டெடுத்து நமக்கு அளித்தபின், இந்தத் துறையில் வேறு பல உரையாசிரியர்கள் இறங்கிப் பணியாற்றி வந்துள்ளார்கள். அவர்களுள் சிலர் பண்டைப் பழம் உரையாசிரியர்களின் கருத்துக்களிலிருந்து வேறுபடவும், சிற்சில வேளைகளில் துணிந்து குறை கூறவும் நாம் காண்கிறோம். இப்பாடல்களில் சிலவற்றை மொழி பெயர்த்துள்ள ஜி. யு. போப், ஜே எம். நல்லசாமிப் பிள்ளை, கே. ஜி. சேஷையர், முதலியோர் பலரும், சிறிதோ பெரிதோ பண்டைப் புலவர்களின் கருத்துக்களை ஒப்பியும், அவற்றினின்று மாறுபட்டும், தங்கள் மொழி பெயர்ப்புக்களை அமைத்திருக்கிறார்கள்.

இத்தகைய விளக்கங்கள் பலவற்றை ஊன்றிப் படித்தும், அவற்றுள், என் அறிவுக்குப் பட்ட வரையில், எது பொருத்தமான சிறந்த பொருள் என்று ஆய்ந்தே நான், பெரும்பாலும், இந்த மொழி பெயர்ப்பைச் செய்திருக்கிறேன். ஆயினும் சிற்சில இடங்களில், அவர்கள் இட்ட கட்டுக்களை எல்லாம் அறுத்தெறிந்து விட்டு, பாடலை அமைத்த கவி வழங்கிய சொற்களின் அடிப்படையிலேயே என் மொழி பெயர்ப்பை அமைத்திருக்கிறேன். சங்கத் தமிழ்ப் பாடல்களைப் பாடிய மூதாதையர்களின் மரபில் நான் தோன்றியவன் என்னும் என்னுடைய உரிமையை முன்னிட்டு,

எனக்கு இந்த உரிமை உண்டு. தந்தை வழியில் நான் ஒரு கோசிகன்; தாய் வழியில் நான் ஒரு கார்க்சியன். இந்த இரண்டு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களின் பாடல்களும் ஆறுக்கு மேலாகச் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றன. இவ் இரு மரபினரும் தொடக்கத்தில் வடநாட்டினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், அத்துணை பழங்காலத்திலேயே தமிழ் நாட்டில் குடியேறியவர்கள். தமிழைத் தங்கள் தாய்மொழியாக ஆக்கிக் கொண்டவர்கள். அம் மொழியில் சிறந்த திறமை பெற்ற வர்கள்; அவர்கள் பாடிய ஏழு பாடல்கள், தங்களுடைய தகுதி காரணமாக, பண்டைத் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய என்னுடைய மூதாதையர்கள், அத்துணை பண்டைப் பழங் காலத்திலேயே வாணிபம், செல்வம், அறிவு, முதலியவற்றில் சிறந்து விளங்கிய நம்முடைய யாபெரும் நாடு முழுவதையும் ஒன்றாக இணைத்தவர்கள் என்பதால் நான் பெருமை கொள் கிறேன். அக் காலத்திலேயே ஒரு சிலவாக உள்ள மொழிகள் அனைத்தும், அன்போடும், மன அமைதியோடும், ஓரளவு போட்டி மனப்பான்மை உடையவையாயினும் வெறுப்பு மனப் பான்மை சற்றும் இல்லாதவையாக வாழ்ந்து வந்தன என்பதற்கு இத்தகை யோரின் தமிழ்ப் புலமையும், அப்பாடல்களை ஏற்ற தொகுப்பாசிரி யர்களின் நட்பும், சான்றளிக்கின்றன. அம் மொழிகள் ஒன்றோடு ஒன்று கலந்து உறவாடின. ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குப் பலருக்கும் பொதுவான உண்துறையிலிருந்தும், கரு வூலத்திலிருந்தும், எடுத்துக் கையாண்டன. அவ்வாறு செய்து தம் தம் மொழிச் செல்வங்களைப் பெருக்கின. மானுட இனத்தைச் சார்ந்த யாவரும் கேளிர் என்பது நாவின் நுனியிலிருந்து வெளி வந்த பொருளற்ற சொற்கள் அல்ல. கனிந்த நெஞ்சங்களின் ஆழ்ந்த பகுதியிலிருந்து வெளிப்பட்ட உணர்ச்சி மிக்க உண்மைச் சொற்கள்.

ACKNOWLEDGEMENTS

My obligations are to many and much and I acknowledge them gratefully. The poets who composed these verses in those far-off days, and their songsters, songstresses, and dancers who helped spread them;

The anthologists, and their patrons and their assistants who preserved them for posterity;

The early commentators, whose names at dates we do not know, who linked the ancient language with contemporary generations;

The medieval commentators, who explained these poems more or less fully, and more from the grammatical angle rather the fully poetic, and so preserved the texts and their meanings for posterity (though sometimes they different from the ancient expositors and more recent commentators);

Scholars much nearer our times who saved these ancient poems from being lost. Scholars like C. V. Damodaram Pillai, and the great U. V. Swaminatha Aiyar (the dozen of them all) and quite a host of others, like Mahavidvan R. Raghava Aiyangar, Pinnattur Narayanaswami Aiyar, R. Rajagopala Aiyangar, E. V. Anantarama Aiyar, D. Kanakasundaram Pillai and others (they are too many to be listed), who wrote new commentaries in part, though they differed from the older commentators though mildly and apologetically. They saved these ancient verses for us;

Publishing houses notably the Saiva Siddhanta Publishing House (of Subbiah Pillai), and Murrays (S. Rajam) who have given us newer editions from newer angles. The Tamil section of this book has been taken from the Murrays edition with S. Rajam's kind permission (its word separation and punctuation and occasional sub-leadings are great helps);

Old translators like G. U. Pope. I. M. Nallasami Pillai, K. G. Sesha Aiyar, I. M. Somasundaram Pillai, Bhaskara Narayanan, I. S. Chellaiah, Dr. A. K. Ramanujam, N. Raghunatha Aiyar and others too numerous for mention.

And penultimately and most of all, I thank my friends who have helped me very much in understanding, interpreting, and translating the verses into a language which is not my mother tongue. Their help has been sometimes positive and direct. and sometimes negative and indirect, yet has helped to guide me, though I have not always followed their advice. The help I have received thus from Madame Wadia (PEN), P. J. Chester (O. U. P.), Rt. Hm. V. S. Srinivasa Sastri, Mrs. Lilia, Joothill, Rev. Penning, Professor K. Swaminathan, K. A. Nilakanta Sastri, S. Vaiyapuri Pillai, S. G. Srinivasa Acharya, A. Srinivasa Raghavan, and some members of my family of Mr. Anantanarayanan, I.C.S., Mr. Krishnan (Doctor Photographer, wild life expert), Professor M. Lakshmi Ammal S. R. Kaiwar, I.C.S., V. Sundaram, I.A.S., Srimati Buch, and N. S. Rao, Avvai Natarajan and some others, has been too great to be requited by thanks.

And finally, I thank the International Institute of Tamil Studies Madras and its Director S.V. Subramanian, the Librarian Thirumati Sivakama Sundari and the office staff (particularly Gunaseelan the typist). I know that all these have helped a good cause, and they have encouraged internationalise Tamil

I hope that the readers of this book will be able to see beauty of the original Tamil verses through the veil of my translations, and will forgive me too for my temerity.

P. N. APPUSWAMI.

நன்றி

இந்த நூலை எழுதுவதற்கு எனக்குப் பலவகையாகத் துணை செய்தவர் மிகப் பலர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றியை மனமாரச் செலுத்துகிறேன்.

அவ்வளவு பழங்காலத்துக்கு முன் அரிய தமிழ்ப் பாடல்களை அமைத்த புலவர்கள் பலருக்கும், அப்பாடல்களை இசையோடு பாடியும் அதற்கு ஏற்ப நடனமாடியும் அரசவைகளிலும் மக்களின் மன்றங்களிலும் பரப்பிய பாணர், பாடினிகள், விறலியர், முதலிய அனைவருக்கும் நன்றி;

அந்தப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து, தொகை நூல்களாகத் தொகுத்த தொகை ஆசிரியர்களுக்கும், அவர்களை ஊக்கிய மேலோருக்கும், அவர்களுக்குத் துணைநின்ற பலருக்கும், அப்பாடல் களைப் பாதுகாத்து நமக்கு அளித்ததற்காக நன்றி;

அந்தப் பாடல்களுக்குப் பிற்காலத்தில் உரை எழுதிய அவற்றின் பொருளை நமக்கு உணர்த்திய பலருக்கும் (அவர்களின் சிலரின் பெயர்கூட நமக்குத் தெரியாது), மனமார்ந்த நன்றி; அவர் களுடைய துணை இல்லாவிட்டால் பல பாடல்கள் நமக்குப் பொருள் விளங்காப் புதிர்களாகவே இருந்திருக்கும்;

அவர்கள் பின்னர் இடைக் காலத்தில் தோன்றிய அறிவிற் சிறந்த உரையாசிரியர்கள் பலருக்கும் நன்றி: இவர்கள் அப் பாடல் களை இலக்கண நோக்கோடு பார்த்து விளக்கிய போதிலும், அவற்றின் கவிதை நயங்களையும் நமக்குச் சுட்டி வந்தார்கள்; பாடல்களின் சொற்கள் மாறாமல் பிற்காலத்தோருக்குக் கிடைக்கச் செய்த உதவி பெரிது; அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சிற்சில வேளை களில் கருத்து வேற்றுமை உடையவர்களாக இருந்ததும் நமக்கு உதவியே;

நம்முடைய காலத்துக்குச் சற்றே முந்திய அண்மைக் காலத்தில் வாழ்ந்து, காலக் கொடுமையால் அழிந்து கொண்டிருந் தவையாய் உள்ள இந்தச் சிறந்த பாடல் தொகுதியைக் கண்டு பிடித்து, பாதுகாத்து, செப்பனிட்டு நமக்கு அளித்த பெரியோர்கள் அனைவருக்கும் நன்றி; இவர்களுள் சி. வை. தாமோதரம் பிள்ளை,

உ. வே. சாமிநாத ஐயர் (இவர் செய்த உதவி மிக மிகப் பெரிது), மகாவித்துவான் ரா. ராகவையங்கார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், ஆர். ராஜகோபால ஐயங்கார், தி. கனகசுந்தரம் பிள்ளை, வித்துவான் கணேச ஐயர், இவை. அநந்தராம ஐயர், போன்ற பலர், இப் பாடல்களைத் தேடி, ஆராய்ந்து, தொகுத்து, புதிய உரைகளையும் எழுதி உதவினார்கள். சிற்சில வேளைகளில் பழைய உரையாசிரியர்களின் கருத்துக்களை இவர்கள் மறுத்துக் கூறியதும் உண்டு. இதுவும் ஓர் உதவியே, பழைய பாடல்களை இவர்களும் நமக்கு அளித்துப் பேருதவி புரிந்து வந்தார்கள்.

முன்நாளில் ஏட்டுப் பிரதிகளாகவும், கையெழுத்துப் பிரதி களாகவும், அரிதில் பிழைத்துவந்த இந்தப் பாடல்களை அச்சிட்டுப் பலருக்கும் உதவுமாறு பல பிரதிகளை அச்சிட்டு உதவிய திருநெல்வேலி தென்இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகத் துக்கும், அதன் தலைவர் சுப்பையா பிள்ளை அவர்களுக்கும், மர்ரே கம்பெனி தலைவராக இருந்த எஸ். ராஜம் அவர்களுக்கும் நன்றி. இந்த நூலில் அச்சிடப்பட்ட தமிழ்ப் பாடல்கள் ராஜம் அவர்கள் வெளியிட்ட நூல்களிலிருந்து, அவருடைய அனுமதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

ஜி. யு. போப், கே. ஜி. சேஷ ஐயர், ஜே. எம். நல்லாசாமிப் பிள்ளை, ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளை, பாஸ்கர நாராயணன், ஜே. எஸ். செல்லையா, மதுரை ஷண்முகனார், டாக்டர். ஏ. கே. ராமானுஜன், என். ரகுநாத ஐயர் முதலிய பலர் பழந்தமிழ்ப் பாடல்களை மொழி பெயர்த்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த மொழி பெயர்ப்பு முயற்சியில் நான் ஈடுபட்டு வந்த காலங்களில் எனக்குப் பலவகையாகத் துணைசெய்த நண்பர்கள் மிகப் பலர். என் தாய்மொழி அல்லாத மொழியில் நான் முயன்ற போது எனக்கு உதவியவர்கள் பலர், பல முறையில். மதாம் ஸோபெயா வாடியா (இந்தியன் பி.இ என்.), பி. ஜே. செஸ்டர் (ஆக்ஸ்பர்ட் யுனிவெர்ஸிடி ப்ரெஸ்) விலியன் டுட்ஹில் அம்மையார், அருள் திரு. பெனிங், (சி. எல். எஸ்.), பேராசிரியர்கள். கே. சுவாமி நாதன், க. அ. நீலகண்டசாஸ்திரி, அ. சீனிவாசராகவன், எஸ். வையாபுரிப்பிள்ளை, ஜட்ஜ் எஸ். ஜி. சீனிவாசாச்சாரியார் (கொனஷ்டை), என் குடும்பத்தினராக எம். அநந்தநாராயணன்

ஐ.சி.எஸ்., எம். கிருஷ்ணன் (வனவிலங்கு நிபுணர், எழுத்தாளர்) எம். லக்ஷ்மி அம்மாள், எஸ். ஆர். கைவார் ஐ.சி.எஸ்., வி. சுந்தரம் ஐ.ஏ.எஸ்., ஸ்ரீமதி பூச், என். எஸ். ராவ் (ஆஸ்ட்ரியத் தூதரகம்), அவ்வை நடராஜன், முதலிய பலர் எனக்கு அளித்துள்ள உதவி மிக மிகப் பெரிது. அவர்களுக்கு எல்லாம் நன்றி என்று சொன்னால் அது போதிய கைம்மாறு ஆகாது.

கடைசியாக, அடையாற்றில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துக்கும், அதன் தலைவர் டாக்டர். எஸ். வி. சுப்பிர மணியன் அவர்களுக்கும், நிறுவன நூலக நிர்வாகி திருமதி. சிவகாமசுந்தரி, அலுவலக உறுப்பினர்கள் (குறிப்பாக தட்டச்சு எஸ். குணசீலன்) ஆகியோரின் உதவி பெரிது. அவர்கள் அனை வரும் இம் முயற்சியைத் தமிழுக்குச் செய்த பணியாகக் கருதி, சலிப்பின்றி உதவி புரிந்தனர், அவர்களுக்கு நன்றி.

இந்த நூலைப் படிக்கும் வாசகர்கள் திரைபோல் மறைக்கும் என் மொழி பெயர்ப்புக்களின் ஊடாக, தமிழ்ப் பாடல்களின் அழகை உணர்ந்து சுவைப்பார்களானால் அது எனக்கு மிக மிக மகிழ்ச்சி அளிக்கும் அன்புச் செயலாகும்.

பெ. நா. அப்புஸ்வாமி

INTRODUCTION

Almost two thousand years ago, the Tamil people whose home is the extreme south of India had a farily large body of good literature. It was mostly, if not altogether, in verse, as it has been in all ancient countries. Prose was almost non-existent as literature though it must have existed in the speech of the common people.

This ancient literature of the Tamils gives us glimpses into the life they led in those far-off days. From this material we are able to gather that they lived a full life dining and drinking well, enjoying and practising music and dancing, loving greatly, daring much, and often fighting with one another.

The country was then divided into three main 'empires' ruled by the three great and ancient royal houses—Cēra, Cōla, and Pāntiya. There were also large numbers of petty chieftains, who held sway over their retinue of trained fighters, skilled warriors, chariotry, elephantry, and cavalry; and also had accomplished and beautiful singers and dancers, wise ministers and poets and all the rest who go to form a court. There were the rich and the poor, the donor and the supplicant, the learned and the ignorant, the good and the bad, the lovely and the ugly, the heroic and the cowardly; and merchants, agriculturists, artisans, and common men, as in all countries and at all times.

Poetry :

The entire body of poetry that the Tamils had in those days has not come down to us. There are indications which point to their having been bardic in character, and hence transmitted from mouth to ear, improvised and improved upon from time to time, and occasion to occasion; and retained in the memory and handed down and spread by repetition. Writing

does not seem to have been devised or developed, and therefore not used till some centuries later, though there might perhaps have been a minimal, rudimentary script of some fort and of limited scope. The stone inscriptions on the cave beds of the Jain saints who had migrated from the north are some examples of such.

A few centuries after the composition of these verses, anthologies were prepared of selected pieces of poetry.

Scholars sharply differ on some of the opinions expressed here. The conservative conformists (traditionalists) among them assert that the beginnings were much earlier, and rationalist rebels (sceptics) venture to say that they are really much later than is generally believed. It really does not matter, either way if poetry is what we care about.

Anthologies :

These ancient anthologies are nine in number. Eight of these are made up of about 2,420 short or medium short verses of which about 50 have been lost, and the ninth is a compilation of ten long poems. It is certain that there must have been a much larger mass of floating verse out of which these anthologies were selectively chosen. We do not have any clue to the principles which guided their selection or rejection, The verses which the anthologists, omitted and were therefore not included in the anthologies, are lost to us for ever. It is the fate of classics all over the world to be lost; and it is the habit of later generations to bewail the culpable disinterest of their predecessors, and for themselves to be guilty of similar indifference.

Some Particulars :

This book is a cross-section of verses from the nine anthologies, which are listed below in the English alphabetical order of their names, and not chronologically, since their dates are not definitely known, not seem to be knowable

with any certainty; but curiously the first five are 'private' and the next four 'public' in the main.

1. *Ainkurunuru :* Five hundred short verses of 3 to 5 lines long, Said to be by 5 different poets (this statement is doubted by some scholars), totalling about 2180 lines. Some scholars think that this may be the earliest arranged anthology.

2. *Akanānūru* : Four hundred verses of between 13 to 31 lines long, by about 142 poets, totalling roughly 7,200 lines. The invocatory verse is an extra by a later poet.

3. *Kalittokai* : One hundred and fifty verses in a different type of metre, said to be by 5 poets, totalling about 4,300 lines. A strong scholarly opinion states that the whole is the work of a single poet.

4. *Kuruntokai* : Four hundred and one verses of 6 to 8 lines long, by poets, totalling 2,500 lines. The invocatory verse is an extra.

5. *Narrinai* : Four hundred verses of 9 to 12 lines long, by 192 named poets. (the names of the others are missing), totalling about 4,170 lines. The invocatory verse is an extra.

6. *Paripātal* : This originally is said to have had seventy verses, but only twenty whole verses and fragments of some others have survived. There are statedly set to music, and are therefore songs. The foot notes by the anthologist states the names of the poets, and of the musicians who set them to music, and the name of the musical mode and tune. The lines now available total about 2,050. Some scholars think that the verses of this anthology are of later date than the others.

7. *Patirrippattu* : One hundred verses in ten groups of ten devoted to the praise of Cēra (Westland) Kings. It has now only eight of the groups by 8 poets. The lines are between 5 and 57 in length. It totals about 3,180 lines.

8. *Pattuppātu* : Ten long poems of between 103 and 782 lines, by eight poets.

9. *Puranānūru* : Four hundred verses by one hundred and fifty one poets. The lines total about 5,400.

These translation in this book are neither literal, nor yet paraphrases. The attempt has been rather to capture the spirit of the verses understanding the sight face of the words of the poet, and to present them to the non Tamil knowing reader in readable English. Van Doren Editor of (an anthology of World Poetry) says that this should be the aim in translation If the translator has succeded, even to a very limited extent, in achieving this aim and thereby making the reader interested in these ancient verses he will feel more than rewarded.

முன்னுரை

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், இந்திய நாட்டின் தென் கோடியில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே பேரள வுள்ளது எனத் தகும் இலக்கியம் நிலவிவந்தது. அந்த இலக்கியம் எல்லாம் மிகப் பெரும்பாலும் கவிதை வடிவமாகவே இருந்தது. பண்டை நாடுகள் எல்லாவற்றிலும் காணப்படும் நிலையே இது. அந் நாளில் பொதுமக்கள் உரைநடையைப் பேசி வந்திருக்க வேண்டும் என்றாலும், அப்போது உரைநடை இலக்கியம் தோன்ற வில்லை. பண்டைக் காலத்தில் உருப்பெற்றிருந்த அந்த இலக்கியம் அக் காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தார்கள் என்பதை ஓரளவு நமக்குக் காட்டுகிறது. அத்தொகுதியினர் கொண் டிருந்த குறிக்கோள்கள், அவர்கள் விரும்பிய நாட்டங்கள், அவர் களுடைய ஒழுக்கப் பண்புகளைக் கட்டுப்படுத்திய நெறிமுறைகள், அவர்கள் நடந்துவந்த ஒழுகலாறுகள், முதலியவற்றை அந்த இலக்கியம் நேராகவோ, குறிப்பாகவோ, காட்டுகிறது. அவ்வளவு நெடுங்காலத்துக்கு முன்னால், தமிழ் நாட்டில் மக்கள் புரிந்துவந்த வாழ்க்கையின் ஒரு சிறு பகுதியை அது நமக்குத் தெரிவிக்கிறது. அம் மக்கள் பெரும்பாலும் மகிழ்வோடு வாழ்ந்தார்கள்; நன்கு உணவு வகைகளை உண்டு, கள் வகைகளை அருந்தி, இசையைக் கேட்டும், நடனத்தைக் கண்டும், மகிழ்ந்து வந்தார்கள். உளம் கனிய, உடல் மகிழ, ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காதலித்தார்கள்; துணிகரச் செயல்களைச் செய்தார்கள்; அடிக்கடி ஒருவரோடொருவர் போர் புரிந்தார்கள் என்றும்; அந்த இலக்கியத் தொகுதி தெரிவிக்கிறது.

அந் நாளிலே தமிழ் நாடு மூன்று புகழ்பெற்ற பழங்குடியைச் சேர்ந்த அரசுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. சேரர், சோழர், பாண்டியர், என்னும் அரச பரம்பரைகள் அப் பகுதிகளை ஆண்டு வந்தன. அவைகளைத் தவிர, மிகப் பல குறுநில மன்னர்கள், தலைவர்கள், முதலியோரும் அங்கங்கே ஆட்சி செலுத்தி வந்தார் கள். அவர்கள் அனைவரிடமும், போர் வீரர், விறலியர், பாடினி கள், பாணர்கள், அமைச்சர்கள், முதலியவர்களைக் கொண்ட சுற்றுப் பரிவாரங்கள் இருந்தன. அந்நாளில் செல்வர்களும், ஏழை களும், அறிஞர்களும், அறிவிலிகளும், கொடையாளிகளும் பரிசு

களை நாடுவோரும், நல்லவர்களும் தீயவர்களும், அழகுடையவர்களும் அழகற்றவர்களும், எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் காணப்படுவதைப் போலவே, தமிழ்நாட்டில் காணப்பட்டார்கள்.

கவிதை இலக்கியம்

அக் காலத்தில் தமிழ் மக்கள் படைத்துள்ள தமிழ்க் கவிதை இலக்கியம் முழுவதும் நமக்கு வந்து சேரவில்லை. அந்த இலக்கியம் பெரும்பாலும் முழுதுமே புலவர்கள் பாடிய பாடல்களாக,—அதாவது, சிலர் பாட, பலர் கேட்க, அமைந்தவையாக—இருந்து வந்தன. ஒரே பாடல், ஓரிடத்தில் முதலில் பாடப்பட்டிருப்பினும், அதை அதே புலவர் மற்றோர் இடத்தில் பாடும் போது, அப் பாடல்களோடு சில சொற்களையும் கருத்துக்களையும் கூட்டியோ குறைத்தோ பாடி வந்திருக்க வேண்டும். சிறந்த நினைவுத்திறனே அவர்களின் எழுது கோல்; நாவன்மையே அவற்றின் நூலகம். ஆதலால், மீண்டும் மீண்டும் பாடப்பட்டு வந்தமையால், அந்தப் பாடல்களின் உருவம், சற்றே மாறினும், பெரும்பான்மையும் மாறாமல் இருந்து வந்தது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அக் காலத்தில் தமிழ் நாட்டில் ஒலிகள் வரிவடிவம் பெறவில்லை என்று கருதப்படுகிறது. சற்றே பிற்காலத்தில்தான் தமிழ் நாட்டில் ஒலிகள் வரிவடிவம் பெற்றன; எழுத்துக்கள் வழங்கப்பட்டன என்கிறார்கள். சிற்சில குறிப்பான, ஆயினும் மிகக் குறைவான, பாடல்களை எழுதுவதற்குப் போதியவை அல்லா, வரிவடிவங்கள் இருந்திருக்கலாமோ என்பது ஓர் ஐயம். அவையும் அப்பாடல்கள் பாடத் தொடங்கப் பட்ட காலத்திற்குச் சற்றே பின்னும், அவை தொகுக்கப்பட்ட காலத்துக்குச் சற்றே முன்னும் இருக்கலாமோ என்பது ஓர் ஊகம்.

அந்தப் பாடல்கள் பாடப்பட்டு வழங்கிவந்த காலத்துக்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்பு, அவை தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டன. அப் பாடல்களைத் தேர்ந்தெடுத்த காரணம், முறை, முதலிய விவரங்களில் ஒன்றும் நமக்குத் தெளிவாகத் தெரிய இடம் இல்லை. இந்தக் கருத்துக்கள் எல்லாம் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒன்றுபோல ஒப்புக் கொண்ட கருத்துக்கள் அல்ல. அவர்களிடையே கருத்து வேற்றுமைகள் பல உள்ளன. அவை மிகக் கடுமையாகவும் கூறப்பட்டுவருவன. பழமை மனம் படைத்தோர்—பரம்பரையாக வந்த செய்திகளை

நம்பி— இந்தப் பாடல்கள் மிகமிகப் பழங்காலத்திலேயே அமைக்கப் பட்டவை என்கிறார்கள். பழமையில் ஐயம் கொண்டு, சான்று கள் அளிக்கும் எல்லைகளைக் கடந்து கூறலாகாது, பகுத்தறிவில் வேரூன்றிய ஆராய்ச்சி முடிவுகளையே பின்பற்ற வேண்டும், என்று கூறுபவர்களில் சிலர் அப்பாடல்கள் இப்போது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் காலத்துக்கும் சற்றுப் பின்னதாகவே படைக்கப் பட்டிருக்க வேண்டும் என்று வாதாடுகிறார்கள்.

தொகை நூல்கள்

தொகை நூல்கள் என்பவை மொத்தம் ஒன்பது. அவற்றில் எட்டு சற்றே குறைவான அடிகளைக் கொண்ட பாடல்களாலும், அவற்றுக்குச் சற்றே மிகுந்த அடிகளைக் கொண்ட பாடல்களாலும் அமைந்தவை. ஒன்பதாவது தொகை நூல் பத்து நீண்ட பாடல் களின் தொகுதி. இந்தத் தொகை நூல்கள் ஏன் தொகுக்கப் பட்டன என்பதையேனும், பாடல் வடிவமாக அமைந்த எத்தகை, எத்தனை, பாடல்களிலிருந்து அவை தொகுக்கப்பட்டன என்பதை யேனும், அவை தொகுக்கப்பட்ட முறையின் விவரங்களையேனும், நாம் இப்போது தெரிந்துகொள்ள வழி இல்லை. ஆயினும், அக் காலத்தில் உருவாகி வழங்கி வந்த பெருந்தொகுதி ஒன்றிலிருந்தே அவை தேர்ந்தெடுக்கப்பட்டு அமைந்திருக்க வேண்டும் என்பது உறுதி. ஆயினும், மேலே சுட்டியபடி, என்ன தேர்வுக் கோட்பாடு களை அவர்கள் கையாண்டார்கள்; எவை, எவ்வளவு, எத்தனை, அவர்களுடைய தொகை நூல்களில் சேர்க்கப்படாமல் விடப் பட்டன என்பவைகளைப் பற்றியும், நமக்குத் தெரிய வழி இல்லை. போனவை போனவையே. உலகின் பல நாடுகளிலும் மொழி களிலும், இத்தகைய பண்டை நூல்களின் இழப்பு நேர்ந்திருக் கிறது. பண்டை இலக்கியங்களின் இயல்புகளில் இதுவும் ஒன்று. காலம், பூச்சி, முதலியவற்றின் கொடுமையாலும், மக்களின் கருத் தின்மையாலும் இவ்வகை நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. முற் காலத்தோர் தமது கருத்தின்மையால் அவ்வாறு இழந்துவிட்டார் கள் என்று நம்முடைய முற்காலத்தோரைக் குறை கூறியும், நாமும் இக்காலத்தில் அவ்வாறே கருத்தின்றி நடந்து வருவதுமே உலக இயல்பு.

பழங்காலத் தமிழ் நூல்களின் பாடல்கள் சிலவற்றையும் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் – ஆங்கில அகர வரிசை யில் அமைக்கப்பட்டுள்ளது இந்த நூல். பாடல்களின் கால வரிசை நமக்கு உறுதியாகத் தெரியாத படியால், அகர வரிசையை மேற் கொள்ள வேண்டியதாயிற்று.

1. ஐங்குறு நூறு (ஐந்நூறு குறிய பாடல்களின் தொகுதி) இதில் எல்லாமே இசைப் பாடல்கள். இத் தொகை நூலில் அடங்கிய பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையையும் ஐந்தடிப் பேரெல்லையையும் உடையவை. 129, 130, என்னும் இலக்கமிடப்பட வேண்டிய செய்யுட்கள் மறைந்து போயின. 416, 490 என்று இலக்கமிடப்பட்ட பாடல்களில் சில அடிகள் காணப்படவில்லை. சிற்சில ஏடுகளில் வேறு சில பாடல்கள் மிகையாகச் சேர்க்கப் பட்டுள்ளன. ஐந்து புலவர்கள், ஆளுக்கு நூறு நூறு பாட்டுக் களாக, இந்தப் பாடல்களைப் பாடினார்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் ஏறத்தாழ 2,180 அடிகள் உள்ளன. தொகை நூல்களில் முதன்முதலாகத் தொகுக்கப்பட்ட நூல் இதுவே என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறினும்; வேறு பலர் இந்தக் கருத்தை மறுக்கிறார்கள்,

2. அக நானூறு (நானூறு அகப் பாடல்களின் தொகுதி) இதுவும் இசையோடு பாடப்பட்ட பாடல் தொகுதியே. இதன் பாடல்கள் பதின்மூன்று அடிச் சிற்றெல்லையையும் முப்பத்தோரு அடிப் பேரெல்லையையும் உடையவை. இதன் நானூறு பாடல் களுக்கு முன், வாழ்த்துப் பாடல் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலைப் பாடியவர் பெருந்தேவனார் என்னும் புலவர். இதில் மூன்று பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் இக் காலத்தில் நமக்கு கிடைத்துள்ள ஏடுகளில் குறிப்பிடப்படவில்லை. தொகுக்கப்பட்ட பாடல்கள் தொகை நூலில் பொருத்தப்பட்டுள்ள வகையும் சற்றே விசித்திரமானது. இப்பாடல்கள் திணைப் பாகு பாட்டின் படி தொகுக்கப்பட்டுள்ளன. மூன்று புலவர்களின் பெயர்களைத் தொகுப்பாசிரியர் குறிப்பிடவில்லை. மற்றப் புலவர்களின் எண் நூற்று நாற்பத்து இரண்டு. இதில் உள்ள அடி களின் மொத்த எண் ஏறத்தாழ 7200.

3. கலித்தொகை (கலிப்பா என்னும் வகையில் அமைந்ததும் கடவுள் வாழ்த்துப் பாடல் உட்பட நூற்றைம்பது பாடல்களை உடையதுமான தொகை நூல்). இதில் அடங்கிய அனைத்தும் சிதைவுபடாமல் கிடைத்துள்ளன. அவையும் திணைப்படி பகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. ஐந்து திணைப் பாடல்களையும் திணைக்கு ஒரு புலவர் வீதம் ஐந்து புலவர்கள் பாடியதாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. ஆன போதிலும், இக் கால ஆராய்ச்சியாளர்களில் பலர் (பாடல்களின் சொல் வழக்கு, நடை, முதலியவற்றைக் கொண்டு) அவை ஐந்தும் ஒரே புலவரால் பாடப்பட்டவை என்று கருதுகின்ற னர். இந் நூலில் அடங்கிய அடிகள் 4,300க்குச் சற்றே மேற்பட் டவை.

4. குறுந்தொகை (குறிய பாடல்களின் தொகுதி). இதில் கடவுள் வாழ்த்தும், அதை அடுத்து 401 பாடல்களும், அடங்கியுள்ளன. பாடல்கள் ஆறடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடையவை. புலவர்களின் எண் நானூற்று ஐந்து. அடிகளின் மொத்த எண் 2,800க்குச் சற்றே மேற்பட்டது.

5. நற்றிணை (நல்ல தொகுப்பு) — இதுவும் நானூறு பாடல்கள் அடங்கிய தொகை நூல். இதில் உள்ள பாடல்கள் ஒன்பது அடிச் சிற்றெல்லையையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையையும் உடையவை. இவை மொத்தம் ஏறத்தாழ 4,170 அடிகளை உடையவை. 234 ஆம் பாடலும், 385 ஆம் பாடலின் பின் பகுதியும் அழிந்து போயின. ஐம்பத்தாறு பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. மற்றப் புலவர்களின் எண் நூற்றுத் தொண்ணூற்று இரண்டு அடிக் குறிப்புக்களில் பாடல்களைப் பற்றிய திணை முதலிய விவரங்கள் கொடுக்கப்படவில்லை. கடவுள் வாழ்த்து மேற்கூறிய நானூறுக்குள் வைத்து எண்ணப்படவில்லை.

இந்த ஐந்து தொகை நூல்களும் அகப்பொருள் (காமம்) துறைகளையே அடிப்படையாகக் கொண்டவை. இதை டாக்டர் ஏ. கே. இராமானுசன் உட்புற (நிலக்) காட்சி எனக் குறிப்பிடுகிறார். பழங்கால இலக்கண ஆசிரியரும், இடைக்கால உரையாசிரியர்களும் அவற்றை அகப்பாடல்கள் என்றே கூறுகிறார்கள். ஆக்ஸ்ஃபர்ட் பல்கலைக் கழக அச்சக நிறுவனம் வெளியிட்ட ஆங்கிலப் பாடல்களின் தொகுப்பாசிரியை ஹெலன் கார்ட்னர் ஆங்கிலப் பாடல்களையும் இல்வாழ்க்கைப் பாடல்கள் என்றும் சமுதாய நிகழ்ச்சிப் பாடல்கள் என்றும் வகுத்துக் கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. எல்லாப் பாடல்களுமே பொதுவாக ஓரளவு நன்றாகவே உள்ளன. அவற்றுள் சில சுவைமிக்க பாடல்கள். அவை எல்லாம் ஒரே தரமானவை அல்ல. அவை தொகுக்கப்பட்ட காலச் சூழ்நிலை பின்னணி முதலியவையும், தொகுப்பாசிரியரின் கவிதைப் பண்பின் உணர்ச்சியும், வேறுபடக் கூடுமாதலால் இவ்வாறு இருப்பதே இயற்கை. அக்காலத்துச் சமூகச் சூழ்நிலையும், மக்கள் கொண்டிருந்த கருத்துக்களும், அவருடைய தேர்தல் திறனுக்குத் துணை செய்திருக்கும்.

6. பத்துப் பாட்டு (நீளமான பத்துப் பாட்டுக்களின் தொகுப்பு) நூற்று மூன்று அடிச் சிற்றெல்லையும் எழுநூற்று எண்பது அடிப்

பேரெல்லையும் உடைய பத்து நெடிய பாடல்களின் தொகுப்பு. இவற்றைப் பாடியவர் எட்டுப் புலவர்கள். இந்தப் பாடல்கள் அகத் துறை, புறத் துறை, என்னும் பாகுபாடுகளுள் முற்றும் அமையவில்லை. இப்பாடல்களில் அடங்கிய அடிகளின் எண் ஏறத்தாழ 3,150.

7. பதிற்றுப்பத்து (பத்துப் பத்துக்கள்). ஐந்து அடிச் சிற்றெல் லையையும் ஐம்பத்தேழு அடிப் பேரெல்லையையும் அவை கொண் டிருக்கக் காண்கிறோம். பத்துப் பத்தில் எட்டுப் பத்துக்களே இப்போது உள்ளன. மற்றவை இரண்டும் அழிந்து போயின. ஒவ்வொரு பத்தும் புலவர் ஒவ்வொருவரால் பாடப்பட்டது. தொகுதி முழுவதும் சேர நாட்டு மன்னர்களின் புகழ்ச் சிறப்பையே பாடுகிறது. ஒவ்வொரு பாடலுக்கும் அதில் காணப்படும் சிறந்த சொல் தொடர் ஒன்றால் பெயர் இடப்பட்டிருக்கிறது. இப் பாடல்களில் கவிதைச் சிறப்பைக் காட்டிலும் வரலாற்றுச் செய்தி களைக் கூறும் தன்மையே உயர்ந்தது. ஆயினும் இவற்றின் கவிதைத் தரம் கீழ்த்தரமானதே அன்று.

8. பரி பாடல் (தனிப்பட்ட பாடல் வகைப் பாடல்கள்) இந்தத் தொகை நூல் எழுபது பாடல்களை உடையதாக இருந்தது. ஆனால் இப்போது இது இருபத்து இரண்டு பாடல் களை முழுதாகவும், வேறு சில பாடல்களின் சிறு சிறு பகுதிகளை உடையதாகவுமே காணப்படுகிறது. இந்தப் பாடல்கள் இசை யோடு பாடுவதற்கென்று அமைக்கப்பட்டவை. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடிய புலவர் யார், அதற்கு இசை வகுத் தவர் யார், அது பாடப்பட வேண்டிய பண் யாது, என்பவை கொடுக்கப்பட்டுள்ளன. பதின்மூன்றாம் பாடலிலும் இருபத்து இரண்டாம் பாடலிலும் இந்த அடிக்குறிப்பு இப்போது காணப்பட வில்லை. பரிபாடல் என்னும் பாடல் வகை முப்பத்தைந்து அடி களுக்குக் குறையாமலும், நானூறு அடிகளுக்கு மேற்படாமலும், இருக்க வேண்டும் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுகிறார்கள் மற்றத் தொகை நூல்களில் உள்ள பாடல்கள் பாடப்பட்ட காலத்துக்குச் சற்றுப் பின்பே இப் பாடல் வகை உருவாயிருக்க வேண்டும் என்பது இக்கால ஆய்வாளர்கள் சிலரின் கருத்து. இந்தக் கருத்தையும் சிலர் மறுக்கிறார்கள். இந்தத் தொகை நூலில் இப்போது அடங்கிய பாடல்களின் மொத்த அடிகளின் எண் 2,050 க்குச் சற்றே மேற்பட்டது.

9. புறநானூறு (நானூறு புறப்பாடல்கள் இதில் உள்ள சமுதாய நிகழ்ச்சிப் பாடல்கள்) கடவுள் வாழ்த்து உட்பட நானூறு பாடல்கள் இதில் அடங்கியிருந்தன. இதில் அடங்கிய பாடல் களைப் பாடிய புலவர்களின் எண் நூற்று ஐம்பத்து ஆறு. இதில் இரண்டு பாடல்கள் அடியோடு அழிந்து போயின. இந்தத் தொகுதி யின் பின் பகுதியில் சில அடிகள் காணப்படவில்லை. வேறு சில செப்பனிடவோ ஈடு செய்யவோ முடியாதபடி சிதைந்து போயுள்ளன. இதில் அடங்கிய அடிகளின் மொத்த எண் ஏறத்தாழ 5,460. இந்தத் தொகை நூலின் முன் பகுதியில் காணும் பாடல்களுக்கும் பின்பகுதியில் உள்ள பாடல்களுக்கும் இடையே ஒரு வகையான வேற்றுமை காணப்படுகிறது. முன்பகுதிப் பாடல் கள் பெரும்பாலும் அரசர்கள், குறுநிலமன்னர்கள் முதலீயோரைப் புகழ்ந்து பாடுபவையாக உள்ளன. பிற்பகுதிப் பாடல்கள் பொதுத் தன்மையுள்ளவையாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன. பாடல் களுள் காணப்படும் சொல் அமைதி ஏறத்தாழ ஒன்று போலவே காண்கிறது. ஆயினும் துறைகளின் வேற்றுமையால் இது பல தரம் உள்ளதாகக் காண்கிறது. இது ஒரு குறை அன்று, ஆயினும் கவனத்திற்கு உரியது.

CONTENTS

Section II : *Akanānūru*

Section III : *Kalittokai*

Section IV : *Kuruntokai*

பொருள் அடக்கம்

பகுதி-I : ஐங்குறுநூறு

பகுதி-II : அகநானூறு

பகுதி-III : கலித்தொகை

பகுதி-IV : குறுந்தொகை

பகுதி-VIII பத்துப் பாட்டு

பகுதி IX : புறநானூறு

THE TECHNICAL BACKGROUND

In all countries 'prescriptive grammarians' have tried to rule the roost, but as Growers says 'prescriptive grammar is not now in favour outside the school room'. Poets in every age have to follow rules of grammar in order to be understood. They accept grammarians as signposts, and road-signs and not as highways or laid railway tracks. But in Tamil a prescriptive grammarian of extraordinary skill and range has dominated every aspect of poetry, its sentiment-vocabulary, and expression. But poets are free, and they make grammar, by sidestepping the grammarian. Whatever the poets may have done or not, the anthologists accept the grammarian's rules. Hence have follows a short explanation of the background—landscape, levels of meaning, themes etc—so that the modern reader may know what the autho-logists, and later expositors thought.

SCENES AND LANDSCAPES

Each scene indicates a type of landscape each with its fauna, flora, gods, moods, and themes.

1, *Mullai :*

Forests and neighbourhoods.
Named after the jasmine flower.
Presiding deity-Vishnu (Māyōn) one of the trinity.
Theme—Patient waiting for the beloved.

2. *Kurinci :*

Mountains and highlands.
Named for a flower blossoming once in twelve years.
Presiding deity—Muruka, Son of God Siva of the Trinity.
Theme—Lovers' union

3. *Marutam* :

Agricultural and pastoral region.
Named for a tree with red flowers.
Presiding deity—Indra (Ventan).
Theme—Heroine's sulks due to unfaithfulness of lover.

4. *Neytal* :

Seashore and neighbourhood.
Named for the waterlily (white, blue, or red).
Presiding deity—Varuna (Sea-god).
Theme—Anxiety, anguish of separation.

5. *Pālai* :

Wasteland, scorched bare by the sun.
Named for a tree which live even in that heat.
Presiding deity—Durga (Goddess Kāli).
Theme—Elopement—Parting from lover and parents.

The anthologists have indicated these in most cases medieval and later commentators have sometimes differed. They have also differed sometimes about the 'character' who speaks.

பின்னணி

இலக்கியம் கண்டதற்கு இலக்கியம் கூறுவதே முறை ஆயினும் எல்லா நாடுகளிலுமே இலக்கியத்தைக் கட்டுப்படுத்தி ஆண்டுவர இலக்கண ஆசிரியர்கள் முயன்று, விதிகளை வகுத்து வந்திருக் கிறார்கள். அவர்கள் இட்ட இலக்கண எல்லைகளைப் பள்ளி வகுப்பறைகளில் ஆசிரியர்கள் வற்புறுத்துகிறார்களே அன்றி, இலக்கியத் துறையில் அவற்றுக்கு அத்துணைச் செல்வாக்கு இல்லை. பழங்காலம் முதல் இக் காலம் வரை, சிறந்த கவிகள் ஓரளவு இலக்கண விதிகளின் வரையறைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்த போதிலும் — அவ்விதிகள் இல்லாவிட்டால் ஒருவர் சொல்வதை மற்றொருவர் புரிந்து கொள்ள முடியாது—அவற்றின் அடிமைகளாக வாழ்வதில்லை. அவர்களைக் கைகாட்டி மரங் களாகவோ, பாதைப் பக்கத்து எச்சரிக்கைக் குறிகளாகவோ கருது கிறார்களே அன்றி, நெடுஞ்சாலைகளாகவோ விலகாமல் செல்ல வேண்டிய இரயில் பாதைகளாகவோ கருதுவதில்லை. ஆனால் தமிழ் நாட்டில் வாழ்ந்தவரும் பெரும் புலமையுடையவரும் அற்புதத் திறமை வாய்ந்தவருமான இலக்கண ஆசிரியர் ஒருவர் கவிதையின் ஒவ்வொரு பகுதியின் மீதும் தம்முடைய செல்வாக்கைச் செலுத்தி, சொல், அமைதி, கருத்து, திணை, துறை, முதலிய வற்றைக் கட்டுப்படுத்தியிருக்கிறார். ஆயினும் கவிகள் எவ்வகைக் கட்டுக்களுக்கும் அடங்காதவர்கள், அவ்வகை வரம்புகளை மீறி தங்களுடைய கவிதை மனம் செல்லும் வழியில் செல்பவர்கள். ஆயினும் அத்தகையவர்கள் மிகப் பழங்காலத்தில் பாடிய பாடல் களைத் திரட்டித் தொகுத்தவர்கள், இலக்கண ஆசிரியர் வகுத்த நெறியிலேயே சென்றிருக்கிறார்கள். பிற்கால உரையாசிரியர்களும் அவ்வாறே. ஆதலால் திணை துறை முதலியவை இப் பாடல் களுக்கு நேர்முகமான பொருள்கூறத் தேவையற்றன என்றாலும், பழங்காலத்தோர் அப் பாடல்களை அத்தகைய நோக்கோடு கண்டு வந்தார்கள் என்பதை இக்கால வாசகர்கள் தெரிந்து கொள்வது நன்று. ஆகவே, திணை, துறைகளைப் பற்றி ஒரு சிறிது இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

நிலம், திணை, துறை, முதலியவை

இலக்கண ஆசிரியர்கள் நிலங்களை ஐவகையாகப் பகுத்து, அவற்றின் தனித் தன்மைகள், அவற்றுக்குப் பெயர் அளித்த பூ, அவற்றுக்கு உரிய தெய்வம், மரம், செடி, கொடி, பறவை விலங்கு வகைகள், அவற்றுக்கு உரிய நிகழ்ச்சிகள், முதலியவற்றைத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

1. **முல்லை :**

   காடும் காடுசார்ந்த இடங்களும்
   பெயர் பெற்றது—முல்லைப் பூவால்
   ஆளும் தெய்வம்—திருமால் (மாயோன்)
   துறை—காதலனைப் பிரிந்து பொறுமையோடு இருத்தல்.

2. **குறிஞ்சி :**

   மலையும் மலைசார்ந்த இடங்களும்
   பெயர் பெற்றது—பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் பூவால்
   ஆளும் தெய்வம்—முருகன் (செவ்வேள்)
   துறை—காதலர் மகிழ்ந்திருத்தல்.

3. **மருதம் :**

   வயலும் வயல் சூழ்ந்த இடங்களும்
   பெயர் பெற்றது—மருத மரத்தால் (பூ மருது)
   ஆளும் தெய்வம்—இந்திரன் (வேந்தன்)
   துறை—ஊடியும் கூடியும் நிகழும் காதல் ஒழுக்கம்.

4. **நெய்தல் :**

   கடலும் கடல்சார்ந்த இடங்களும்
   பெயர் பெற்றது—நெய்தற் பூ (வெள்ளாம்பல், கருங்குவளை, செங்கழுநீர்)
   ஆளும் தெய்வம்—வருணன் (கடற் றெய்வம்)
   துறை—கவலை, தனிமை, ஏக்கம்.

5. **பாலை :**

   வேனிலின் வெம்மையால் வறண்ட நிலம்
   பெயர் பெற்றது—அதன் வெம்மையிலும் தழைத்துநிற்கும் மரவகை
   ஆளும் தெய்வம்—துர்க்கை (காளி)
   துறை—காதலற் பிரிவு

இப் பாகுபாடுகளையும் இவற்றுக்கு உரியவையாகக் கூறப்படும் பலவற்றையும் தொகுப்பாசிரியர்கள் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பாடலுக்கும் (விட்டுப் போனவற்றைத் தவிர) தங்கள் அடிக் குறிப்புக்களை எழுதியிருக்கிறார்கள். பிற்கால உரையாசிரியர்களில் சிலர், சிற்சில வேளைகளில் தங்கள் கருத்து வேற்றுமைகளைச் சுட்டியதும் உண்டு.

POETIC CHARACTERS

She—Heroine in love with the hero.

Her Friend—The heroine's friend, and her nanny's daughter, who often identifies herself with the heroine.

Foster-Mother—Heroine's nanny, and the mother of her friend, who regards the heroine as her own daughter.

Concubine—A harlot loved by the hero, who sometimes visits her in her home, and sometimes lives as part of the hero's household—the third side of a triangle.

Others—Neighbours, fellow-travellers and the public.

Hero—The heroine's beloved, who deeply loves the heroine, yet strays sometimes.

Bard—A musically accomplished friend of the hero, sometimes used as a peacemaker.

Charioteer—The driver of the hero's horse-drawn chariot, an outlet for the hero's thought.

Poet—The author of the verse; Some have their own proper names, and some are indicated by pseudonyms. Some poems are wholly anonymous.

கவிதை உறுப்பினர்கள்

தலைவி : தலைவன் மீது காதல் கொண்டவள்.

தோழி : தலைவியின் தோழி. தலைவியும் தானும் ஈருடலும் ஒருயிரும் என்றே கருதுபவள். செவிலியின் மகள்.

செவிலி : தோழியின் தாய். தலைவியைத் தாயினும் மிக்க அன்போடு வளர்த்தும், பாதுகாத்தும், வருபவள்.

பரத்தை : தலைவனது காமக்கிழத்தி. தன் வீட்டில் வாழ்பவள். சிலகால் தலைவனது வீட்டிலேயே வாழ்ந்து, இற்பரத்தை என்றும், காதற் பரத்தை என்றும், கூறப்படுபவள்.

உழையர் : அயலில் வாழ்வோர். பாலையில் தலைவன் தலைவி களைக் காண்போர்.

தலைவன் : தலைவியின் காதலுக்கு உரியவன். அவளை நன்கு காதலிப்பவன். ஆயினும் சிலபோதுகளில் கடமை கள் மீது காமவசப்பட்டு நடப்பவன்.

பாணன் : இசையில் வல்லவன். தலைவனின் தூதனாகச் சில போதுகளில் பயன்படுத்தப்படுபவன்.

புலவன் : பாடலை அமைத்த கவி. சங்கப் பாடல்களைப் படைத்த புலவர்களில் சிலரின் இயற்பெயர் தொகுப் பாசிரியரால் கொடுக்கப்பட்டுள்ளது. சிலரின் இயற் பெயர் தெரியாத காரணத்தால், சில பாடல்களின் அடிக்குறிப்பில் புனைபெயர்கள் கொடுக்கப்பட் டுள்ளன. சில பாடல்களில் அவையும் கொடுக்கப்பட வில்லை.

Tamil Verse in Translation

1

AINKURUNURU

ஐங்குறுநூறு

1 நெல் பல பொலிக

'வாழி ஆதன்! வாழி அவினி!
நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'நனைய காஞ்சிச் சினைய சிறு மீன்
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—1 ஓரம்போகியார்

ஆதன்—ஒரு குறுநில மன்னன். அவினி—ஆதனது (சேர) குடியில் பிறந்தோன். வேட்டோள்—விரும்பினாள். நனைய—அரும்பை உடைய. காஞ்சி—ஆற்றுப் பூவரசு. சினை—சூல். பாணன்—பாடல் வல்ல சாதியினன். யாணர்—புதிய வருவாய். வேட்டேம்—விரும்பினோம்.

2 விளைக வயலே

'வாழி ஆதன்! வாழி அவினி!
விளைக வயலே! வருக இரவலர்!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'பல் இதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண் துறை ஊரன் கேண்மை
வழிவழிச் சிறக்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—2 ஓரம்போகியார்

கேண்மை—நட்பு. தண்—குளிர்ந்த. வழிவழி—பிறப்புத் தோறும்.

1 *MAY CORN INCREASE*

'Long live Atan!
Long live Avini!
May corn increase
And gold abound!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'Long may he live,
He, the lord of the land
Rich with blooming portia buds,
And waters teeming with little fish!
His favourite bard too,
Long may he live!'

HER FRIEND Ainkurunuru—1 ORAMPOKIYAR

2 *MAY EARTH IN ABUNDANCE YIELD*

'Long live Atan!
Long live Avini!
May earth in abundance yield,
And charity never diminish!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May her great love grow
For ever and for ever
With the lord of the land
Where cool fountains lie,
And white water-lilies peep
Among the petalled blue-lilies!'

HER FRIEND Ainkurunuru—2 ORAMPOKIYAR

3 **பால் பல ஊறுக**

'வாழி ஆதன்! வாழி அவினி!
பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக் கஞல் ஊரன் தன் மனை
வாழ்க்கை பொலிக!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—3 ஓரம்போகியார்

பகடு—எருமை. வித்திய—விதைத்து (விளைந்து) முதிர்ந்த.
கஞல்—நிறைந்த. பொலிக—விளங்குக; சிறக்க.

4 **பகைவர் புல் ஆர்க**

'வாழி ஆதன்! வாழி அவினி!
பகைவர் புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'பூத்த கரும்பின், காய்த்த நெல்லின்,
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—4 ஓரம்போகியார்

புல் ஆர்க—புல்லை உண்க; புல்லரிசிச் சோற்றை உண்க.
கழனி—வயல். பழனம்—ஊரவர்க்குப் பொது உடைமை
யாகிய நிலம்.

3 *MAY MILK FLOW IN PLENTY*

'Long live Atan!
Long live Avini!
May milk flow in plenty,
And herds of oxen thrive!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May every happiness crown
Her sweet domestic life
With the lord of the land
Where clustering flowers throng
And tilling ploughmen homeward wend
With the gathered paddy-corn!'

HER FRIEND Ainkurunuru—3 ORAMPOKIYAR

4 *MAY HIS FOEMEN BITE THE GRASS*

'Long live Atan!
Long live Avini!
May his foemen bite the grass;
And sacred Brahmins chant holy hymns!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May his dear embrace be not shared
By other women, —
His, who is the lord of the land
Upon whose watered fields
Sweet sugar-cane blossoms well
And paddy-corn ripens rich!'

HER FRIEND Ainkurunuru—4 ORAMPOKIYAR

5 பசி இல்லாகுக

'வாழி ஆதன்! வாழி அவினி!
பசி இல்லாகுக! பிணி சேண் நீங்குக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'முதலைப் போத்து முழு மீன் ஆரும்
தண் துறை ஊரன் தேர் எம்
முன்கடை நிற்க' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—5 ஓரம்போகியார்

சேண்—நெடுந்தூரம். போத்து—இளைய(முதலை).
ஆரும்—உண்ணும். கடை—மனை முற்றம்.

6 வேந்து பகை தணிக

'வாழி ஆதன்! வாழி அவினி!
வேந்து பகை தணிக! யாண்டு பல நந்துக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'மலர்ந்த பொய்கை, முகைந்த தாமரைத்
தண் துறை ஊரன் வரைக!
எந்தையும் கொடுக்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—6 ஓரம்போகியார்

நந்துக—சிறந்து வாழ்க. மலர்ந்த—அகன்ற. முகைந்த—
முகைகளைக் கொண்ட. எந்தை—எங்கள் தந்தை.

5 *MAY HUNGER BANISHED BE*

'Long live Atan!
Long live Avini!
May hunger be banished for ever,
And disease expelled far away!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May he stop his car
In front of our door,
He, the lord of the land
Where cool fountains lie,
And huge crocodiles
Swallow fish entire!'

HER FRIEND Ainkurunuru—5 ORAMPOKIYAR

6 *MAY THE KING SUBDUE HIS FOES*

'Long live Atan!
Long live Avini!
May the king subdue his foes,
And may he flourish for ever!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May she be wedded soon!
And her father espouse her
To the lord of the land
Where cool fountains display
Their lovely lyrical hues,
And lotus flowers bloom
On the wide expanses
Of shimmering pools!'

HER FRIEND Ainkurunuru—6 ORAMPOKIYAR

7 அறம் நனி சிறக்க

'வாழி ஆதன்! வாழி அவினி!
அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'உளைப் பூ மருதத்துக் கிளைக் குருகு இருக்கும்
தண் துறை ஊரன் தன் ஊர்க்
கொண்டனன் செல்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—7 ஓரம்போகியார்

நனி—நன்றாக. அல்லது—நல்லது அல்லாதது. கெடுக—இல்லாது ஒழிக. குருகு—பறவைப் பொது: (இங்கு) கிளி. உளைப் பூ—மேலே துய்யை உடைய பூ.

8 அரசு முறை செய்க

'வாழி ஆதன்! வாழி அவினி!
அரசு முறை செய்க! களவு இல்லாகுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'அலங்கு சினை மாஅத்து அணி மயில் இருக்கும்
பூக் கஞல் ஊரன் சூள் இவண்
வாய்ப்பதாக!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—8 ஓரம்போகியார்

களவு—திருட்டு (முதலிய குற்றங்கள்). அலங்கு—அசைகின்ற. சினை—தளிர்கள். மாஅத்து—மாமரத்தில். தனி—தனிப்பட்ட அழகையுடைய. சூள்—சூளுறவு. வாய்ப்பதாக—பொய்யாகாது நிகழ்வதாக.

7 *MAY VIRTUE BE VICTORIOUS*

'Long live Atan!
Long live Avini!
May virtue be victorious,
And vice be overthrown!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May he take her home
To his fair city,
He, the lord of the land
Of many a cool and lovely fountain,
And where flocks of herons perch
On boughs of mardah trees,
Whose crested flowers wave
Like prancing horses' plumes!'

HER FRIEND Ainkurunuru—7 ORAMPOKIYAR

8 *MAY THE KING EVER IMPARTIAL BE*

'Long live Atan!
Long live Avini!
May the king ever impartial be,
And all fraud be wiped out!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May he ever prove true
To the troth he plighted here,
He, the lord of the land,
Where clustering flowers throng,
And handsome peacocks perch
On waving mango boughs!'

HER FRIEND Ainkurunuru—8 ORAMPOKIYAR

9 நன்று பெரிது சிறக்க

'வாழி ஆதன்! வாழி அவினி!
நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'கயல் ஆர் நாரை போர்வில் சேக்கும்
தண் துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—9 ஓரம்போகியார்

கயல்ஆர்—கயல் மீனை உண்ணும். போர்வில்—நெற்போரின் (குவியலின்) கண். அம்பல்—பொதுமக்கள் பேசும் பழிச்சொல்

10 மாரி வாய்க்க

'வாழி ஆதன்! வாழி அவினி!
மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க!'
என வேட்டோளே, யாயே: யாமே,
'பூத்த மாஅத்து, புலால்அம் சிறுமீன்,
தண் துறை ஊரன் தன்னோடு
கொண்டனன் செல்க!' என வேட்டேமே.

தோழி ஐங்குறுநூறு—10 ஓரம்போகியார்

வளம்—செழிப்பு. புலால்—புலாலின் நாற்றம் வீசும்.

9 *MAY GOOD TRIUMPH*

'Long live Atan!
Long live Avini!
May good triumph!
And evil perish!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'Let there be no evil talk
About her dear friendship
With the lord of the land,
Of many a cool fountain,
Where storks prey on fish
And roost on mounded grain!'

HER FRIEND Ainkurunuru—9 ORAMPOKIYAR

10 *MAY SHOWERS OF RAIN POUR*

'Long live Atan!
Long live Avini!
May showers of rain pour,
And fields flourish evermore!'
Thus wished she,
Our noble lady:
But we wished,
'May he take her to his home,
He, the lord of the land
Where mango flowers bloom,
And dainty little fish
Are dried for daily food!'

HER FRIEND Ainkurunuru—10 ORAMPOKIYAR

11 தண்துறை ஊரன் பெண்டிர்

பரியுடை நல்மான் பொங்குஉளை அன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்
தண் துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே.

தலைவி ஐங்குறுநூறு—13 ஓரம்போகியார்

பரி—(வேகமான) செலவு. மான்—குதிரை. பொங்கு—உயர்கின்ற. உளை—சாமரை போன்ற அணி. அடைகரை—கரையில் உள்ள. வேழம்—வேழக் கரும்பு, கொருக்கச்சி. பகரும்—கொடுக்கும்.

12 மணித்துறை ஊரன் மார்பு

கொடிப் பூ வேழம் தீண்டி, அயல
வடிக்கொள் மாஅத்து வண் தளிர் நுடங்கும்
மணித் துறை ஊரன் மார்பே
பனித் துயில் செய்யும் இன் சாயற்றே.

தலைவி ஐங்குறுநூறு—14 ஓரம்போகியார்

கொடிப்பூ—நீண்ட (ஒழுகிய) பூக்கள். வண்—வளப்பமுடைய. நுடங்கும்—அசையும். மணித்துறை—நீலமணி போல் தெளிந்த நீரையுடைய துறை. பனி—குளிர்ந்த; இதமான; இனிய. வடு—மாம்பிஞ்சு. சாயல்—மென்மை.

11 *THOSE WHO LOVE HIM KNOW NO SLEEP*

He is the lord of the land
Of many cool and lovely fountains,
Where reeds by the sea-shore
Parade their white flowers
Shining and glistening
Like the bristling manes
Of noble prancing steeds:
But alas!
Those who love him
Know no sleep
Even in the middle night
When all the city sleeps.

SHE Ainkurunuru—13 ORAMPOKIYAR

12 *HIS CHEST IS TO ME*

He is the lord of the land
Of lovely fountains sapphire blue,
And where the soft and tender leaves
Of nearby mango trees
Wave to and fro, with their tiny fruits,
When jostled by the reeds
Whose flowers seem
Like banners raised aloft:
His chest is to me
The softest, dearest couch
Yielding slumbers sweet.

SHE Ainkurunuru—14 ORAMPOKIYAR

13 உண்கண் பசப்பது

முள்ளி நீடிய முது நீர் அடைகரைப்
புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்
தண்துறை ஊரன் தெளிப்பவும்,
உண்கண் பசப்பது எவன்கொல்? — அன்னாய்!

தோழி ஐங்குறுநூறு—21 ஓரம்போகியார்

முள்ளி—நீர் முள்ளிச்செடி. நீடிய—நீண்டு வளர்ந்த. முது—பழைய. அடைகரை—அடைக்கும் கரை. களவன்—நண்டு. ஆம்பல்—ஆம்பலின் தண்டு. தெளிப்பவும்—தெளிவாகக் கூறவும். உண்கண்—மையூட்டிய கண். பசப்ப—பசலை நிறத்தை உடையவையாக.

14 இனி நீயேன்

அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்
முள்ளி வேர் அளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து, 'இனி
நீயேன்' என்றது எவன்கொல்? — அன்னாய்!

தலைவி ஐங்குறுநூறு—22 ஓரம்போகியார்

அள்ளல் ஆடிய—சேறு படிந்த. அளை—வளை. நீயேன்—நீங்கமாட்டேன். எவன்கொல்—கருத்து என்ன?

13 *WHY DOES A PALLOR FILM YOUR EYES?*

He is the lord of the city
Where many a lovely fountain nestles,
And speckled crabs, which have their homes
Beside the mounded shore of the old old sea
With its long stretch of screw-pine,
Nip off the water-lily blossoms.
He has clearly declared his love for you.
Why then, my dear,
Does a shade of pallor film your lovely eyes,
Lovelier with their blackened lashes?

HER FRIEND Ainkurunuru—21 ORAMPOKIYAR

14 *WHY DID HE PROMISE?*

He is the lord of the city
Where speckled crabs
Wallowing in the mud
Dart into their holes
Among the screw-pine roots.
O, my dear,
He who wedded me
Winning my heart
With his false words
Why did he promise me,
'I shall never, never,
Part from you'?

SHE Ainkurunuru—22 ORAMPOKIYAR

'My dear' — Here the lady, addresses her friend.

15 தாக்கு அணங்கு

முள்ளி வேர் அளைக் களவன் ஆட்டி,
பூக் குற்று, எய்திய புனல் அணி ஊரன்
தேற்றம்செய்து நப்புணர்ந்து, இனித்
தாக்கு அணங்கு ஆவது எவன்கொல்? — அன்னாய்!

தலைவி ஐங்குறுநூறு—23 ஓரம்போகியார்

ஆட்டி—அலைத்து. குற்று—பறித்து. எய்திய—விளையாட்டை மேற்கொண்ட. புனல்—நீர். அணி—அழகு செய்துள்ள. தேற்றம் செய்து—தேற்றி; நம்பிக்கை கொள்ளச் செய்து. நப்புணர்ந்து—நம்மைப் புணர்ந்து. தாக்கு—தாக்கும் (துன்புறுத்தும்). அணங்கு—காமநோய்த் தெய்வங்கள்.

16 நலம் கொண்டு துறப்பது

தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவன் ஊர்
எய்தினன் ஆகின்றுகொல்லோ? மகிழ்நன்
பொலந் தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலம் கொண்டு துறப்பது எவன்கொல்? — அன்னாய்!

தலைவி ஐங்குறுநூறு—24 ஓரம்போகியார்

சா—சாக. பிள்ளை—பார்ப்பு; குஞ்சு; குட்டி. எய்தினன் ஆகின்று கொல்லோ—வந்தானோ? மகிழ்நன்—மருதநிலத் தலைவன். பொலம்—பொன். தொடி — வளையல். தெளிர்ப்ப—ஓசைப்பட. முயங்கி—கூடி; புணர்ந்து. நலம்—பெண்மை நலம். துறப்பது—கைவிடுவது.

15 *WHY HAS HE CHANGED?*

He is the lord of the lovely city
Where playful maidens
Harass the speckled crabs
Whose burrows lie
Among screw-pine roots,
And then gathering flowers
Sport in the water.
He allayed my timid scruples
And made love to me.
But now, my dear,
Why has he changed, and become
A source of acute pain?

SHE Ainkurunuru—23 ORAMPOKIYAR

16 *HOW COULD HE DESERT ME?*

Has he really gone back
To his own city,
Where abound speckled crabs
At whose birth
Their mother dies;
And where crocodiles swallow
Their own brood?
He, my gay lord,
Held me in love's embrace,
While my golden bracelets
Clinked with joy.
How can he,
Having robbed me of my maiden loveliness,
Desert me now?

SHE Ainkurunuru—24 ORAMPOKIYAR

17 **இழை நெகிழ் செல்லல்**

புயல் புறந்தந்த புனிற்று வளர் பைங் காய்
வயலைச் செங் கொடி களவன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு பலர்க்கு
இழை நெகிழ் செல்லல் ஆகும் — அன்னாய் !

தோழி ஐங்குறுநூறு—25 ஓரம்போகியார்

புயல்—மழை. புறந்தந்த—பாதுகாத்த. புனிறு—ஈன்ற அணிமை. செம்—செவ்விய. பலர்க்கு—பல மகளிர்க்கு. செல்லல்—இன்னாமை ; துன்பம்.

18 **எம்மும் பிறரும் அறியான்**

கரந்தைஅம் செறுவில் துணை துறந்து, களவன்
வள்ளை மென் கால் அறுக்கும் ஊரன்
எம்மும், பிறரும், அறியான் ;
இன்னன் ஆவது எவன்கொல் ? — அன்னாய் !

தோழி ஐங்குறுநூறு—26 ஓரம்போகியார்

கரந்தை கொடிவகை. செறு—வயல். துணை—பெடை. துறந்து—கைவிட்டு. வள்ளை—கொடிவகை. கால்—தண்டு. எம்மும்—எம்மையும். பிறரும்—பிறரையும். இன்னன்—இத்தகைய தீய இயல்பினன்.

17 *A SOURCE OF HEART-ACHE*

He is the lord of the city
Where in the watered fields of corn
Crabs nip in twain
Red creepers of the purslane
Which cling to adjacent plants,
And have put forth just now
Luscious fruits, soft and tender.
His chest is the cause, my lady,
Of direst heart-ache
To many a fair maid;
And it gives them a malady
Which makes their clinging jewels
Hang loose on their wasted limbs.

HER FRIEND Ainkurunuru—25 ORAMPOKIYAR

18 *HOW HAS HE BECOME THUS?*

He is the lord of the city
With many a field
Whereon globe-thistles have grown.
There the crab forsakes his mate
To nip the slender stems
Of the creeping bind-weed.
Naught does he know or care
Of the agony of our hearts
Or of other maids'.
How has he, my dear,
Become thus ?

HER FRIEND Ainkurunuru—26 ORAMPOKIYAR

19 எல் வளை நெகிழ

செந்நெல்அம் செறுவில் கதிர் கொண்டு, களவன்
தண்ணக மண் அளைச் செல்லும் ஊரற்கு
எல் வளை நெகிழச் சாஅய்,
அல்லல் உழப்பது எவன்கொல்? — அன்னாய்!

தோழி ஐங்குறுநூறு—27 ஓரம்போகியார்

செம்—செவ்விய; சிவந்த. செறு—வயல். கதிர்—நெற்கதிர். தண்—குளிர்ந்த. அக—உள்ளிடத்தை உடைய. அளை—வளை. எல்—ஒளிபொருந்திய. சாஅய்—மெலிந்து. அல்லல்—துன்பத்தால். உழப்பது—வருந்துவது.

20 மென் தோள் பசப்பது

உண்துறை அணங்கு இவள் உறை நோய் ஆயின்,
தண் சேறு களவன் வரிக்கும் ஊரற்கு
ஒண் தொடி நெகிழச் சாஅய்,
மென் தோள் பசப்பது எவன்கொல்? — அன்னாய்!

தோழி ஐங்குறுநூறு—28 ஓரம்போகியார்

உண்—நீரை உண்பதற்கான. அணங்கு—நீர்த்துறைத் தெய்வம் உறை—இவள்மீது படிந்த. வரிக்கும்—கோலம் செய்யும்; (நடக்கும்போது கால்களால்) கோடுகளை இடும். தொடி—வளைவகை. சாஅய்—மெலிந்து. பசப்பது—பசலை நிறம் கொள்ளல்.

19 *WHY DO YOU PINE FOR HIM?*

He is the lord of city
In whose fair fields
Whereon the red paddy grows,
The crab steals
The ears of corn
And creeps with them
Into his burrow-home
In the wet and moist mud.
Why do you, my dear,
Pine for him
And waste in despair
While your shining bangles
Loosen on your arms?

HER FRIEND Ainkurunuru—27 ORAMPOKIYAR

20 *NOT A NAIAD'S DOING*

He is the lord of the city
Where the crawling crab
Leaves a clear trail
Upon the wet and moist mud.
If indeed the malady
Which ails her sore
Is of the Naiad's doing,
Of her who haunts the drinking pool,
Why then, my lady,
Does she pine and waste
In despair for him,
And why do her bright bangles
Hang loose on her lovely arms,
And why does a grey pallor
Overspread them?

HER FRIEND Ainkurunuru—28 ORAMPOKIYAR

'My lady' — is here an address to the foster-mother.

21 நின் மகள் பசலை

மாரி கடி கொள, காவலர் கடுக,
வித்திய வெண் முளை களவன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு உற மரீஇ,
திதலை அல்குல் நின் மகள்
பசலை கொள்வது எவன்கொல்? — அன்னாய்!

தோழி ஐங்குறுநூறு—29 ஓரம்போகியார்

மாரி—மழை. கடிகொள—மிக. கடுக—விரைந்து சென்றுவர (அணுக). வித்திய—விதைத்த. மார்பு உற மரீஇ—நெஞ்சார உண்மையைக் கூறி. திதலை—தேமல்.

22 பெருங் கவின் இழப்பது

வேப்பு நனை அன்ன நெடுங் கட் களவன்
தண்ணக மண் அளை நிறைய, நெல்லின்
இரும் பூ உறைக்கும் ஊரற்கு இவள்
பெருங் கவின் இழப்பது எவன்கொல்? — அன்னாய்!

தோழி ஐங்குறுநூறு—30 ஓரம்போகியார்

வேப்பு—வேம்பு; வேப்ப(மரம்). நனை—அரும்பு.
இரு—மிக்க. உறைக்கும்—உதிரும்; கொண்டு போதலும்.
கவின்—அழகு.

21 *WHY DOES SHE GROW SO PALE?*

He is the lord of the city
Where crabs nip in twain
The white and tender shoots
Sprouting from the sown paddy.
Why does your daughter
Whose hips gleam
With streaks of beauty,
And who clasped him in close embrace,
Clinging lovingly to his chest,
Why does she, my lady,
Grow so pale and wan,
While the rain pours down
In his land,
And the watchmen weed the fields?

HER FRIEND Ainkurunuru—29 ORAMPOKIYAR

'My lady' — is the foster-mother.

22 *HER LOST LOVELINESS*

He is the lord of the land
Where the fruitful flowers
Which drop down
From paddy plants
Fill the wet and cool holes
In the moist mud,
Snug homes of the crabs
Whose longish eye
Is like a sprouting leaf of the neem.
Why does she, my lady,
Lose her exquisite loveliness
Because of him?

HER FRIEND Ainkurunuru—30 ORAMPOKIYAR

'My lady' — is the foster-mother.

23 **இன் துணைப் பணைத் தோள்**

சிலம்பு கமழ் காந்தள் நறுங் குலை அன்ன
நலம் பெறு கையின் என் கண் புதைத்தோயே !
பாயல் இன் துணை ஆகிய பணைத் தோள்
தோகை மாட்சிய மடந்தை !
நீ அலது உளரோ—என் நெஞ்சு அமர்ந்தோரே ?

தலைவன் ஐங்குறுநூறு—293 கபிலர்

சிலம்பு—மலை. கையின்—கையினால். புதைத்தோய்—பொத்தியவளே. பாயல்—படுக்கை. தோகை—மயில். மாட்சிய—பெருமையையுடைய.

24 **கண் போல் மலர்தல்**

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்,
பைஞ் சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அம் சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது. இவள்-
தன் போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே.

தலைவன் ஐங்குறுநூறு—299 கபிலர்

கவாஅன்—பக்கமலை. பகுவாய்—மலர்ந்த வாயையுடைய. அம்சில் ஓதி—அழகிய சிலவாகிய கூந்தல். அசைநடை—(மெல்ல) அசைந்து இயங்கும் நடை. கொடிச்சி—குறிஞ்சி நிலத்துப் பெண். சாயல்—மென்மை (முதலியன).

23 *IN MY HEART*

You came behind me
And clapping your gracious hands,
Bunches of glory-lilies
Which perfume the hills around,
Over my eyes, shut them gently.
O loveliest maid
With peacock's gorgeous grace,
And arms as smooth and shapely as stems of bamboo!
O sweet companion in my bed!
Can any but you
Ever dwell in my heart?

HE Ainkurunuru—293 KAPILAR

24 *MY LOVELY HIGHLAND LASS*

No, none of the blue-lilies
Blossoming on the fresh waters
Of the tarns upon the slopes
Of the chieftain's hill,
Whose open flowers
Are as lovely as pretty mouths,
Can ever rival the beauty of her eyes;
Nor can any peacock
Ever match the glamorous grace
And the witchery of the jaunty walk
Of my own lissom highland lass,
With wispy straying curls.

HE Ainkurunuru—299 KAPILAR

25 குயிற் பெடை அகவ

அவரோ வாரார்: தான் வந்தன்றே —
குயிற் பெடை இன் குரல் அகவ,
அயிர்க் கேழ் நுண் அறல் நுடங்கும் பொழுதே!

தலைவி ஐங்குறுநூறு—341 ஓதலாந்தையார்

வந்தன்று—வந்துள்ளது. அகவ—கூவ. அயிர்க் கேழ் நுண் அறல்—கருமணல் கெழுமிய நுண்ணிய நீர்.

26 சுரும்பு களித்து ஆலும்

அவரோ வாரார்: தான் வந்தன்றே—
சுரும்பு களித்து ஆலும் இருஞ் சினைக்
கருங் கால் நுணவம் கமழும் பொழுதே!

தலைவி ஐங்குறுநூறு—342 ஓதலாந்தையார்

சுரும்பு—வண்டு ; தேனீ. ஆலும்—ஒலிக்கும். இரும் சினை—பெரிய கிளை. நுணவம்—மலர்வகை ; (மரவகை).

25

THE CUCKOO CALLS

Ah! My lover tarries
Though spring time is here.
The cuckoo calls to her mate
In sweet melodious notes;
And the thin stream
Picks its meandering way
Through soft and glistening sands.

SHE Ainkurunuru—341 OTALANTAIYAR

26

DRUNKEN BEES

Ah! My lover tarries
Though spring time is here.
Around the heavy boughs
Of black-stemmed mulberry trees
Which scent the air,
Now hum and dance
The drunken bees.

SHE Ainkurunuru—342 OTALANTAIYAR

27 கதுப்பு அறல் அணியும்

அவரோ வாரார்: தான் வந்தன்றே—
புதுப் பூ அதிரல் தாஅய்க்
கதுப்பு அறல் அணியும் காமர் பொழுதே!

தலைவி ஐங்குறுநூறு—345 ஓதலாந்தையார்

அதிரல்—காட்டு மல்லிகை. தாஅய்—பரந்து. கதுப்பு அறல்—கூந்தல் போன்ற கருமணல். காமர்—அழகிய; விரும்பத்தக்க.

28 அம் சினைப் பாதிரி

அவரோ வாரார்: தான் வந்தன்றே—
அம் சினைப் பாதிரி அலர்ந்தென,
செங் கண் இருங் குயில் அறையும் பொழுதே!

தலைவி ஐங்குறுநூறு—346 ஓதலாந்தையார்

சினை—மொட்டு; கிளை. பாதிரி—மலர்ச் செடிவகை, அலர்ந்து—மலர்ந்து. இரும்—கரிய. அறையும்—கூவும்.

27 *BLACK STREAKS OF SAND*

Ah! My lover tarries
Though spring time is here.
Like flowers decking braided hair
Fresh wild-jasmines scattered lie
On the black streaks of sand
Upon the flowing rlver's bed.
O! the beautiful season is here.

SHE Ainkurunuru—345 OTALANTAIYAR

Compare :

Spring wind provoketh
To burst and burgeon
Each sprout and flower.

Chinese Poetry — ARTHUR WALEY

28 *LOVELY BUDS*

Ah! My lover tarries
Though spring time is here:
Lovely buds are blossoming
On the patala trees:
And dark-hued, red-eyed cuckoos
Proclaim the season now.

SHE Ainkurunuru—346 OTALANTAIYAR

29 தண் பொழில் மலரும்

அவரோ வாரார் : தான் வந்தன்றே—
வலம் சுரி மராஅம் வேய்ந்து, நம்
மணம் கமழ் தண் பொழில் மலரும் பொழுதே !

தலைவி ஐங்குறுநூறு—348 ஓதலாந்தையார்

வலம்சுரி—வலமாகச் சுரித்த. மராஅம்—வெண்கடப்ப மரம்.
வேய்ந்து—மூடி ; சூடி ; சூழ்ந்து.

30 எரி கால் இளந் தளிர்

அவரோ வாரார் : தான் வந்தன்றே—
பொரி கால் மாஞ் சினை புதைய
எரி கால் இளந் தளிர் ஈனும் பொழுதே !

தலைவி ஐங்குறுநூறு—349 ஓதலாந்தையார்

பொரிகால்—பொரிந்த அடியையுடைய. சினை—கிளை.
புதைய—மறைய. எரி—நெருப்பை போன்ற ஒளி.
கால்—கக்குகின்ற.

29 *SPIRAL FLOWERS*

Ah! My lover tarries
Though spring time is here.
The saffron-tree is crested well
With lovely spiral flowers:
And the entire grove, fragrant and cool,
Is ablossom now.

SHE Ainkurunuru—348 OTALANTAIYAR

Compare :

The orange -flower perfumes the bower,
The breeze is on the sea,
The lark his lay who trill'd all day,
Sits hushed his partner nigh :
Breeze, bird, and flower confess the hour ;
But where is County Guy ?

—SIR WALTER SCOTT

30 *LEAPING TONGUES OF FIRE*

Ah! My lover tarries
Though spring time is here.
Upon the boughs of mango trees
Whose stem is chapped and rough
Freshly budding sprouts appear
Like leaping tongues of fire.

SHE Ainkurunuru—349 OTALAMTAIYAR

Compare :

(i) He comes not! 'tis in vain I wait!
The crane's wild cry strikes on mine ear,
The tempest howls, the hour is late,
Dark is the raven night, and drear :—
And I thus stand sighing,

(See page 32)

(From page-31)

The snow flakes round me flying
Right on my sleeve, and freeze it crisp and clear.

— *Classic Japanese Poetry* : ARTHUR WALEY

(ii) O storks which dwell
Among haunts of coot and hern
Around the rippling waters
Of the cool Lake of the Moon !
How shall I speak of my love
And solace from my torments find ?
First, came the cruel winter with its dew ;
And in its wake came summer ;
Summer past,
Came the rains green and cool ;
But our dear tormentor,
He who went away,
Alas ! See, he has not come !

— *Ashtappirapantam* PILLAIPPERUMAL AIYANGAR
(Translated from Tamil)

2

AKANANURU

அகநானூறு

31 கானம் எம்மொடு கழிந்தனர் ஆயின்

வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்
நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு,
இலை இல மலர்ந்த முகை இல் இலவம்
கலி கொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அம் சுடர் நெடுங் கொடி பொற்பத் தோன்றி,
கயம் துகள் ஆகிய பயம் தபு கானம்
எம்மொடு கழிந்தனர் ஆயின், கம்மென,
வம்பு விரித்தன்ன பொங்கு மணற் கான் யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயில் இணர் எக்கர்,
மெய் புகுவு அன்ன கை கவர் முயக்கம்
அவரும் பெறுகுவர்மன்னே! நயவர,
நீர் வார் நிகர் மலர் கடுப்ப, ஓ மறந்து
அறு குளம் நிறைக்குந போல, அல்கலும்
அழுதல் மேவல ஆகி,
பழி தீர் கண்ணும் படுகுவமன்னே!

தலைமகள் அகநானூறு—11 ஔவையார்

உருப்பு—வெப்பம். அவிர்—விளங்கு. கலி—மிக்க மகிழ்ச்சி மலிபு—மிகுந்து. பொற்ப—அழகாக; போல. தோன்றி—கானல் நீர் போல் தோன்றி. கயம்—நீர்நிலை. பயம்—பயனை, வளத்தை தபு—அறு, நீக்கு. வம்பு—மார்க்கச்சு. இணர்—பூங்கொத்து. எக்கர்—மணற்குன்று. நயவர—அன்பு தோன்ற. நிகர்—ஒளி பொருந்திய. ஓ மறந்து—ஒழிதல்இன்றி. அல்கலும்—நாள்தோறும். படுகுவ—(இமைகள்) மூடுவ; துயில் கொள்ளுப.

31 *HAD HE TAKEN ME WITH HIM*

The blazing orb of sun coursing through the sky,
And burning the wilderness into an angry red,
Has unfolded mirages there; silk-cotton trees
Leafless now, and with every bud in bloom,
Look like bevies of chattering girls holding high
Rows of brightly flaming festive lamps;
Tarns, once brimming with water, are now dry and dusty
In that barren waste.
Had he, my sweetheart, taken me with him,
I would have lain with him, our arms interlocked
In sweet dalliance, as we would in each other merge,
In the shade of low-hanging boughs of trees,
Fragrant with the scent of clustering flowers
Upon the sand-dune stretches formed by the forest stream
Which look like white scarfs spread out to dry;
And my unoffending eyes, which, night after night,
Like bright flowers dripping with heavy dew,
Shed ceaseless tears, as if to fill a dried up pool,
Would have closed in gentle sleep.

SHE Akananuru—11 AVVAIYAR

32 பல்லோர் கூறிய பழமொழி

'இம்மை உலகத்து இசையொடும் விளங்கி,
மறுமை உலகமும் மறு இன்று எய்துப,
செறுநரும் விழையும் செயிர் தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்' எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம்—தோழி!
நிரை தார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டி, புதுவதின்
இயன்ற அணியன், இத் தெரு இறப்போன்,
மாண் தொழில் மா மணி கறங்க, கடை கழிந்து,
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங் கண் புதல்வனை நோக்கி, 'நெடுந் தேர்
தாங்குமதி, வலவ!' என்று இழிந்தனன். தாங்காது,
மணி புரை செவ் வாய் மார்பகம் சிவணப்
புல்லி, 'பெரும! செல் இனி, அகத்து' எனக்
கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின், 'தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம்' என, மகனொடு
தானே புகுதந்தோனே; யான் அது
படுத்தனென் ஆகுதல் நாணி, இடித்து, 'இவற்
கலக்கினன் போலும், இக் கொடியோன்' எனச் சென்று,
அலைக்கும் கோலொடு குறுக, தலைக்கொண்டு
இமிழ் கண் முழவின் இன் சீர் அவர் மனைப்
பயிர்வன போல வந்து இசைப்பவும், தவிரான்,
கழங்கு ஆடு ஆயத்து அன்று நம் அருளிய
பழங் கணோட்டமும் நலிய,
அழுங்கினன் அல்லனோ, அயர்ந்த தன் மணனே?

தலைமகன் அகநானூறு, 66 செல்லூர்க் கோசிகன் கண்ணனார்

32 *FATHER AND CHILD*

Dear friend,
There's an old saying repeated by many,—
'Good men who are fathers
Of lovely children who attract
Even their enemies' hearts,
And hold their love,
Will achieve glorious fame
In this world, and attain the next,
Spotless and unstained.'
These words of old are wholly true;
And I have myself seen them
Come to pass.
It was but yesterday,
That our noble chief
Wishing to wed another woman,
And wearing upon his chest
Row on row of flower garlands,
And donning fine new clothes,
Drove in his chariot through our street,
The fine bells of his horses clinking.
Then his little son,
Eager to see that sight,
Passed through our outer gate,
And ran towards him with toddling steps,
His eyes, soft as fresh blossoms open wide.
When my lord saw him,
He shouted to his charioteer,
'Stop, O stop, our tall chariot.'
Then tarrying not, he stepped down,
And quickly picking the toddler up
Hugged him close,
Pressing the child's coral red mouth
Upon his broad chest.
He spoke gently to the child,
'O my king, run home now!'

அரும்பத உரை

இம்மை—இவ் (உலகம்). மறுமை—மறு உலகம். மறு—குற்றம். தீர்—இல்லாத. காட்சி—அழகு. செம்மலோர்—தலைமையுடையவர். வாய்—உண்மை. வாய்த்தனம்—காணப் பெற்றோம். நிரை—வரிசை. நெருநல்—நேற்று. வதுவை அயர்தல்—மணம் செய்து கொள்ளல். வாய்—உண்மை. இறப்போன்— கடப்போன். மா—(விலங்கு) குதிரை. தாங்குமதி—நிறுத்து. சிவண—பொருந்த. கொடுப்போன்—போக விடுபவன். படுத்தனென்—எண்ணிச் செய்தவன். பயிர்—அழை. அழுங்கு—தவிர், கைவிடு. அயர்ந்த—விரும்பிய.

And softly set him down.
But, the unwilling child started to cry.
Thereat, my lord said,
'This reluctant son of mine
Seems to me the incarnate God of Wealth!'
So saying, he came into our house.
When I saw that, I felt greatly shamed.
'This wicked child has reproved his father,
And has made him give up his design :
People would think that I had schemed it'
So, I ran towards the little one
With a minatory cane in my hand.
At once,
My lord gathered his son to him;
And though the dark-eyed drum-head
Sounded sweet and clear
From the wedding house yonder,
As if to invite him there,
He did not pay it the slightest heed;
Nor did he waver, or change his mind.
The memory of his old love
Seemed to prick him then,
The love which he had showered on me
On that day when he came among us,
When we girls were at play;
And so, he gave up all thought
Of wedding that woman.

SHE Akananuru—66 CELLUR-K- KOCIKANAR

33 வெரீஇய மதர் கயற் கண்

பெருங் கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங் கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி,
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ் கோல் உமணர் காதல் மடமகள்
சில் கோல் எல் வளை தெளிர்ப்ப வீசி,
'நெல்லின் நேரே வெண் கல் உப்பு' எனச்
சேரி விலைமாறு கூறலின், மனைய
விளி அறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர் கயல் மலைப்பின் அன்ன கண் எமக்கு,
இதை முயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மா மூதள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வம் தீர வாங்கும் தந்தை
கை பூண் பகட்டின் வருந்தி,
வெய்ய உயிர்க்கும் நோய் ஆகின்றே.

தலைமகள் அகநானூறு—140 அம்மூவனார்

வேட்டம்—வேட்டை. செறு—வயல். கொள்ளை—விலை. என்றூழ்—சூரியன். விடர்—வெடிப்பு. கதழ்கோல்—தாற்றுக் கோல். தெளிர்ப்ப—ஒலிக்கும்படி. விலை மாறு—ஈடான விலை. விளி—(கூக்)குரல். ஞமலி—நாய். மலைப்பு—போரிடுதல். இதை—புதிய கொல்லை. முயல்—ஆக்க முயலும். புனவன்—குறவன். கடுக்கும்—ஒக்கும். அள்ளல்—சேறு. சாகாடு—வண்டி.

33 *HER FRIGHTEND EYES*

Fishermen, who in little hamlets dwell
And hunt for fish in the wide open sea,
Without plough's labour raise
The white and pebbly salt
On their fields, the spacious marshes.
Laden with their prodigal store
Across mountains with sun-cleft rocks
Travels the caravan of the vendors in salt
Hastening the bulls with the prodding goad.
This daughter of the caravan,
This lovely maiden young and fair,
Who walks with a jaunty swing,
Clinking her bracelets, choice and fine,
In the streets proclaims aloud
The price of her ware, crying,
'For paddy we exchange
The white and pebbly salt
Measure for measure.'
At the unfamiliar sound
The watch-dog well acquaint
With every household voice
Barks fiercely at her
Frightening her.
Her lovely eyes,
A pair of wanton carps,
Become tremulous with fear.
Oh! They have given me a malady,
Making me heave hot sighs
Like the panting bull,
Yoked by her father's own hand
To a salt-laden cart,
As it strains hard to pull it out
When it had got stuck deep in the quagmire,
Ancient, wide, and black like the smoke
From the forest waste-land
Which the hill-men seek
To reclaim with fire.

HE Akananuru—140 AMMUVANAR

34 எப்பொருள் பெறினும் பிரியன்மினோ

'பெய்து புறந்தந்த பொங்கல் வெண் மழை,
எஃகு உறு பஞ்சித் துய்ப் பட்டன்ன,
துவலை தூவல் கழிய, அகல் வயல்
நீடு கழைக் கரும்பின் கணைக் கால் வான் பூக்
கோடைப் பூளையின் வாடையொடு துயல்வர,
பாசிலை பொதுளிய புதல்தொறும் பகன்றை
நீல் உண் பச்சை நிறம் மறைத்து அடைச்சிய
தோல்எறி பாண்டிலின் வாலிய மலர,
கோழிலை அவரைக் கொழு முகை அவிழ,
ஊழ் உறு தோன்றி ஒண் பூத் தளை விட,
புலம்தொறும் குருகினம் நரல, கல்லென
அகன்று உறை மகளிர் அணி துறந்து நடுங்க,
அற்சிரம் வந்தன்று; அமைந்தன்று இது என,
எப் பொருள் பெறினும், பிரியன்மினோ' எனச்
செப்புவல் வாழியோ, துணையுடையீர்க்கே:
நல்காக் காதலர்—நலன் உண்டு துறந்த
பாழ் படு மேனி நோக்கி, நோய் பொர,
இணர் இறுபு உடையும் நெஞ்சமொடு, புணர்வு வேட்டு,
எயிறு தீப் பிறப்பத் திருகி,
நடுங்குதும்—பிரியின் யாம் கடும்பனி உழந்தே.

தலைமகள் அகநானூறு -217 கழார்க் கீரன் எயிற்றியார்

புறம் தந்த—காட்சியைத் தோன்றச்செய்த. பொங்கல் — உயர்ந்த. எஃகுறு—கடைசல் கோலால் அடியுண்ட. துய்— பஞ்சிழை. கணைக்கால்—திரண்ட தண்டு. துயல்வர—அசைய. பாண்டில்—(கண்ணடி) வட்டம். ஊழ்—முதிர்வு. நரல—ஒலிப்ப. அற்சிரம்—பனிக்காலம். அமைந்தன்று - பொருந்தியது. பொர — துன்புறுத்த.

VAIN LONGING

The clouds have now poured down all their rain,
Opening the entire landscape to view,
And have even stopped their gentle drizzle,
Thin and fleecy as the cotton tousled by an iron bowstring.
Bright white flowers, stout of stalk,
Of the tall sugar-cane, long of stem,
Standing up straight on the spacious fields,
Shake in the north-wind, as shake the red flowers
Of the silk-cotton tree in the summer west-wind.
The white flowers of the gulancha-vine have blossomed thick
Upon the blue-green shrubs, almost hiding them,
As do the sparkling bits of circle-shaped glass,
Close-set upon blue tinted leathern shields.
The luscious buds of the succulent bean-vines
Have fully blossomed now!
The true season's flowers of henna shrubs
Have slipped the bonds of their buds and bloomed;
Flocks of cranes now loudly squawk from fields on every side;
Lonesome women parted from their lovers have lost
All trace of their glamorous beauty, and shiver in the bitter cold.
It is certain that winter has come now.
My friend! Long may you live!
Though you told my lover ever so clearly
That this is not the time to part from me,
And go seeking elusive wealth,
He did not deign to grant your wishes.
Having tasted the sweets of my maidenhood,
If he goes away abandoning me here,
What can I do but be sick with love,
And keep on looking at my ruined beauty—
My strength wholly lost, my heart utterly broken—
All the time longing in vain for his dear embrace,
Writhing in anguish, shuddering in the cold,
And gnashing my teeth till they give off sparks?

SHE Akananuru—217 KALAR-K-KIRAN-EYIRRIYAR

35 உள்ளார் கொல்லோ? மறந்தனர் கொல்லோ?

அம்ம—வாழி, தோழி! —பொருள் புரிந்து
உள்ளார் கொல்லோ, காதலர்? உள்ளியும்,
சிறந்த செய்தியின் மறந்தனர்கொல்லோ?—
பயன் நிலம் குழைய வீசி, பெயல் முனிந்து,
விண்டு முன்னிய கொண்டல் மா மழை
மங்குல் அற்கமொடு பொங்குபு துளிப்ப,
வாடையொடு நிவந்த ஆய் இதழ்த் தோன்றி
சுடர் கொள் அகலின் சுருங்கு பிணி அவிழ,
சுரி முகிழ் முசுண்டைப் பொதி அவிழ் வான் பூ
விசும்பு அணி மீனின் பசும் புதல் அணிய,
களவன் மண் அளைச் செறிய, அகல் வயல்
கிளை விரி கரும்பின் கணைக்கால் வான் பூ
மாரி அம் குருகின் ஈரிய குரங்க,
நனி கடுஞ் சிவப்பொடு நாமம் தோற்றி,
பனி கடி கொண்ட பண்பு இல் வாடை
மருளின் மாலையொடு அருள் இன்றி நலிய,
'நுதல் இறைகொண்ட அயல் அறி பசலையொடு
தொல் நலம் சிதையச் சாஅய்,
என்னள்கொல் அளியள்?' என்னாதோரே.

தலைமகள் அகநானூறு—235 கழார்க் கீரன் எயிற்றியார்

புரிந்து—விரும்பி. உள்ளார்—எண்ணமாட்டார். பயன் நிலம்—பயன்தருகின்ற நிலம். முனிந்து—வெறுத்து. கொண்டல்—கீழ்த்திசைக் காற்று. மங்குல்—இரவு. அற்கம்—நிலைத்து நிற்றல். தோன்றி—செங்காந்தள். அகல்—விளக்கு (தகழி). களவன்—நண்டு. குரங்க—வளைய. நாமம்—அச்சம். மருள்—மயக்கம். நலிய—வருத்த.

35 *UNREMEMBERED? IGNORED?*

The vast dark cloud has rained hard,
Soaking the fertile fields, and has given up
Further raining as if disgusted: but being driven
By the east-wind, it has gone and settled upon a hill.
Resting there for the night, and rising up refreshed,
It has soared up into the sky, and sprayed drops of gentle rain
Upon the red glory-lilies below, which promptly lifted up
Their gorgeous flowers into the wintry wind.
Their closed buds, unloosening their tying bonds,
Have opened wide, and the shooting blossoms seem
Like rising flames lit in shallow earthern lamps.
The white and curling buds of the white bind-weed
Have unfurled into glorious blossoms, and like stars adorning the sky,
Have set off the beauty of the blue-green shrubs around.
Scuttling crabs dart into their mud-holes and stay hid.
On the spacious fields, flowers, stout of stalk,
Of the branching sugar-cane have blossomed white,
And, wet and bent, look like autumnal cranes.
The ungracious north-wind wedded with the dew
Works up a towering rage, and strikes us with terror.
Allying itself with the dusk, it makes our senses reel,
And convulses us with pain. A sickly pallor
Has settled on my brow for all the world to see.
But he, my lover, he who has gone in quest of wealth,
Does not care to ask how I am.
Does he not think of me ever at all?
Or else thinking, has he forgotten me quite
In his more valued preoccupations?

SHE Akananuru – 235 KALAR-K-KIRAN-EYIRRIYAR

36 நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ?

விசும்பு விசைத்து எழுந்த கூதளங் கோதையின்,
பசுங் கால் வெண் குருகு வாப் பறை வளைஇ,
ஆர்கலி வளவயின் போதொடு பரப்ப
புலம் புனிறு தீர்ந்த புது வால் அற்சிரம்,
நலம் கவர் பசலை நலியவும், நம் துயர்
அறியார்கொல்லோ, தாமே? அறியினும்,
நம் மனத்து அன்ன மென்மை இன்மையின்,
நம்முடை உலகம் உள்ளார்கொல்லோ?
யாங்கு என உணர்கோ, யானே? —வீங்குபு
தலை வரம்பு அறியாத் தகை வரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய் வளர் இள முளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத் திரள் நீடி,
ஊரோர் எடுத்த அம்பல் அம் சினை,
ஆராக் காதல் அவிர் தளிர் பரப்பி,
புலவர் புகழ்ந்த நார் இல் பெரு மரம்
நில வரை எல்லாம் நிழற்றி,
அலர் அரும்பு ஊழ்ப்பவும், வாராதோரே.

தலைமகள் அகநானூறு—273 ஒளவையார்

விசும்பு—ஆகாயம். கோதை—மாலை. குருகு—கொக்கு வகை வா—தாவி. பறை—பறத்தல். வளைஇ—வளைந்து. ஆர்கலி—ஒலிக்கும் கடல். வளவை—வளம்; செழிப்பு. புலம்—கழனி. புனிறு தீர்ந்த—ஈன்று முடித்த. அற்சிரம்—பனிக்காலம். நலிய—வருத்த. அன்ன—போன்ற; ஒத்த. உணர்கு—உணர்வேன். வீங்குபு—பெருகி. தலைவரம்பு—முடிவின் எல்லை. தகை—தன்மை. அசைவு—நெகிழ்ச்சி. உயவு—துன்பம். நீடி—நீண்டு (வளர்ந்து). எடுத்த—(வாய்விட்டுக்) கூறிய. சினை—கிளை. ஆரா—(நுகர்ந்து) முடிவு பெறாத. நிலவரை—உலகின் எல்லை முழுவதும். நிழற்றி—நிழல் தந்து. ஊழ்ப்ப—உதிர்க்க

36 *DESIRE TREE*

When the wintry wind with limitless strength
Was blowing stronger and ever stronger,
A strong shoot of the malady of passionate desire
Sprouted up from my heart from between my breasts;
Took root in the loose soil of my disquieted heart;
Grew, and took shape as a stout stem;
Branched out as the hushed whisper of city folk;
Put forth glistening leaves of insatiate love;
Spread out into a big tree of immodesty;—
Modesty and coyness in us women
Are what poets have been praising for long—
Threw its dark shadow all over the land;
And brought forth, as bud and bloom, much open slander:
And all this while, he did not, and has not, come.
A garland of convolvulus flowers, flung high into the sky,
Seem the flocks of herons, green of leg,
As they fly with flapping wings, and glide down
In a sweeping curve to scatter at dusk,
And land upon the fish-rich, roaring ocean-shore.
The season of early dew has just arrived
In the wake of fresh-born ears of corn.
I am sick with love, and a pallor preys
Upon my beauty, and hurts me to the quick.
Is he not aware of all these? Or, being aware,
Does he not care, since his heart is not as soft as ours?
Or, can he not sense the woes of womankind?
O, How can I be sure, O how?

SHE Akananuru—273 **AVVAIYAR**

37 நிறை பறைக் குரீஇனம்

இடை பிறர் அறிதல் அஞ்சி, மறை கரந்து
பேஎய் கண்ட கனவின், பல் மாண்
நுண்ணிதின் இயைந்த காமம் வென் வேல்,
மறம் மிகு தானை, பசும் பூண், பொறையன்
கார் புகன்று எடுத்த சூர் புகல் நனந்தலை
மா இருங் கொல்லி உச்சித் தாஅய்,
ததைந்து செல் அருவியின் அலர் எழப் பிரிந்தோர்
புலம் கந்தாக இரவலர் செலினே,
வரை புரை களிற்றொடு நன் கலன் ஈயும்
உரை சால் வண் புகழ்ப் பாரி பறம்பின்
நிரை பறைக் குரீஇயினம் காலைப் போகி,
முடங்கு புறச் செந்நெல் தரீஇயர், ஓராங்கு
இரை தேர் கொட்பின ஆகி, பொழுது படப்
படர் கொள் மாலைப் படர்தந்தாங்கு,
வருவர் என்று உணர்ந்த, மடம் கெழு, நெஞ்சம் !
ஐயம் தெளியரோ, நீயே; பல உடன்
வறல்மரம் பொருந்திய சிள்வீடு, உமணர்
கண நிரை மணியின், ஆர்க்கும் சுரன் இறந்து,
அழி நீர் மீன் பெயர்ந்தாங்கு, அவர்
வழி நடைச் சேறல் வலித்திசின், யானே.

தலைமகள் அகநானூறு—303 ஔவையார்

இடை—துன்பம்; கோழைத் தன்மை; நம்மிடையே நிகழ்ந்தவை. மறைகரந்து—மறைத்து ஒளித்துவைத்து. மாண்—சிறந்த. பசும்பூண்—பசிய (பொன்னாலாகிய) அணிகலங்கள். பொறையன்—சேரன். கார்—மேகம். புகன்று—(கொடுக்க) விரும்பி. சூர்—தெய்வம். நனந்தலை—அகன்ற இடத்தை உடைய. தாஅய்—பரந்து. ததைந்து—செறிந்து. அலர்—ஆரவாரம். புலம்—புலமை; அறிவு. கந்து—பற்றுக்கோடு. குரீஇ—குருவி, (இந்து) கிளி தேர்—ஆராய்ந்து தெரிகின்ற. கொட்பு—திரிதல். படர்கொள்—பரவுகின்ற; துன்பத்தைக் கொண்ட. படர் தந்தாங்கு—மீண்டு வந்தாற் போல.

37 *WILL HE COME NOW?*

The huge dark cloud has loudly roared,
Making the whole sky quake with its noise,
And has let large drops of water leap down
And pour as heavy showers. The dew then has come along
With droplets small and tiny as specks of tenuous smoke,
Filling the cups of all the blossomed flowers,
And making the lush blossoms of mussel-shell vines seem
Like the tearful eyes of women parted from their beloved;
And making too the tender leaves of the pretty swallow-wort
Whose flowers are crowned with fluffy down,
Drip wet with the waters of the pool,
And tremble in the wind like moist livers cut in twain.
Fresh flowers of the field-bean appear now everywhere
Upon the spacious fields; long sheaves of paddy-corn
Bow down their fruited heads, and feast the eye;
Listless bees lazily hang around the boughs of trees;
In this wintry midnight hour.
But that unchivalrous man who does not know
How sick with love I am, is lingering yet
In the camp of war of his king, whose roused anger
Scorches his opposed foemen like a blazing fire.
Will he not come, at least now, to cure my malady?
I can not bear at all this ceaseless torment
Of the cruel, deadly north-wind,———lying here all alone.
But, what is it that I can do?

HE Akananuru—303 AVVAIYAR

38 இருதலைக் கொள்ளி இடை நின்ற உறவி

வீங்கு விசை, பிணித்த விரைபரி, நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழிஆழ் மருங்கில்,
பாம்பு என முடுகு நீர் ஓட, கூம்பிப்
பற்று விடு விரலின் பயறு காய் ஊழ்ப்ப,
அற்சிரம் நின்றன்றால், பொழுதே; முற்பட
ஆள்வினைக்கு எழுந்த அசைவுஇல் உள்ளத்து
ஆண்மை வாங்க, காமம் தட்ப,
கவை படு நெஞ்சம்! கண்கண் அகைய,
இரு தலைக் கொள்ளி இடை நின்று வருந்தி,
ஒரு தலைப் படாஅ உறவி போன்றனம்;
நோம் கொல்? அளியள் தானே —— யாக்கைக்கு
உயிர் இயைந்தன்ன நட்பின்,அவ் உயிர்
வாழ்தல் அன்ன காதல்,
சாதல் அன்ன பிரிவு அறியோளே!

தலைமகன் அகநானூறு—339 நரைமுடி நெட்டையார்

வீங்கு—மிகுந்த. விசை—வேகம். பிணித்த—கட்டிய; பூட்டிய பரி—குதிரை. நோன்—வலிய. கதிர்—(சக்கரத்தின்) ஆரம். ஆழி—சக்கரம். முடுகு—விரைந்து செல்லும். கூம்பி—குவிந்து. ஊழ்ப்ப—உதிர. பொழுது—பருவம். வாங்க—இழுக்க. தட்ப—தடைசெய்ய. கவைபடு—பிளவுபட்ட. கண்கண்—இருபுறமும்; இடம் இடமாக. உறவி—எறும்பு. நோம் கொல்—வருந்துவாள் போலும். யாக்கை—உடம்பு. அரியோள்—(பெறுவதற்கு) அரியவள். அளியள்—இரங்கத்தக்கவள்.

38 *THE LOVER'S DILEMMA*

As my lofty chariot speeds along
Drawn by ever-hastening steeds,
Its stout-spoked wheels make deep ruts
Into which the nearby water flows swiftly
Seeming like wriggling snakes.
The bunched pods of the green-gram
Spread apart like the divergent fingers
Of an open palm.
The winter season has indeed come now.
My manly spirit impels to manly deeds
My firm and steadfast mind;
But my love impedes it:
And at every step of my journey
My heart is split in twain,
And I feel like an ant caught
Between the two ends of a burning stick
Every knot of which is ablaze—
Wholly distraught, and unable to move either way.
I am sure she too suffers:
For love is as vital to her as breath is to the body.
Her love for me is as sweet and dear as life itself:
And parting from me would be the death of her.
Her, my dearest, I pity.

HE Akananuru – 339 NARAIMUTI-NETTAIYAR

39 அருஞ் சுரம் நீந்திய நம்மினும்

ஆளி நல் மான் அணங்குடை ஒருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப,
ஏந்தல் வெண் கோடு வாங்கி, குருகு அருந்தும்
அஞ்சு வரத் தருந ஆங்கண், மஞ்சு தப,
அழல் கான்று திரிதரும் அலங்கு கதிர் மண்டிலம்
நிழல் சூன்று உண்ட நிரம்பா நீள் இடை,
கற்று உரிக் குடம்பைக் கத நாய் வடுகர்
வில் சினம் தணிந்த வெரு வரு கவலை,
குருதி ஆடிய புலவு நாறு இருஞ் சிறை
எருவைச் சேவல் ஈண்டு கிளைத் தொழுதி,
பச்சூன் கொள்ளை சாற்றி, பறை நிவந்து,
செக்கர் வானின் விசும்பு அணி கொள்ளும்
அருஞ் சுரம் நீந்திய நம்மினும், பொருந்தார்
முனை அரண் கடந்த வினை வல் தானை,
தேன் இமிர் நறுந் தார், வானவன் உடற்றிய
ஒன்னாத் தெவ்வர் மன் எயில் போல,
பெரும் பாழ் கொண்ட மேனியள், நெடிது உயிர்த்து,
வருந்தும்கொல்? அளியள் தானே —— சுரும்பு உண,
நெடு நீர் பயந்த நிரை இதழ்க் குவளை
எதிர் மலர் இணைப் போது அன்ன, தன்
அரி மதர் மழைக் கண் தெண் பனி கொளவே!

தலைமகன் அகநானூறு—381 மதுரை இளங் கௌசிகனார்

ஆளி—யாளி. அணங்கு—வருத்தம். ஒருத்தல்—களிறு. மீளி—தலைவன். வேழம்—யானை. புலம்ப—வருந்த. ஏந்தல்—உயர்ந்த. வாங்கி—பறித்து. அஞ்சுவர—அச்சத்தைத் தரும். மஞ்சு—மேகம். தப—கெட; வறண்டுபோக. கான்று—கக்கி. அலங்கு—அசைகின்ற. கதிர் மண்டிலம்—(இங்கு) சூரியன். சூன்று—அகழ்ந்து. நிரம்பா—முடிவே இல்லாத; செல்லத் தொலையாத. கற்று—கன்று. உரி—உரித்த (தோல்). குடம்பை—கூடு. கதம்—சினம். வெரு—அச்சம். கவலை—கவர்ந்த வழி. குருதி—இரத்தம். ஆடிய—படிந்த; தோய்ந்த. இரும்—பெரிய. எருவை—ஆண் பருந்து. ஈண்டு—கூடும்; கூடிய. கிளை—சுற்றம். தொழுதி—கூட்டம். கொள்ளை—கொண்டமை;

39 *THE TWO UNFORTUNATES*

O my heart! In that frightful wild
The leophant, that goodly beast,
Wrenches off the upcurved tusks
Of a lordly elephant, the leader of a herd,
Making him writhe in agonised pain;
And eats the tender flesh at its base.
The rain cloud is scorched
By the quivering rays of the sun
As it courses over, day after day,
Across that long and endless wilderness
Spitting fire, and swallowing all shade,
Even digging it up from beneath the ground.
Wild men of the north hurry to and fro
With baited traps of flayed calf-hide,
Urging their packs of ferocious dogs,
And armed with deadly bows
Whose fury seems to abate somewhat
At the forks of desert trails,
Where other horrors spring up.
Flocks of vultures with all their kind,
Smelling most fout of rotten carrion,
Rise up into the air as if to announce,
'Here is plenty of soft meat for all of us',
And those horrible birds turn the sky a lovely red
With the wide spread of their great wings
Deep dyed in human blood.
I have somehow crossed this fearful wild,
And my agony has been great indeed.
The graceful limbs of my dear beloved
Are drained of all their bewitching beauty,
Like the strong and mighty fortress walls
Of the foemen opposed to the King of Westland,
When they were pulled down on their defeat
By his valorous might,

மிகுதி. சாற்றி—தெரிவித்து. பறை—பறத்தல். நிவந்து எழுந்து. செக்கர்—சிவந்த. நீந்தின—கடந்து சென்ற. நம்மினும்—நம்மைவிட. பொருந்தார்—பகைவர். வினை—(போர்ச்) செயல். வல்—வலிய. தானை—சேனை. தேன்—வண்டு. இமிர்—ஒலிக்கும். வானவன்—சேரன். உடற்றிய—(போரில்) அழித்த. ஒன்னார்—பகைமையை உடையவர். (தெவ்வர்—பகைவர். எயில்—மதில். நெடில் உயிர்த்து—பெருமூச் செறிந்து. நெடு—ஆழமான. எதிர்—புதிதாக மலர்ந்த. போது—மலர். அரி—செவ்வரி படர்ந்த. தெள்—தெளிந்த.

The well-trained army under his command
Crushes all their front line defeness
In one irresistible assault.
How fragrant are his garlands
Around which bees make endless music!
And oh! I can picture now her unbearable anguish,
And her liquid red-veined eyes, a matched pair
Of fresh-blossomed bright-petalled blue-lilies,
Which the deep waters of the pool have borne
For covetous bees to feed upon. I see them
Brimming now with distilled tears.
Alas! I fear that she is more to be pitied
Than I am.

SHE Akananuru—381 MATURAI ILAMKAUCIKANAR

Leophant—a fabulous monstrous beast, a polymorph, with the body, claws, face and fangs of a lion, and an elephants trunk.

Fortress wall—A woman's beauty is often compared to that of a city. Here her ruined beauty is compared to a destroyed city.

40 வளி பூட்டினையோ?

'இருந்த வேந்தன் அருந் தொழில் முடித்தென,
புரிந்த காதலொடு பெருந் தேர் யானும்
ஏறியது அறிந்தன்று அல்லது, வந்த
ஆறு நனி அறிந்தன்றோ இலனே ; ''தாஅய்,
முயற் பறழ் உகளும் முல்லை அம் புறவில்,
கவைக் கதிர் வரகின் சீறூர் ஆங்கண்,
மெல் இயல் அரிவை இல்வயின் நிறீஇ,
இழிமின்'' என்ற நின் மொழி மருண்டிசினே ;
வான் வழங்கு இயற்கை வளி பூட்டினையோ ?
மான் உரு ஆக நின் மனம் பூட்டினையோ ?
உரைமதி—வாழியோ, வலவ !'—என, தன்
வரை மருள் மார்பின் அளிப்பனன் முயங்கி,
மனைக் கொண்டு புக்கனன், நெடுந் தகை ;
விருந்து ஏர் பெற்றனள், திருந்திழையோளே,

உழையர் அகநானூறு—384 ஒக்கூர் மாசாத்தியார்

இருந்த—பாசறைக்கண் இருந்த. முடித்து—முடித்து விட்டான். புரிந்த—விரும்பிய. வந்தவாறு வந்த நிகழ்ச்சி; வந்த வழி. தாஅய்—தாவி. பறழ்—குட்டி. உகளும்—குதிக்கும்; ஓடித் திரியும். முல்லை—நிலவகை. புறவு—காட்டிடம். கவை—கவர்த்த. நிறீஇ—நிறுத்தி. இழிமின்—இறங்குங்கள் மருண்டிசின்—மயக்கமுற்றேன்; வியப்புற்றேன். வழங்கு—இயங்கும். வளி—காற்று. மான்—(இங்கு) குதிரை. வலவ—தேர்ப்பாகனே. மருள்—ஒத்த; போன்ற. அளிப்பனன்—செறிப்பவன். முயங்கி—அணைத்து. ஏர்—சிறப்பு.

40 *THE COURSING WINDS*

'When the king's difficult task was done,
Ardent with reminisecnt love, I remember
How eagerly I got into my chariot; but I knew no more.
In no time, you had stopped before the cottage
Of my beloved in the village beside the field of millet.
Rich with forking ears of corn, within the gorgeous forest
Where little leverets frisk and play.
And, when I heard you say, 'You may get down, Sir!'
I was most amazed. Tell me, pray.
Did you change the coursing winds of the sky
Into horses, and yoke them to my chariot?
Or, did you yoke your own swifter mind?
May God bless you, my charioteer—
So said he, and hugging his charioteer to his chest,
Broad and rock-hard, he has entered his home.
So, the well-jewelled lady, will hold a great celebration now.

NEIGHBOURS Akananuru-384 OKKUR MACATTIYAR

3

KALITTOKAI

கலித்தொகை

41 நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே

'எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்,
உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்,
நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஒரா நெஞ்சத்துக்
குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்!
வெவ் இடைச் செலன் மாலை ஒழுக்கத்தீர் ; இவ் இடை
என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்,
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர் ;
அன்னார் இருவரைக் காணிரோ ? — பெரும !'
'காணேம் அல்லேம் ; கண்டனம், கடத்திடை ;
ஆண் எழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய
மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்.

பல உறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவை தாம் என் செய்யும் ?
நினையுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை,
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவை தாம் என் செய்யும் ?
தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவை தாம் என் செய்யும் ?
சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

என ஆங்கு—

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின் ;
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறம் தலைபிரியா ஆறும் மற்று அதுவே.

செவிலித்தாயும் முக்கோற் பகவரும்
கலித்தொகை : 9 **நல்லந்துவனார்**

பாலைக் கலிப் பாடல்களைப் பாடியவர் பெருங் கடுங்கோன் என்று ஒருபிற்காலப் பாடல் கூஉகிறது. ஆயினும், நல்லந்துவனாரே கலித்தொகை முழுவதையும் பாடியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

41 *THE MOTHER AND THE SAGE*

Mother :

O You who walk beneath
The raised umbrella's protecting shade,
Sheltered from the hurtling rays of the Sun,
With pitchers slung from cords,
And holy trident staffs
Duly resting on your shoulders,
And with undistracted minds
Controlling the senses !
O Brahmins who tread the path of virtue,
And whose ordained duty bids you go
Across this torrid desert !
Did you not, O Brahmins, see them here !
And did you not too, O Venerable Sir !
Did you not see those two,
My own daughter,
And another woman's son,
Who had met each other in secret,
But are declared lovers now ?

Sage :

How could we say we did not see them ?
We met them both on the desert path :
A youth of noble bearing we saw,
And with him was an artless maiden,
Richly jewelled,
Bravely treading the difficult desert.
Her mother you seem to be.

The fragrant sandal, sylvan-born,
Serves only those who rub it on :
No good is it to its mountain mother.
If you reflect,
Even such in your daughter unto you.

எறித்தரு—உறைக்கின்ற. உறி—பின்னிய கயிற்று உறி. கரகம்—கமண்டலம். உரைசான்ற—அரி, அயன், அரன், என்னும் மூவரும் ஒருவரே என்று கூறும். முக்கோல்—சந்நியாசிகள் ஏந்தும் திரிதண்டம்; முத்தீயையும் உணர்த்தும். சுவல் அசைஇ—தோளிலே வைத்து. வேறு—(இங்கு) தவறு. ஓரா—நினை யாத. கொளை—கொள்கை. அக்தணீர்—அந்தணர்களாகிய சீடர்கள். செலன் மாலை—போதலை ஒழுக்கமாகக் கொண்ட. காணிரோ—காணீரோ; காணவில்லையோ. பெரும—மாணவர் களின் ஆசிரியராகிய பெரியோய். இடை—இடம். கடம்—காடு. மாண்—அழகு. முன்னிய—போகக் கருதிய. மடவரல்—மடப் பத்தையுடைய பெண். பலவுறு—நறிய பல பொருள்கள் கூடிய. படுப்பவர்க்கு—பூசிக்கொள்பவர்களுக்கு. தேரும்—ஆராயும். முரல்பவர்—பாடுபவர். சூழும்—ஆராயும். இறந்த—மிக்க. எவ்வம்—துன்பம்; தீங்கு. படரன்மின்—செய்யக் கருத வேண் டாம். பிரியாஆறு—(பல பிறப்புக்களிலும்) பிரியாமை.

The lovely white pearl, ocean-born,
Serves only those who wear it:
No good is it to its mother, the ocean.
If you consider,—
Even such is your daughter unto you.

The music sweet of seven notes,
Though born of the lute
Charms but the ear of the lute-player
No good is it to its parent lute.
If you ponder,—
Even such is your daughter unto you.

Therefore,
Grieve not for her sake:
To her true love she is constant.
She has preferred the company
Of a goodly, noble youth.
Verily, I say unto you
This indeed is the path of dharma.

A DIALOGUE Kalittokai-9 NALLANTUVANAR

Dharma - This word, which in the context means 'right and moral behaviour', has been taken from the common treasury (or till) of the world, and is now an English word as well. English has gained, and there is no loss to the treasury. There is no loan or debt.

1. The fountains mingle with the river,
   And the rivers with the ocean;
   The winds of heaven mix for ever
   With a sweet emotion;
   Nothing in the world is single;
   All things, by a law divine
   In one another's being mingle
   Why not I with thine?

   Love's Philasophy — SHELLEY

2. Torches are made to light, jewels to wear,
   Dainties to taste, fresh beauty for the use,
   Things growing to themselves are growth's abuse.

   Venus and Adonis — SHAKESPEARE

3. Love is the fulfilling of the Law.

   The Epistle of Paul to the Romans—BIBLE

42 செறிக நின் வளையே

வறியவன் இளமை போல், வாடிய சினையவாய்,
சிறியவன் செல்வம் போல், சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,
யார்கண்ணும் இகந்து செய்து இசை கெட்டான் இறுதிபோல்,
அலவுற்றுக் குடி கூவ, ஆறு இன்றிப் பொருள் வெஃகி,
சொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்
உலகு போல், உலறிய உயர் மர வெஞ் சுரம் ——

இடை கொண்டு பொருள்வயின் இறத்தி நீ எனக் கேட்பின்,
உடைபு நெஞ்சு உக, ஆங்கே ஒளியோடற்பாள்மன்னோ—
படை அமை சேக்கையுள் பாயலின் அறியாய் நீ
புடைபெயர்வாய் ஆயினும், புலம்பு கொண்டு இனைபவள் ?

முனிவு இன்றி முயல் பொருட்கு இறத்தி நீ எனக் கேட்பின்,
பனிய கண் படல் ஒல்லா படர் கூர்கிற்பாள்மன்னோ —
நனி கொண்ட சாயலாள் நயந்து நீ நகையாகத்
துனி செய்து நீடினும், துறப்பு அஞ்சிக் கலுழ்பவள் ?

என ஆங்கு—

'வினை வெஃகி நீ செலின், விடும் இவள் உயிர்' என,
புனையிழாய் ! நின் நிலை யான் கூற, பையென,
நிலவு வேல் நெடுந் தகை நீள் இடைச்
செலவு ஒழிந்தனனால் ; செறிக நின் வளையே !

தோழி கூற்று **கலித்தொகை—10** **நல்லந்துவனார்**

வறியவன்—ஏழை. சினை—கிளை. சிறியவன்—பெருந்தன்மை இல்லாதவன். நிழல்—(இங்கு) பாதுகாப்புத் திறன். இகந்து—மீறி. இறுதி—முடிவு. தெறுதல்—சுடுதல். அலவு—வருத்தம்; மனத்தடுமாற்றம். ஆறு—போக்கு. வெஃகி—விரும்பி. வினைவர்—அமைச்சர். கோல்—செங்கோல். கோடி—சாய்ந்து. உலறிய—காய்ந்து போன. இறத்தி—கடந்து செல்வாய். உக—உடைந்துபோக. ஒளி—அழகு. படைஅமை—கண்களில் உறக்கம் தோன்றுகின்ற. புடைபெயர்தல்—இடைவெளி உண்டாகும்படி நகர்தல். முனிவின்றி—கோபம் இல்லாமல் (விளையாட்டாக). கலுழ்பவள் - கலங்குகின்றவள். புலம்பு—தனிமை. அறியாய்—

42 *HE WILL NOT GO*

'In yonder torrid desert
Where the radiant rays of the sun
Scorch and burn with fierce heat,
Every sprig and leaf in the boughs of trees
Wilts and droops,
As droops the blasted youth
Of young men in their prime
Caught in penury's grip :
The shadeless trees give no shelter
To those who come near,
And stand as useless
As the unused riches of paltry men ;
Tall trees have perished entire,
Branch, stem, and root,
As perish with all their kin
Bad men of the earth,
Who transgress virtue's ordained path,
And do evil unto others
Besmirching their good name
Look !
Even the loftiest trees
Stand parched and bare,
As stand the people of a land
Lamenting loud, all hope abandoned,
And sunk in deep despair,
When their tyrannous king —
Covetous and greedy,
And misled into brutal wrong
By his villainous ministers,
Who shrink not even from murder —
Treads unrighteous paths
And lets his upright sceptre swerve,
While his kingdom
Which should stay secure
Lies around him in ruins.

—5—

தன்னை) அறியாமல். இனைபவள்—வருந்துபவள். இறத்தி—நீங்குவாய். பனிய—நீர்த்துளிகளையுடைய. படர் கூர்கிற்பாள்—மிக வருந்துவாள். நனி—மிகுதி. சாயல்—அழகு. துனி—பிரிவு. மயல் கூர்கிற்பாள்—மிக்க மயக்கம் அடைவாள். நிலவு—நிலைபெறும். செலவு ஒழிந்தனன்—போதலை நிறுத்திக் கொண்டான் (நீங்கினான்; தவிர்ந்தான்).

ஒப்புமை: 'கொடிது, கொடிது, வறுமை கொடிது: அதனினும் கொடிது இளமையில் வறுமை.'

Don't you remember
How my friend felt lost and lonely
When upon your downy couch
You turned over in your sleep,
And, all unknowingly,
Left the tiniest gap between you and her,
And what agonies she suffered
At even such a parting?
If she should hear
That you mean to part from her
And go in quest of transient wealth
Putting the vastness of that horrid desert
Between you two,
On that very instant
Her heart will surely break
And lie shattered at her feet,
And she would grow deathly pale,
And all the gladsome light
Flee from her lovely face.
When in the past you told her once
In coaxing accents and in fun
That you would be going away
And might perhaps tarry a bit,
She, whose glamorous linbs gleam
With an exceeding beauty,
Felt the sharpest misery,
Thinking that you meant to desert her.
Can't you realise that if she heass
That, with no qualms whatever,
You mean to go seeking toilsome wealth,
Her dew-soft eyes would refuse
To close in sleep, and she would suffer
Direst anguish?
Most constant and unceasing
Were your passionate looks of love
With never an unkindly glance

That could darken the heart.
If those looks of love
Ceased for the tiniest moment,
She would grow faint and sick unto death;
If you really part from her,
She would lose her bewitching glamour,
And drop down in a daze.
If you leave her behind and go away
Desiring to work hard for wealth,
Most surely she will die', I told him. —
How lovely are your jewels ! —
When I reminded him of these,
That great and noble man
Whose lance flashes moon-beams bright,
Decided that he would not go.
So, my dear, may all your bangles
Stay firmly upon your lovely arms !

HER FRIEND KALITTOKAI-10 NALLANTUVANAR

This verse has been ascribed to Perunkatunko in a late verse. But scholars think that Nallantuvanar is the author.

43 நாணின்மை செய்தேன்

கய மலர் உன்கண்ணாய் ! காணாய் : ஒருவன்
வய மான் அடித் தேர்வான் போல, தொடை மாண்ட
கண்ணியன், வில்லன், வரும் ; என்னை நோக்குபு,
முன்னத்தின் காட்டுதல் அல்லது, தான் உற்ற
நோய் உரைக்கல்லான் பெயரும்மன், பல் நாளும்;
பாயல் பெறேஎன், படை கூர்ந்து, அவன்வயின்
சேயேன்மன் யானும் துயர் உழப்பேன்: ஆயிடைக்
கண் நிள்று கூறுதல் ஆற்றான், அவனாயின்;
பெண் அன்று, உரைத்தல், நமக்காயின் ; 'இன்னதூஉம்
காணான் கழிதலும் உண்டு' என்று, ஒரு நாள் என்,
தோள் நெகிழ்பு உற்ற துயரால் துணிதந்து, ஓர்
நாண் இன்மை செய்தேன் ; நறுநுதால் ! ஏனல்
இனக் கிளி யாம் கடிந்து ஓம்பும் புனத்து அயல்,
ஊசல் ஊர்ந்து ஆட, ஒரு ஞான்று வந்தானை,
'ஐய ! சிறிது என்னை ஊக்கி' எனக் கூற,
'தையால் ! நன்று' என்று அவன் ஊக்க, கை நெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன், அவன் மார்பின்; வாயாச் செத்து,
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய் அறியாதேன் போல் கிடந்தேன்மன் ; ஆயிடை
மெய் அறிந்து ஏற்று எழுவேனாயின், மற்று ஒய்யென,
'ஒண்குழாய் ! செல்க' எனக் கூறி, விடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்.

தலைவி **கலித்தொகை : 37** **நல்லந்துவனார்**

இதுவும் (அடுத்த பாடலும்) கபிலர் பாடியதாகப் பிற்காலப் பாடல் ஒன்று கூறுகிறது. ஆயினும் இதைப் பாடியவர் நல்லந் துவனாராகவே இருக்கலாம் என்பது ஆய்வாளரின் கருத்து.

பழைய குறிப்பு இது 'தோழி கூற்று' என்று சுட்டுகிறது. ஆயினும் இது தலைவியின் கூற்றாகவே தோன்றுகிறது.

தொகைநூல் ஆசிரியர் இதைத் தோழி கூறியதாகக் குறிப்பிடு கிறார். ஆனல் இது தலைவியின் கூற்றாகவே இங்குக் கொள்ளப் பட்டுள்ளது.

43

THE SWING

My dear,
Your eyes tipped with black
Are like blue-lilies of the pool!
Look!
For some time past
I had noticed
A peerless man,—
A huntsman be seemed,—
Who came near our field
Apparently following the tracks
Of his quarry,
Some mighty beast of the wild.
He wore in his hair
A chaplet of flowers
Woven with skill;
And he was a bowman bold.
Often did he come,
And as often looked at me:
But never by so much as a word
Did he, at any time, reveal
How sick he was with love;
But its signs were clear,
And they betrayed him.
Yet in silence did he come,
And in silence did go back.
He was no kin of mine,
But a stranger.
Yet I lay tossing upon my bed
Thinking of him
And of his great distress;
And for sheer pity of him
I could not sleep:
And — I too suffered,
As for him,

காணாய்—ஆராய்ந்து பார். ஒருவன்—ஒப்பில்லாதவன். வயமான்—வலிமையுடைய யானை முதலிய விலங்கு. தொடை—தொடுக்கப்பட்டமை. மாண்ட—சிறந்த. நோக்குபு—பார்க்கும் போது. முன்னம்—குறிப்பு. கண் நின்று—எதிர் நின்று. கழிதல்—நீங்குதல்: (இறந்துபடுதல்) நாணின்மை—நாணமில்லாத செயல். இனக் கிளி — கிளி இனம். கடிந்து—வெருட்டி. வாயாச் செத்து—உண்மையாகக் கருதி. மெய்யறியாதேன்—உணர்வில்லாதவள். ஏற்று—(இங்கு) மயக்கம் நீங்கி. ஒய்யென—விரைவாக.

He would not whisper a word of love,
But from where he was, he stood and gazed.
And as for me,
It would have been unmaidenly
To have declared
How I felt towards him.
But alas !
As he did not seem to know
How I felt
I feared that it might be
The death of both of us.
And so, one day,
When I saw my fair shoulders
Wasting, growing thinner and thinner,
Through love-sick longing,
Despair made me over-bold ;
And I took courage—
O my dear, How sweet
Is the fragrance of your brow !—
I did something audacious.
I climbed upon the swing,
The one you and I had set up
Beside the fields of millet
We had been sent to watch,
And sitting upon which
Used to scare off
The flocks of parrots
Which came for our corn.
I sat upon that swing,
Gently swinging it to and fro ;
And presently, he came there.
I spoke to him, and said,
'Sir, will you please push this swing
Up and down a little more?'
And he replied sweetly,
'So shall I, my lady!'

And then,—
No sooner had he pushed the swing
Than I let go my hands
And slipped and fell.
Thinking that it wes an accident
Which had thrown me upon his chest,
He caught me as I was falling,
And gathering me, held me close;
And I lay content there
As in a faint.
Had I but stirred then,
Or had opened my eyes,
He would have loosened his hold,
Telling me, —
My dear! How bright is the sheen
Of the pendents in your ear!—
'If somebody should see us thus
It would not be well:
So I think you had better go now
In time'.
So great is his love for me
That he would have rather,
For my dear sake,
Let me go.

SHE KALITTOKAI-37 NALLANTUVANAR

This poem as also the next is ascribed to Kapila in a late verse. But scholars think Nallantuvanar is the author.

44 உண்ணு நீர் விக்கினான்

சுடர்த்தொடீஇ ! கேளாய் ! — தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப் பந்து கொண்டு ஓடி,
நோ தக்க செய்யும் சிறு பட்டி, மேல் ஓர் நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!
உண்ணு நீர் வேட்டேன்' என வந்தாற்கு, அன்னை,
'அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய் !
உண்ணு நீர் ஊட்டி வா' என்றாள் : என, யானும்
தன்னை அறியாது சென்றேன் ; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு,
'அன்னாய் ! இவன் ஒருவன் செய்தது காண்' என்றேனா,
அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்,
'உண்ணு நீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான் போல் நோக்கி, நகைக் கூட்டம்
செய்தான், அக் கள்வன் மகன்.

தலைமகள் கலித்தொகை : 51 நல்லந்துவனார்

சுடர்த் தொடீஇ—ஒளி வீசுகின்ற வளையல்களை அணிந்தவளே! கேளாய்—கேட்பாயாக. சிற்றில்—சிறிய வீடு. காலில்—காலால். அடைச்சிய—செருகிய. கோதை—பூமாலை. பரிந்து—அறுத்து. நோதக்க—வருந்தக்கூடிய. பட்டி—நெறிமுறை இன்றி அடங்காமல நடப்பவன். இல்லிரே—வீட்டின் உள்ளே இரப்பவர்களே! வேட்டேன்—விரும்பினேன். அடர்ப் பொன் சிரகம்—தகட்டுப் பொன்னால் செய்த செம்பு. வாக்கி—வார்த்து. சுடர் இழாய்—ஒளி வீசுகின்ற நகையை அணிந்தவளே!. நலிய—வருந்த; இறுகப் பற்ற. படர்தர—நெருங்க வர. புறம்பழித்து—முதுகைத் தடவி; (வைது). நகைக் கூட்டம்—மகிழ்ச்சிக்கு இடமான சந்திப்பு. கள்வன் மகன்—கள்வனாகிய மகன்; கள்வனுடைய மகன்.

44 *LOVE'S TRICKERY*

Dear Bright-Bangle!
Please listen to this.
It happened on a day
When my mother and I
Were alone in the house.
Someone came to our door,
And called out,
'O you good house-folk,
May I crave some water to drink?'
He it was, that scape-grace imp,
Who came to tease us oft,
And trample with his feet
The little toy-houses of sand
Which we used to build
In the street whereon we played;
And to wrench off the chaplets
Which we wore in our hair;
And to run off with our ball
Painted with many a stripe.
He indeed it was:
But we knew it not.
So my mother called to me and said,
'My lovely darling!
Take him some water to drink
In a goblet of beaten gold!
I, all unsuspectingly,
Took it there to him.
Then suddenly he caught my bangled wrist
In a grip that hurt.
Confused, I cried out,
Mother, mother! Look at what he has done!'
But when my mother came running up
Letting out a shriek,
I just told her,

'This young man choked
As he was drinking!'
And then, while my anxious mother
Gently stroked his back up and down,
Out of the corner of his roguish eye
He shot killing glances at me,
Smiling all the time
That son of a villain.

SHE KALITTOKAI—51 NALLANTUVANAR

45 தம் புகழ் கேட்டார் போல்

அகன் ஞாலம் விளக்கும் தன் பல் கதிர் வாயாகப்
பகல் நுங்கியது போலப் படு சுடர் கல் சேர,
இகல் மிகு நேமியான் நிறம் போல இருள் இவர,
நிலவுக் காண்பது போல அணி மதி ஏர்தர,
கண் பாயல் பெற்ற போல் கணைக் கால மலர் கூம்ப,
தம் புகழ் கேட்டார் போல் தலை சாய்த்து மரம் துஞ்ச,
முறுவல் கொள்பவை போல முகை அவிழ்பு புதல் நந்த;
சிறு வெதிர்ங் குழல் போலச் சுரும்பு இமிர்ந்து இம்மென,
பறவை தம் பார்ப்பு உள்ள, கறவை தம் பதிவயின்
கன்று அமர் விருப்பொடு மன்று நிறை புகுதர,
மா வதி சேர, மாலை வாள் கொள,
அந்தி அந்தணர் எதிர்கொள, அயர்ந்து
செந் தீச் செவ்அழல் தொடங்க — வந்ததை
வால் இழை மகளிர் உயிர் பொதி அவிழ்க்கும்
காலை ஆவது அறியார்,
மாலை என்மனார், மயங்கியோரே.

தலைவி **கலித்தொகை : 119** **நல்லந்துவனார்**

விளக்கும்—பலருக்கும் தோற்றுவிக்கும். நுங்கி—விழுங்கி. படு சுடர்—தாழ்கின்ற சூரியன். கல்—மேற்குமலை. (அத்தகிரி) இகல் மிகு—பகைவர்களை வெல்லும். நேமி—சக்கராயுதம். இவர—பரந்து வர. ஏர்தர—அழகு செய்ய. பாயல்—(இங்கு) துயில். கணைக்கால்—திரண்ட தண்டுகளை உடைய. துஞ்ச—தூங்க. அவிழ்பு—அலர்ந்து. புதல்—(புதரின்) தூறு. நந்த—மகிழ. வெதிர்—மூங்கில். இமிர்ந்து—ஆர்ப்பரவம் செய்து; ஒலித்து. பார்ப்பு—குஞ்சு. உள்ள—எண்ண. பதி—தங்கும் ஊர் (இடம்). அமர்—படிந்த; கொண்ட. மன்று—பசுக்களைக் கட்டும் இடம். மா—விலங்கினம். வதி—விலங்கு முதலியன தங்கும் இடம். வாள்கொள—விளக்கம் கொள்ள; விளங்க. அந்தி—மாலைக் காலம். அயர்ந்து—வழிபட்டு. வால் இழை—ஒளி வீசும் அணிகலங்களையுடைய. பொதி—பொதிந்துள்ள உடல். அவிழ்த்து — விடுபடச் செய்யும். காலை—வேளை; நேரம். என்மனார்—என்பார்கள். மயங்கியோர்—மயக்கம் கொண்ட அறிவை உடையவர்கள்.

45 *EVENING*

The glorious sun, which had illumined
The wide world with its myriad rays,
Has swallowed the day entire
With those same rays for mouths.
And has set behind the western mountains :
Darkness, as black as the hue of the god
Who with his discus the stronger proved
In every war he waged, has come on apace ;
The lovely moon has risen as if to look
At his own silver light,
And has clothed the earth in sheer beauty.
Like learned, noble men bending their modest heads
When they hear their own praises sung,
Sleeping trees have bent down their boughs ;
Shrubs of green-leaved jasmine seem to smile in joy
With rows of their white, blossoming buds;
Joyful bees hum as loud and sweet
As thin bamboo stems whistling in the wind ;
Birds come winging home to their nests
With fond thoughts of their nestling brood ;
Grazing cows hurry back to their sheds
In the farmstead with loving thoughts
Of their calves, and fill the empty pens :
All domestic beasts make for their tethering stalls :
Brahmins engage themselves in their ordained rites :
Women light bright, lamps with reddish flames in their homes
With the red and flaming tips of lighting wicks :
Thus has come the evening.
Not knowing that it is the time
Which cuts off in their prime
The lives of young and jewelled women,
And loosens this knots of life, severing it from the bodies
Of women parted from their lovers,
Some foolish people say that it is only a time of day, —
Poor, poor, deluded folk!

SHE Kalittokai-119 NALLANTUVANAR

4

KURUNTOKAI

குறுந்தொகை

46 கூந்தலின் நறியவும் உளவோ?

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,
காமம் செப்பாது, கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயல்,
செறி எயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே?

தலைவன் குறுந்தொகை-2 இறையனார்

கொங்கு—பூந்துகள். தேர்—ஆராய்ந்து (உண்ணும்). அம்—அழகிய; (உள்ளிடம்). சிறை—சிறகு. தும்பி—தேனீ (வகை) காமம்—மனம்போல. செப்பாது—சொல்லாமல். கண்டது—உண்மையாகக் கண்டதை. மொழிமோ—சொல்வாயாக. பயிலியது—(முன்னர்ப்) பல பிறப்புக்களில் பழகியதால் பெற்றது. கெழீஇய—பொருந்திய. இயல்—தன்மை. செறி—நெருங்கிய. எயிறு—பல். கூந்தலின்—கூந்தலைப் போல; கூந்தலைவிட.

46 *O BEE!*

Questing life-long for choicest pollen,
You flit on dainty wing, O bee!
Pray do not jest, but tell me truly
What in fact you have seen.
Is there any among the flowers you have known
Sweeter than the tresses of this coy young maiden,
With peacock's beauty, graceful gait,
Perfect teeth, white and straight,
Timorous nature, eternal love?

HE Kuruntokai-2 IRAIYANAR

This rhapsody of a happy lover has parallels in many languages. Robert Browning's, 'Nay, but you who do not love her', and Poems in from the Sanskrit - John Brough's translation (Penguin) — 'Bee you fly so far around', are two examples. A later Tamil poet, Kampan expresses the same idea in his *Ramayana-Urukkattu Patalam* verse 57 (Murray Edition).

47 நாடனொடு நட்பு

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே; சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு,
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

தலைவி **குறுந்தொகை 3** **தேவகுலத்தார்**

உயர்ந்தன்று—உயர்ந்தது. நீரினும்—கடலைவிட. ஆர் அளவின்று—அளத்தற்கு அரிய ஆழம் உடையது. சாரல்—மலைப்பக்கம். கோல்—கொம்பு; குச்சி. குறிஞ்சிப்பூ—பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூப்பதாகக் கூறப்படும் பூ. பெருந்தேன்—பெரிய தேன் இறால்; சிறந்த இறால். இழைக்கும்—அமைக்கும். நாடனொடு—நாடனுக்கு என்மீதும் எனக்கு அவன் மீதும் உள்ள (மூன்றாம் வேற்றுமை). நட்பு—காதல்.

47 *OUR LOVE*

Wider far than the earth,
Loftier far than the heavens,
And deeper far than the unplumbable sea,
Is our love—
The love between me and the lord of the land
On whose hill-slopes bees make rich honey
From the flowers of the dark-stemmed conehead-shrubs.

SHE Kuruntokai-3 TEVAKULATTAR

Compare :

Mrs. Browning's, 'I love thee to the depth, breadth, and height, that my soul can reach'

48 உண்கண் பாடு ஒல்லா

அதுகொல், தோழி! காம நோயே? —
வதி குருகு உறங்கும் இன் நிழற் புன்னை
உடை திரைத் திவலை அரும்பும் தீம் நீர்,
மெல்லம் புலம்பன் பிரிந்தென,
பல் இதழ் உண்கண் பாடு ஒல்லாவே.

தலைவி குறுந்தொகை 5 நரிவெரூஉத்தலையார்

வதி—தங்கியிருக்கும். இன்—இனிய. உடை—கரையின் மீது மோதி உடைகின்ற. திரை திரண்டு வரும் அலை. அரும்பும்—முகிழ்க்கும் (அரும்புகளைத் தோன்றச் செய்யும்). தீம் நீர்—(கண்ணுக்கு, இனிதாகிய நீர்ப் பரப்பு. புலம்பன்—கடற்கரையை உடையவன். பல்இதழ்—தாமரை. உண்கண்—மை தீட்டிய கண். பாடு—இமை பொருந்துதல். ஒல்லா—செய்யா; பொருந்த மாட்டா.

48 *IS THIS LOVE?*

The gentle chief of that land by the sea,
Where the lapping waves break
Upon the pleasant beach
And water by their spray the mast-head trees,
Which richly bloom,
And where in the shade
Of the sea-side groves
Nesting herons sleep,
Is parted from me :
And my eyes soft as lotus petals
Are unwilling to close in sleep.
Is this the thing
They call love, my dear?

SHE Kuruntokai-5 NARIVERUTTALAIYAR

49 ஓர் யான் துஞ்சாதேன்

நள்ளென்றன்றே, யாமம்; சொல் அவிந்து,
இனிது அடங்கினரே, மாக்கள், முனிவு இன்று;
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர் யான் மன்ற துஞ்சாதேனே.

தலைவி | குறுந்தொகை-6 | பதுமனார்

நள்—ஓர் ஒலிக் குறிப்பு; செறிந்த. யாமம்—இடை இரவு. மாக்கள் மனிதர், விலங்கு, முதலியவை. அவிந்து—அடங்கி. ஓய்ந்து. நனந்தலை - அகன்ற இடத்தையுடைய. முனிவு—வெறுப்பு; கோபம். துஞ்சும்—உறங்கும். ஓர் யான்—யான் ஒருத்தியே.

49 *ALL THE WORLD SLEEPS*

Pitch dark is this midnight hour :
All speech is hushed :
And mankind, anger and hate laid aside,
Is lapped in slumber sweet ;
The whole wide world sleeps, now :
But alas ! I am sleepless :
I'm sure, I alone.

SHE　　Kuruntokai-6　　PATUMANAR

Compare :

1. The grasshopper is silent on the grass;
   The lizard with his shadow on the stone
   Rests like a shadow; and the cicada sleeps;
   The purple flowers droop; the golden bee is lily-cradled;
   I alone awake.　　*Oenone*—TENNYSON

2. Laid on my bed in silence of the night ;
   There is no sound of voices; hushed the strets ;
   Not a bird twitters; even the dogs are still;
   I, I alone of all men dare not sleep ;
   But follow, Lord of Love, Thy imperious will.
   Medieval Latin Lyrics—HELEN WADDELL

50 மடவம் நாமே

அருளும் அன்பும் நீக்கி, துணை துறந்து,
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக?
மடவம் ஆக, மடந்தை, நாமே!

தலைவி **குறுந்தொகை-20** **கோப்பெருஞ்சோழன்**

நீங்கி—துறந்து; கைவிட்டு. துணை—(இங்கு) தலைவி. துறந்து—விட்டுப் பிரிந்து. வயின்—பொருட்டு (ஏழாம் வேற்றுமை உருபு) உரவோர்—வலிமை உடையோர்; அறிவுடையோர். மடவம்—அறிவு இல்லாதவர்கள் (மடமையை உடையவர்கள்).

50 *LET US BE FOOLS*

If they are the wise folk
Who cast love and pity aside,
And leave their dear ones,
To go in quest of wealth,
Let those men hard of heart,
Rejoice in their wisdom :
But let us be fools, my dear.

SHE Kuruntokai-20 KOPPERUNCOLAN

Compare :

Let merchants traverse seas and lands,
For silver mines and golden sands,
Whilst I beside some shadowy rill,
Just where its bubbling fountain swells,
Do sit and gather stones and shells,
And hear the tale the black-bird tells—
And let the world laugh an it will.

—LONGFELLOW

51 நன் நெடுங் குன்றம்

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே;
இன்னும் பாடுக, பாட்டே—அவன்
நல் நெடுங் குன்றம் பாடிய பாட்டே.

தோழி **குறுந்தொகை-23** **ஔவையார்**

அகவன் மகள்—தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சி. மனவுக் கோப்பு—சங்கு மணிகளால் ஆகிய கோவை. பாடுக—பாடுவாயாக.

51 ***O SIBYL***

O Sibyl, Sibyl !
O Sibyl whose long white locks
Of straggling hair
Match the strings of shells
Which you wear !
O Sibyl! Pray sing that song
The song that you sang
O his tall, good mountain;
Pray sing it again.

HER FRIEND Kuruntokai-23 AVVAIYAR

52 குருகும் உண்டு

யாரும் இல்லை; தானே கள்வன்;
தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?
தினைத் தாள் அன்ன சிறு பசுங் கால,
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்,
குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே.

தலைவி **குறுந்தொகை-25** **கபிலர்**

யாரும்—அவனைத் தவிர வேறு ஒருவரும். பொய்ப்பின்—சூளுறவு கூறியதை இல்லை என்று பொய்யாக மறுத்தால். எவன்—எதை; என்ன. தாள்—அடித்தண்டு. பசும்—பசிய நிற முடைய. கால—கால்களையுடைய. ஒழுகும்—ஓடுகின்ற. ஆரல்—ஒருவகை மீன். பார்க்கும்—வருகையை எதிர்பார்த்து நிற்கும். மணந்த—(களவில்) புணர்ந்த. ஞான்று—பொழுது; நாள்.

52 *A HERON TOO WAS THERE*

When he, my secret lover,
Plighted his troth,
No one was there
But the deceiver himself :
And if he prove false--
Alas for me !
What can I do ?—
But, there stood a heron
On lanky legs
Green like millet stalks,—
A heron looking for fish
In the running brook.

SHE Kuruntokai-25 KAPILAR

53 தொடர்பும் தேயுமோ?

காமம் ஒழிவது ஆயினும்—யாமத்துக்
கருவி மா மழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட!—எம்
தொடர்பும் தேயுமோ, நின்வயினானே?

தோழி குறுந்தொகை – 42 கபிலர்

காமம்—புணர்ச்சி விருப்பம். யாமத்து—நடு இரவில். கருவி மா மழை—இடி, மின்னல், முதலியவற்றோடு கூடிய கரிய மேகம் பெய்யும் மழை. விடரகத்து—மலை முழைஞ்சுகளில். இயம்பும்—ஒலிக்கும். தொடர்பு—நட்பு. தேயும்—குறைந்து அழியும். நின் வயின்—உன்மீது.

53 *PASSION CEASES; LOVE ENDURES*

O Chief of that fair land
Where roaring waterfalls echo
In the dark and middle night
From within rocky clefts and caves
Long after the pouring rain
Armed with thunder and lightning
Had come down in heavy torrents !
Do you really think that her love for you
Would be blunted, or ever wear thin,
Even if your sweet and passionate dalliance
Should ever cease ?

HER FRIEND Kuruntokai-42 KAPILAR

54 மாலையும் புலம்பும்

ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனை இறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின் நுண் தாது குடைவன ஆடி,
இல் இறைப் பள்ளித் தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும், புலம்பும்;
இன்றுகொல்—தோழி! அவர் சென்ற நாட்டே:

தலைவி குறுந்தொகை—46 மாமிலாடன்

சாம்பல்—வாடிய மலர். கூம்பிய—குவிந்த. சிறகர்—சிறகுகளை யுடைய. மனை உறை—வீட்டிலே தங்கும். குரீஇ—குருவி. உணங்கல்—உலரும் தானியங்களை. மாந்தி—தின்று. மன்றத்து—ஊர்ப் பொது இடத்தில். தாது—பொடி குடைவன—குடைந்து. ஆலி—விளையாடி; நீரில் குளிப்பதைப் போலக் குளித்து. இறை—இறப்பு. பள்ளி—படுத்து உறங்கும் இடம். பிள்ளை—குஞ்சுகள். வதியும்—தங்கி வாழும். புன்கண்—துன்பத்தைத் தருகின்ற. புலம்பு—தனிமை. இன்றுகொல்? — இல்லையோ?

54 *SPARROWS*

A few little sparrows,
Whose folded wings
Are like wilting lilies,
Nest within our house.
They fly out and peck
At the corn left drying
In our courtyard ;
And they joyously roll
In the fine mud heap
Upon the village common :
But towards evening,
They all come home
To nestle with their young
In the roof of our house.
    Are there not, my dear,
Such nesting sparrows,
Or these lonely evenings.
In that far-off land
To which my beloved has gone ?

SHE Kuruntokai-46 MAMILATAN

55 மடவ கொன்றை

மடவ மன்ற, தடவு நிலைக் கொன்றை—
கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொம்பு சேர் கொடி இணர் ஊழ்த்த,
வம்ப மாரியைக் கார் என மதித்தே.

தலைவி **குறுந்தொகை—66** **கோவர்த்தனார்**

மடவ—அறிவின்மையை உடையவை. மன்ற—நிச்சயமாக. தடவு நிலை—அகன்ற அடிப் பகுதியை உடைய. பிறங்கு—விளங்கும். அத்தம்—பாலை நிலத்து அரிய வழி. பருவம்—(இங்கு) கார்ப்பருவம். அளவை—காலத்திலே. வாரா அளவை—வருவதற்கு முன்னாக. வம்ப மாரி—பருவம் அல்லாத காலத்தில் புதிதாக வந்த மழை. நெரிதர—நெருங்கும்படி; நெருக்கமாக. இணர்—பூங்கொத்து. ஊழ்த்த—புறப்படச் செய்தன,

55 *STUPID LABURNUMS*

I do know for sure
That these laburnums, thick of trunk,
Are utterly stupid : for they have taken
These passing premature rains for the truly seasona
And have put forth from their branching boughs
Strings of clustering flowers, closely crowding,
Though the season, which he named
Ere he started to journey on the difficult path
Strewn with rocks glinting in the sun,
Has not yet arrived in fact.

HER FRIEND   Kuruntokai-66   KOVARTTANAR

56 கொடு மணி

சிறை பனி உடைந்த சேயரி மழைக் கண்
பொறை அரு நோயொடு புலம்பு அலைக் கலங்கி,
பிறரும் கேட்குநர் உளர்கொல்?—உறை சிறந்து,
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து,
ஆண் நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நா நவில் கொடு மணி நல்கூர் குரலே.

தலைவி குறுந்தொகை—86 வெண்கொற்றன்

சிறை—(சிறையில் இட்டது போல்) தடுக்கப்பட்ட. பனி—நீர் உடைந்த—துளிகள் உடைந்து உதிர்கின்ற. சே அரி—செந்நிற மான வரிகளை உடைய. மழை—குளிர்ச்சியையுடைய; மழையைப் போன்ற. பொறை அரு—பொறுத்தற்கு அரிய. நோய்—(இங்கு) காம நோய். புலம்பு—தனிமை. அலை—வருத்துகின்ற. கேட்குநர்—கேட்பவர்கள். உறை—மழைத் துளி. சிறந்து—மிக்கு. ஊதை—வாடைக் காற்று. தூற்றும்—தூவுகின்ற. கூதிர்—பருவம். யாமம்—நள்ளிரவு. ஆன்—எருது. நுளம்பு—ஈ. உலம்பு தொறும்—ஒலிக்கும்தோறும். நா—மணியின் நா. நவில்—ஒலிக்கின்ற. கொடு—கொடிய. நல்கூர் குரல்—மெல்லி தாக ஒலிக்கும் குரல்.

56 *LOVE'S TORMENT*

The imprisoned dew breaks out
From my moist. red-veined eyes,
For my love has become a torment unendurable ;
And I am lonely and distraught.
Yet I hear no voice of sympathy,
But only the cruel melody
Of the softly-tinkling bell of the cow
As she shakes off the buzzing fiy,
Again and again,
In this winter's midnight
With its rain, and wind, and scattering spray.

SHE　Kuruntokai-86　VENKORRAN

57 நீரும் தீயும்

மால் வரை இழிதரும் தூ வெள் அருவி
கல் முகைத் ததும்பும் பல் மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந் தோட் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே.

தலைவன் குறுந்தொகை—95 கபிலர்

மால்வரை—பெரிய மலை. இழிதரும்—விழும்; குதிக்கும். தூ—தூய. அருவி—மலையிலிருந்து விழும் நீர்வீழ்ச்சி; விரைந்து ஓடும் நீர் ஓடை. கன்முகை—பாறையின் வெடிப்பு; மலையிலுள்ள குகை. ததும்பும்—பொங்கி வழியும்; ஒலிக்கும். சாரல்—பக்கமலை. ஓரன்ன—போன்ற; ஒத்த. சாயல்—மென்மை; உள்நின்று ஒளிரும் அழகின் ஒளி; இலாவணியம். உரன்—வலிமை. அவித்தன்று—அழித்தது.

57 *ALL-CONQUERING LOVELINESS*

On yon hillslope, amidst a medley of flowers,
Pure white cascades leap from the mountain tops
To resound from the caves of the mountain below.
There dwells a highlander with his charming daughter,
A lissom fairy plump of shoulders
Which are velvet smooth as level water.
The glossy softness of her gleaming limbs
Has quite overwhelmed my resolute will,
Unquenchable as a blazing fire.

HE Kuruntokai-95 KAPILAR

Lines 2 and 3 Alternative meaning,

To gush out from the clefts and crevices of rock,

58 வெருகிற்கு இரை ஆகுக!

குவி இணர்த் தோன்றி ஒண் பூ அன்ன
தொகு செந் நெற்றிக் கணம்கொள் சேவல்
நள்ளிருள் யாமத்து இல் எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கு இரை ஆகி,
கடு நவைப் படீஇயரோ, நீயே—நெடு நீர்
யாணர் ஊரனொடு வதிந்த
ஏம இன் துயில் எடுப்பியோயே!

தலைவி குறுந்தொகை –107 மதுரைக் கண்ணனார்

குவிஇணர்—குவிந்த பூங்கொத்துகளை உடைய. தோன்றி—செங்காந்தள். தொகு—தொக்க. செந் நெற்றி—சிவந்த நெற்றி கொண்ட. கணம்கொள்—(பெடைகளோடு) கூட்டமாக வாழும். நள் இருள்—அடர்ந்த இருள். யாமம்—நடு இரவு. இல்—வீட்டில் உள்ள. பார்க்கும்—பிடிக்கப் பார்க்கும். பிள்ளை வெருகு—காட்டுப்பூனையின் குட்டி. அல்கு இரை—சில நாட்கள் வரை வைத்து உண்ணப்படும் உணவு. கடுநவை—மிக்க துன்பம். படீஇயர்—அடைக. நெடுநீர்—ஆழமான (பரந்த) கடல். யாணர்—புது வருவாய். வதிந்த—தங்கிய. ஏம இன் துயில்—சுகமாக உறங்கிய உறக்கம். எடுப்பியோய்—எழுப்பினோய்.

58 *I CURSE YOU, COCK*

O Cock with a red red crest
Bunched like the clustering blossoms
Of the red glory-lily,
And with a bevy of hens ever around you!
I curse you, O Cock!
May you suffer acutest agonies
By being kept as a living prey
To be eaten piecemeal over many a long day
By the wild cat's kitten which prowls
In the night when darkness is deepest
Looking for rats infesting the home!
Why did you disturb my delightful sleep
Beside the Lord of the realm whose ocean's stretch
Brings him riches fresh and much?

SHE Kuruntokai-107 MATURAIKKANNANAR

59 உய்யேன் போல்வல்

மழை விளையாடும் குன்று சேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயின் படர, புறவில்
பாசிலை முல்லை ஆசு இல் வான் பூச்
செவ் வான் செவ்வி கொண்டன்று:
உய்யேன் போல்வல்—தோழி!—யானே.

தலைவி குறுந்தொகை—108 **வாயிலான்தேவன்**

மழை—மேகங்கள். கறவை—பசுக்கள். கன்றுவயின்—கன்று களிடத்தே. படர—செல்ல. புறவு—முல்லைநிலம். பசு—பசிய. ஆசில்—சிறந்த. வான்—(வால்) வெள்ளிய. செவ் வான்—செக்கர் வானம். செவ்வி—அழகிய தோற்றம். உய்யேன்—உயிர் வாழேன். போல்வல்—போலத் தோன்றுகிறது.

59 *SUNSET AND EVENING STARS*

In our little village among the mountains
Where rain-clouds tumble about in play
Gentle cows, gone at morn out to graze,
Return to the farmstead at evening's close
With fond thoughts of their calves at home.
The pure white flowers of the green-leaved jasmine
Now blossoming over the reddish land
Have seized the splendour of the spangled stars
Shining in the ruddy sunset sky.
Sights like these, my dear,
Have so harrowed my aching heart
That I think I shall die.

SHE **Kuruntokai—108** **VĀYILANTEVAN**

60 ஆண்டும் வருகுவள்

ஊர்க்கும் அணித்தே,பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே, சிறு கான் யாறே:
இரை தேர் வெண் குருகு அல்லது யாவதும்
துன்னல் போகின்றால், பொழிலே;யாம் எம்
கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே.

குறுந்தொகை—113 மாதீர்த்தன்

அணித்து—அருகில் உள்ளது. சேய்த்து—தொலைவில் உள்ளது. கான்யாறு—காட்டாறு. தேர்—நாடுகின்ற. துன்னல்—நெருங்குதல். துன்னப்போகின்றால்—வழங்குதல் ஒழிந்தன. கூழை—கூந்தல். எருமண்—எருமணம் (செங்குவளை வகை.) (களிமண் என்னும் பொருளை விட இந்தப் பொருள் சிறந்ததாகத் தோன்றுகிறது.) சேறும்—செல்வோம். வருகுவள்—வருவாள். பெரும் பேதை—தீது ஒன்றையும் அறியாத தலைவி.

60 *THE TRYST*

Hard by our village is a pool;
Not far from it flows a little forest stream;
And near too is a grove where none go near
But white-winged herons looking for prey.
I shall be going there to gather
Blue-lilies for our hair;
And she, my young and artless friend,
She too will be there.

HER FRIEND Kuruntokai—113 MĀTIRTTAN

61 சிறிய வளையும் உண்டு

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர் ஞெண்டு
கண்டல் வேர் அளைச் செலீஇயர், அண்டர்
கயிறு அரி எருத்தின், கதழும் துறைவன்
வாராது அமையினும் அமைக !
சிறியவும் உள ஈண்டு, விலைஞர் கைவளையே.

தோழி குறுந்தொகை-117 குன்றியனார்

மாரி—மாரிக்காலத்து. பார்வல்—பார்வை. பருவரல்—துன்பத்தையுடைய. ஈர்—ஈரமான. ஞெண்டு—நண்டு. கண்டல்—தாழை. அளை—வளை செலீஇயர்—செல்லும் பொருட்டு. அண்டர்—இடையர். அரி—அறுத்து. எருத்தின்—எருதைப் போல. கதழும்—விரைந்து செல்லும். அமையினும் அமைக—இருந்தாலும் இருக்கட்டும். விலைஞர்—(வளைகளை) விற்பவர்கள்.

61 *SMALLER BANGLES*

He is the lord of the ocean shore,
Where the wet crab of the sea,
Frightened by the look of the crane
Which looks like a white waterlily of early autumn.
Is uneasy at heart, and darts into the safety
Of its burrowed hole among the screwpine roots
As swiftly as a bolting bull
Broken loose from the cowherd's tethering rope.
If it so please my lord,
Let him stay where he is
With heart unmoved:
And let him not come to meet me.
There are hawkers here
Who have several smaller sizes
In bangles for wasted arms.

HER FRIEND Kuruntokai—117: KUNRIYANĀR

62 எம் அணங்கியோள்

சிறு வெள் அரவின் அவ் வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு—
இளையள், முளை வாள் எயிற்றள்,
வளையுடைக் கையள்—எம் அணங்கியோளே.

தலைவன் குறுந்தொகை-119 சத்திநாதனார்

வெள்—வெண்ணிறமான. அரவு—பாம்பு. அவ்வரி—அழகிய கோடுகளையுடைய. குருளை—குட்டி. அணங்கியாங்கு—வருத்தினால் போல. முளை—நாணல் முளை. வாள்—ஒளி. எயிற்றள்—பற்களையுடையவள். எம் அணங்கியோள்—எம்மை வருந்தச் செய்தவள்.

62 *THIS SLIP OF A GIRL*

The slender youngling
Of the silver-snake
Is striped in beauty:
Yet it convulses with pain
The lordly elephant
That roams the wild.
Even so does she,
This young slip of a girl,
With teeth which gleam
Like bulrush shoots,
And rows of golden bangles
Which shine upon her slender arms.
She convulses me quite.

HE Kuruntokai—119 CATTINĀTANĀR

63 நல்லள், அரியள்

இல்லோன் இன்பம் காமுற்றாஅங்கு,
அரிது வேட்டனையால்—நெஞ்சே! — காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியாதோயே.

தலைவன் குறுந்தொகை-120 பரணர்

இல்லோன்—பொருள் (செல்வம்) இல்லாத வறிஞன். காமுற்றாங்கு—விரும்பினுல் போல. அரிது—பெறுவதற்கு அரியதை. வேட்டனை—விரும்பினாய். நல்லள்—நன்மை தருபவள். அறிந்தாங்கு—அறிந்ததைப் போல. அரியள்—பெறுவதற்கு அரியவள்.

63 *LIKE A BEGGAR*

Like a beggar who longs in vain
For the endless joys of life,
You long for what can not be,
My dear and foolish heart!
I grant that you know
How good to me
Has been my beloved;
But you know not at all
How unattainable she is.

HE Kuruntokai—120 PARANAR

64 மாலையும் கங்குலும்

பைங்காற் கொக்கின் புன் புறத்தன்ன
குண்டு நீர் ஆம்பலும் கூம்பின; இனியே
வந்தன்று, வாழியோ, மாலை !
ஒரு தான் அன்றே ; கங்குலும் உடைத்தே !

தலைவி குறுந்தொகை-122 ஓரம்போகியார்

பைம்—பசிய நிறமுடைய. புன்புறம்—அழகற்ற முதுகுப்புறம். குண்டு—ஆழமான. கூம்பின—குவிந்தன. இனியே—இப்பொழுதோ. வந்தன்று—வந்தது. வாழியோ—வாழ்வதாக. ஒருதான் அன்று—அது மட்டும் தனியாக வரவில்லை. கங்குலும்—அதன் பின்னால் உள்ள இரவும்.

64 *EVENING AND NIGHT*

White water-lilies blooming
On the deep waters of the pool
Have shut their petals close,
And they seem
Like the downy backs
Of green-legged cranes.
May it live long—the evening !
But it has not come alone.
Behind it comes—the crueller night
Following on so closely in its wake.

SHE Kuruntokai—122 ŌRAMPŌKIYĀR

65 வரூஉம் என்னையர் திமில்

இருள் திணிந்தன்ன ஈர்ந் தண் கொழு நிழல்,
நிலவுக் குவித்தன்ன வெண் மணல் ஒரு சிறை,
கருங் கோட்டுப் புன்னைப் பூம் பொழில் புலம்ப,
இன்னும் வாரார்; வரூஉம்,
பல் மீன் வேட்டத்து என்னையர் திமிலே.

தலைவி குறுந்தொகை-123 ஐயூர் முடவன்

திணிந்தன்ன—செறிந்து கட்டியாக அமைந்ததைப் போல. ஈர்ம்—ஈரமுடைய. தண்—குளிர்ச்சி மிக்க. கொழு—செழுமை யுடைய. குவித்தன்ன—செறித்துக் குவித்தாற் போன்ற. ஒரு சிறை—ஒரு பக்கத்தில். கரும்—கரிய. கோட்டு—கிளைகளை யுடைய. பூம்பொழில்—பூஞ்சோலை. புலம்ப—தனிமைப்பட் டிருப்ப. பன்மீன்—பல வகைப்பட்ட (பற்பல) மீன்களை. வேட்டத்து—வேட்டையாடுதலையுடைய. என் ஐயர்—என்னு டைய தமையன்மார். (ஏறிச்சென்ற) திமில்—மீன்பிடி படகுகள்.

65 *MY LOVER COMES NOT YET*

Here within the flowery grove
Of black-stemmed mastwood trees,
By the side of the mounded sand dunes
Gleaming white in the silvery moon-beams,
The shade lies thick, moist and cool;
It seems as if of solid darkness made :
And I wait forlorn and all alone:
But my lover comes not yet.
Oh! Ere long they'll all be here,
All the canoes of my brothers,
Who have gone out to hunt
The myriad fish of the deep blue sea.

SHE Kuruntokai—123 AIYŪRMUTAVAN

'Palpable darkness'—Milton.

66 கார் நகும்

'இளமை பாரார், வளம் நசைஇச் சென்றோர்,
இவணும் வாரார் ; எவணரோ ?' என,
பெயல் புறந்தந்த பூங் கொடி முல்லைத்
தொகு முகை இலங்கு எயிறு ஆக
நகுமே—தோழி ! — நறுந் தண் காரே.

தலைவி குறுந்தொகை-126 ஒக்கூர் மாசாத்தியார்

பாரார்—கருதவில்லை. வளம்—செல்வத்தை. நசைஇ—விரும்பி. எவணரோ?—எங்கே இருக்கின்றாரோ? பெயல்—மழைபெய்த தால். புறந்தந்த—பாதுகாக்கப்பட்ட. தொகு—தொகுக்கப் பட்ட; வரிசையாக (நிரம்ப) அமைக்கப்பட்ட. முகை—பூவின் அரும்பு. இலங்கு—விளங்குகின்ற. எயிறு—பல்வரிசை; நகும்—(என்னை நோக்கி இகழ்ந்து) சிரிக்கும். நறும்—மணம் பொருந்திய. தண்—குளிர்ந்த. கார்—கார் காலம்.

66 *EVEN THE SEASON MOCKS ME*

'Caring not for the bloom of your youth,
And hankering after wealth,
He has parted from you;
And has not cared to return here.
Where could he be, I wonder!—
Thus, I fancy, thinks, my dear,
The fragrant and cool rainy season;
And mocks me, smiling
With the rows of clusrering buds
Of the new-flowering jasmine creeper
Cherished lush by the pouring rain
For rows of glistening teeth.

SHE Kuruntokai—126: OKKŪR MĀCĀTTIYĀR

67 மகளிர்க்கு ஆடவர் உயிர்

'வினையே ஆடவர்க்கு உயிரே ; வாள் நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என,
நமக்கு உரைத்தோரும் தாமே,
அழாஅல்—தோழி ! — அழுங்குவர் செலவே.

தோழி குறுந்தொகை-135 பாலை பாடிய பெருங்கடுங்கோ

வினையே—தொழில் தான். ஆடவர்க்கு—ஆண் மக்களுக்கு. வாள்—ஒளி பொருந்திய. நுதல்—நெற்றி. மனை உறை—வீட்டின் உள்ளே வாழ்கின்ற. தாமே—அத்தலைவரே. அழாஅல்—அழாதே. அழுங்குவர்—தவிர்வர். செலவு—செல்லுதல்.

67 *WEEP NO MORE*

Work is the very breath of life
For men:
And for fair-browed women
Who dwell at home—
Men are their very life.
It was he
Who taught us this.
So, weep no more, my dear,
He will of himself
Give up his trip for wealth.

HER FRIEND Kuruntokai—135 PERUNKATUNKŌ

Compare : Love is for man a thing apart;
It is a woman's whole existence.

68 அணங்கு அன்று காமம்

'காமம், காமம்' என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே; யானை
குளகு மென்று ஆள் மதம் போலப்
பாணியும் உடைத்து, அது காணுநர்ப் பெறினே.

தலைமகன் குறுந்தொகை-136 மிளைப்பெருங் கந்தன்

என்ப—என்று குறைகூறுவார்கள். அணங்கு—வருத்தம் (தரும் தெய்வம்). பிணி—நோய். நுணங்கி—குறைந்து. கடுத்தல்—துன்புறுத்தல். தணிதல்—குறைதல்; குறைந்து இல்லாகுதல். குளகு—இலை (வகை). ஆள்—ஆட்சி செலுத்தும், (மிகும்). பாணி—தன்மை; ஏற்ற காலம்.

68 *WHAT IS LOVE?*

'O love! Fie upon you love' they cry.
Love is no new-born pain;
Others can not inflict it upon you;
No, it is not a bodily distemper.
Love never grows attenuated;
Never does it grow thin;
As an elephant's passion breaks out
When he feeds on rich, leafy fare,
So does love surge up and high,
When one's true love gleams upon the sight.

HE Kuruntrokai—136 MILAIPPERUNKANTAN

69 பள்ளி யானை

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ,
புனக் கிளி கடியும் பூங் கட் பேதை
தான் அறிந்தன்றோ இலளே—பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து, என்
உள்ளம், பின்னும், தன் உழையதுவே!

தலைவன் — **குறுந்தொகை—142** — **கபிலர்**

சுனைப்பூ—சுனையிலே பூத்த மலர்களை. குற்று—பறித்து. தொடலை—மாலையை. தைஇ—தைத்து. புனக் கிளி—தினைப் புனத்திலே கதிரை உண்ணும் பொருட்டு வரும் கிளி. கடியும்—ஓட்டும். பால் நாள்—நடு யாமத்தில். பள்ளி யானை—படுத்து உறங்கும் யானையைப் போல. உயிர்த்து—(பெரு)மூச்சுவிட்டு. உள்ளம்—மனம். பின்னும்—தலைவியை விட்டுப் பிரிந்து வந்த பின்னும். தன் உழையது—அவளருகிலேயே உள்ளது.

69

SHE DOES NOT KNOW

That artless maiden with flower-soft eyes
Picking flowers from the mountain tarn,
Weaves them into close-knit garlands,
And drives the parrots off the fields of corn.
She does not know, that in the dark midnight,
I lie awake like an elephant in its stall,
Heaving heavy sighs;
And that after coming away from her,
My heart is yet there just beside her.

HE Kuruntokai—142 KAPILAR

70 கனவு

வேனிற் பாதிரிக் கூன் மலர் அன்ன
மயிர் ஏர்பு ஒழுகிய அம் கலுழ் மாமை,
நுண்பூண், மடந்தையைத் தந்தோய் போல,
இன் துயில் எடுப்புதி—கனவே ! —
எள்ளார் அம்ம, துணைப் பிரிந்தோரே.

தலைவன் குறுந்தொகை—147 கோப்பெருஞ்சோழன்

வேனிற்பாதிரி—வேனிற்காலத்தில் மலரும் பாதிரிப்பூ. கூன்மலர்—(கூனிய) வளைந்த மலரின் (துய்யைப் போன்ற). மயிர்ஏர்பு ஒழுகிய—புன்மயிர் நிமிர்ந்து அடர்ந்து தோன்றும். மாமை—நிறம். நுண்பூண்—நுண்ணிய செய்தொழிலையுடைய அணிகலம். தந்தோய்—என்னிடம் கொணர்ந்து கொடுத்தோய். துயில் எடுப்புதி—உறக்கத்தினின்று எழுப்புகின்றாய். எள்ளார்—இகழமாட்டார். துணைப் பிரிந்தோர்—துணைவியைவிட்டுப் பிரிந்தவர்.

70

DEAR DREAM

Dear dream,
You woke me up from a delightful sleep,
And made me think
That you had brought my beloved to me,
Her who wears with elegant grace
Jewels most finely wrought,
Her whose limbs gleam
With the sheen of tender leaves,
Her with her bright and downy hair,
Which seems like the fluffy filaments
Of the hunch-backed blossoms
Of the trumpet-flower.
Those who have felt the pangs of parting
From their beloved sweethearts
Will never, never, blame you.

HE Kuruntokai—147 KOPPERUNCOLAN

71 வைகறை வந்தன்று

'குக்கூ' என்றது கோழி ; அதன் எதிர்
துட்கென்றன்று என் தூஉ நெஞ்சம் —
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே.

தலைவி **குறுந்தொகை-157** **அள்ளூர் நன்முல்லையார்**

குக்கூ—சேவலின் குரல். அதன் எதிர்—அதற்கு எதிராக. துட்கென்றன்று—அச்சத்தை அடைந்தது ; திடுக்கிட்டது. தூய—தலைவனைத் தவிர வேறு ஒருவரையும் மனத்தில் கொள்ளாத. தோள் தோய்—கட்டி அணைத்துக் கொண்டிருக்கும். பிரிக்கும்—பிரியச் செய்யும். வைகறை—விடியற்காலம். வந்தன்று—வந்தது.

71 *THE CRUEL DAWN*

Cockera-coo-coo cried the cock;
And on that instant my simple heart took alarm;
And a cold shiver ran through my heart:
For it knew that the cruel dawn had come,
Like a sundering sword
To part from mine arms
My lover who lay shoulder pressed tight
Against opposed shoulder,
Locked with me in close embrace.

SHE Kuruntokai—157: ALLUR NANMULLAIYĀR

The bookish grammarian has wrung away all the sweetness out of the verse. So the grammarian's commentary.

72 கங்குலும் கேட்கும் குரல்

யார் அணங்குற்றனை—கடலே ! பூழியர்
சிறு தலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீன் ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை,
வெள் வீத் தாழை திரை அலை
நள்ளென் கங்குலும் கேட்கும், நின் குரலே ?

தலைவி குறுந்தொகை-163 அம்மூவனார்

யார் அணங்குற்றனை — யாரால் வருத்தம் அடைந்தாய் ? பூழியர் — பூழி நாட்டார் (ஆட்டு நிரையை உடையவர்) வெள்ளை—வெள்ளாடு. தோடு—தொகுதி. ஆர்—உண்ணும். கானல்—கடற்கரைச் சோலையையுடைய. வெள்—வெண்மை நிற முடைய. வீ—பூவையுடைய. திரைஅலை - மோதும் அலைகள் அசைக்கின்ற. நள்ளென் கங்குல்—அடர்ந்த இருட்டையுடைய இரவின் நடுப் பகுதியிலும். குரல்—ஆரவாரம்.

72 *ARE YOU TOO LOVE-SICK?*

Like straggling flocks of small-headed sheep
Seem the white herons looking for fish
In the wooded stretch beside the ocean's shore,
Where the rolling waves rock to and fro
The fragrant screw-pines blossoming white
In his country of fertile fields.
Even in this dark midnight hour
I hear your ceaseless moaning, O Sea!
Who has given you this love-torment?
Pray tell me, dear Sea.

SHE Kuruntokai—163 AMMOOVANĀR

73 மாலை

முகை முற்றினவே முல்லை ; முல்லையொடு
தகை முற்றினவே, தண் கார் வியன் புனம்
வால் இழை நெகிழ்த்தோர் வாரார்—
மாலை வந்தன்று, என் மாண் நலம் குறித்தே.

தலைவி குறுந்தொகை-188 மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

முகை—அரும்பு ; மொட்டு தகை முற்றின—தக்க அழகு முதிர்ந்தன. கார்—கார்காலத்து. வியன்—அகன்ற ; பெரிய. வாலிழை—ஒளி வீசும் அணிகலம். வாரார்—வரவில்லை. வந்தன்று—வந்தது. மாண்—மாட்சிமைப்பட்டது. நலம்—பெண்மை அழகு, வனப்பு, குறித்து—அதைக் கெடுக்கும் பொருட்டு

73 *LOVELINESS IN DANGER*

The buds of the jasmine are about to blossom,
And the spacious fields are cool with the outumn rain;
Where the jasmines have blossomed already,
The land holds an enhanced beauty.
Yet, he who caused my shining jewels
Hang loose on my wasted limbs,
He, my beloved, has not come:
But, it has come, this evening time,
With fell design to ruin my icveliness.

SHE Kuruntokai—188: MATURAI ALAKKAR
NĀLĀR MAKANĀR MALLANĀR

74 காமம் குறுகல் ஓம்புமின்

அமிழ்தத்தன்ன அம் தீம் கிளவி
அன்ன இனியோள் குணனும் இன்ன
இன்னா அரும் படர் செய்யும் ஆயின்,
உடன் உறைவு அரிதே காமம்;
குறுகல் ஓம்புமின், அறிவுடையீரே !

தலைவன் குறுந்தொகை-206 ஐயூர் முடவன்

அமிழ்தத்துஅன்ன—அமிழ்தத்தைப் போன்ற. அம் தீம்—அழகிய இனிய. கிளவி—சொற்கள்; பேச்சு. அன்ன—அத்தகைய. இன்ன—இத்தகைய. இன்னா—பொல்லாங்கு செய்யும். அரும்—தாங்குதற்கு அரிய. படர்—துன்பம். உடன்—அதனோடு கூட. உறைவு—(தங்கி) இருந்து வாழ்வது. அரிதே—எளிதன்று. காமம் குறுகல்—காமத்துக்கு உட்படுதலை. ஓம்புமின்—தவிர்த்து வாழுங்கள்.

74 *GO NOT NEAR LOVE*

Pretty and sweet are her delicious words;
And they are divinely ambrosial;
Many are the charms of her gleaming limbs,
And her virtues match each one of these graces.
If such as these should give one boundless pain
Surely, one can never live with love.
So, if you are wise indeed,
Never, O never, go near love.

HE Kuruntokai—206 AIYŪR MUTAVAN

75 கங்குல் வெள்ளம்

எல்லை கழிய, முல்லை மலர,
கதிர் சினம் தணிந்த கையறு மாலை,
உயிர் வரம்பாக நீந்தினம் ஆயின்,
எவன்கொல் வாழி ?—தோழி !—
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே !

தலைவி குறுந்தொகை-387 கங்குல் வெள்ளத்தார்

எல்லை—பகல். கழிய—நீங்க. கதிர்—சூரியன். சினம்—கோபம்; இங்கு வெப்பம். தணிந்த—குறைந்த கையறு—செயலறச் செய்யும். வரம்பாக—எல்லையாக; இரவு வரும்வரை. நீந்தினம் ஆயின்—பாடுபட்டுக் கழித்தோம் என்றாலும். எவன் கொல்—நீந்திப் பயன் என்ன? கங்குல் வெள்ளம்—வெள்ளத்தைப் போன்ற இரவு.

75 *THE FLOOD OF NIGHT*

When the bright day was almost done,
And the white jasmines had just bloomed,
And the sun's fiery rays
Had in their wrath abated,
Came the dolorous evening time.
Then we fondly hoped
That it would be limited by the night,
And that if we struck across it
We could swim through it.
But we found that it wouldn't be any good :
For beyond it lay the long night
Vast as a great deluge ;
And the flood of night
Was far wider than the sea.

SHE Kuruntokai-387 KANKUL VELLATTĀR

Contrast

Take heart, little sister,
Twilight is but a short bridge;
And the moon stands at the end.

—EMILY DICKINSON

5

NARRINAI

நற்றிணை

76 தீது அற விளங்கிய திகிரியோன்

'மா நிலம் சேவடி ஆக, தூ நீர்
வளை நரல் பௌவம் உடுக்கை ஆக,
விசும்பு மெய் ஆக, திசை கை ஆக,
பசுங் கதிர் மதியமொடு சுடர் கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்று, அகத்து அடக்கிய
வேத முதல்வன்'—என்ப—
'தீது அற விளங்கிய திகிரியோனே'.

கடவுள் வாழ்த்து நற்றிணை பாரதம் பாடிய பெருந்தேவனார்

மா—பெரிய. சே—சிவந்த தூ—தூய. வளை—சங்கு. நரல்—ஒலிக்கின்ற. பௌவம்—கடல். உடுக்கை—ஆடை. விசும்பு—ஆகாயம். மெய்—உடல். பசும்—தண்ணிய; குளிர்ந்த. மதியம்—சந்திரன். சுடர்—சூரியன். இயன்ற—அமைந்துள்ள. பயின்று—பொருந்தி. அகத்து—உள்ளே. என்ப—என்பார்கள். தீது அற—குற்றங்கள் எல்லாம் தீரும்படி. திகிரி—சக்கிராயுதம். திகிரியோன்—திருமால்.

76 *OF GOD*

'The spacious earth
Is His roseate dainty feet ;
The clear-watered sea
Where the whorled conches resound
Is His raiment;
The sky
Is His body;
The quarters four
Are His arms ;
The cool moon
And the fiery sun
Are His eyes ;
He pervades all things that exist,
And enfolds them within Himself;
He is the Supreme God
Of whom the scriptures speak',
So assert the wise of Him,
Who in order that all evil
May be destroyed utterly
Wields His flashing discuss.

Benedictory Narrinai PERUNTĒVANĀR

Listen and learn what manner of god I am;
My head the firmanent; the sea my belly;
Earth for my feet; my ears in aether fixed;
And radiant sunlight my far-flashing eye.

Oracle of Seraphis PHILETUS (Greek)

The earth is his feet;
The sky his navel;
His breath the wind;
The sun and moon his eyes;
His ears the quarters :

His head the sky;
His face the fire;
His rainent the sea.
Every part of the Universe is within him.
He sports with gods and men,
Birds, beasts, reptiles, celestials, and demons,
The three worlds are his body.
He pervades all, the Supremest Lord,
I bow to Him.

Benedictory—The Thousand Names of God (Sanskrit)

77 எல்லிடை நீங்கும் இளையோன்

அழுந்துபட வீழ்ந்த பெருந் தண் குன்றத்து,
ஒலி வல் ஈந்தின் உலவைஅம் காட்டு,
ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த
செம் மறுத் தலைய, நெய்த்தோர் வாய,
வல்லியப் பெருந் தலைக் குருளை, மாலை,
மான் நோக்கு இண்டு இவர் ஈங்கைய சுரனே:
வை எயிற்று ஐயள் மடந்தை முன் உற்று
எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்
காலொடு பட்ட மாரி
மால் வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே !

வழிப்போக்கர் நற்றிணை-2 பெரும்பதுமனார்

ஆழ்ந்து—பள்ளமாகி. வீழ்ந்த—கிடந்த. ஒலி—தழைத்த. வல்—வலிய. ஈந்து—ஈச்சமரம். உலவை—காற்று. ஆறு—வழியாக. சென்னி—தலை. எறிந்த—பொழிந்த; சிதறிய. செம்—சிவந்த. மறு—மறுப்பட்ட கறையை உடையனவாகிய. நெய்த்தோர்—இரத்தம். வல்லியம்—புலி. குருளை—குட்டி. மரல்—மரம்; புதர். இண்டு—இண்டம் கொடி. இவர்—படர்ந்து ஏறும். ஈங்கைய—ஈங்கோடு கூடிய. வை—கூர்மை. எயிற்று—பற்களையுடைய. ஐயள்—அழகை உடையவள். முன் உற்று—முன்னே செல்ல விட்டு. எல்இடை—இரவுப் பொழுதில். கால்—காற்று. பட்ட—கலந்த; சேர்ந்துகொண்ட. மாரி—மழை. மிளிர்க்கும்—புரட்டும். உரும்—இடி.

77 *THIS YOUNG MAN*

Upon yonder mountains tall and cool,
Whose base is stuck deep into the ground,
Stand stout and lofty date-palm trees
In the wilderness where the winds fiercely blow.
There in the evening
Beautiful, big-headed tiger cubs
Which had bitten off the heads
Of travellers on the trail,
Their mouths dripping blood,
And their heads stained dark red,
Lurk in the desert, hiding among shrubs of mimosa
Intertwined with pinnate soap-pod vine,
Watching for straggling deer.
The heart of this young man, who journeys in the night
Letting this artless maid with pretty teeth and lissom limbs
Walk just ahead of him,
Seems harder than the thunder
Which hurtles big boulders down
From lofty mountain tops
In pouring rain, when stormy winds do blow.

WAYFARERS Narrinai-2 PERUMPATUMANĀR

78 கொண்டும் செல்வர் கொல்லோ ?

கானல் அம் சிறுகுடிக் கடல் மேம் பரதவர்
நீல் நிறப் புன்னைக் கொழு நிழல் அசைஇ,
தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி,
அம் கண் அரில் வலை உணக்கும் துறைவனொடு,
'அலரே அன்னை அறியின், இவண் உறை வாழ்க்கை
அரிய ஆகும் நமக்கு' எனக் கூறின்,
கொண்டும் செல்வர்கொல்—தோழி !—உமணர்
வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி,
கண நிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம்
மணல் மடுத்து உரறும் ஓசை கழனிக்
கருங் கால் வெண் குருகு வெரூஉம்
இருங் கழிச் சேர்ப்பின் தம் உறைவின் ஊர்க்கே ?

தோழி **நற்றிணை-4** **அம்மூவனார்**

கானல்—கடற்கரைச் சோலை. மேம்—மேவும்; மேற்செல்லும். கொழு—கொழுவிய; அடர்ந்த. அசைஇ—தங்கி. ஒண் பதம்—நல்ல வேளை; தக்க வேளை (கொந்தளிப்பு முதலியன இல்லாத காலம்). அரில் வலை—முறுக்குண்டு கிடந்த வலை. உணக்கும்—காயவைக்கும்; உலர்த்தும். அலர்—பழிச்சொல். இவண்—இங்கே. கூறின்—கூறினால். கொண்டு—அழைத்துக் கொண்டு. உமணர்—உப்பு வணிகர் கொள்ளை—விலை. சாற்றி—கூறி. கணநிரை—கூட்டமாகிய பசுக்களின் தொகுதி. கிளர்க்கும்—எழுப்பும். நெடுநெறி—நெடிய வழி. மடுத்து—ஆழப் படிந்து. உரறும்—முழங்கும். கழனி—வயல். வெரூஉம்—அச்சம் கொள்ளும். இரும்—கரிய; பெரிய. கழி—கடலை அடுத்த உப்பு நீர்ப் பரப்பு. சேர்ப்பு—கடற்கரைப் பகுதி. (இடம், ஊர்).

78 *WILL HE TAKE ME TO HIS HOME?*

He is the lord of the sea-coast land
Where in little hamlets
Within the sea-side groves
Fishermen dwell who love the seas;
And where within the deep shade
Of dark-green mastwood trees,
While they wait for a favourable time to go
Hunting into the cool and vast ocean spread,
They dry on the nearby sands
Their snarl-free fishing nets.
If we tell him, 'If our mother should get to know
Of the evil slander spread about us,
We shall no longer be able
To meet each other in secret',
Will he take us to the city where he dwells
Beside the vast and dark marshes by the sea,
Where the vendors of the white and pebbly salt
Loudly cry the prices of their wares,
And with the swishing noises of their cart-wheels
Waken the multitudinous herds of kine
Lying bedded in the long long tracks,
And frighten the black-legged white herons
Upon the fields of paddy-corn?

HER FRIEND Narrinai-4 AMMŪVANĀR

Naccinarkiniyar, the famous commentator, says that the speaker is the lady herself. It seems acceptable.

79 இனிய கொடியவன்

என் கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்,
தன் கைக் கொண்டு என் நல் நுதல் நீவியும்,
அன்னை போல இனிய கூறியும்,
கள்வர் போலக் கொடியன் மாதோ—
மணி என இழிதரும் அருவி, பொன் என
வேங்கை தாய ஓங்கு மலை அடுக்கத்து,
ஆடு கழை நிவந்த பைங் கண் மூங்கில்
ஓடு மழை சுழிக்கும் சென்னி,
கோடு உயர் பிறங்கல், மலைகிழவோனே!

தோழி நற்றிணை-28 முதுகூற்றனார்

நுதல்—நெற்றி. நீவி—தடவி. மணி—(இங்கு) நீலமணி. இழிதரும்—குதிக்கும். தாய—(உதிர்ந்து) பரவிய. ஓங்கு—உயர்ந்த. அடுக்கம்—மலைச் சாரல்; பக்கமலை. ஆடு(ம்)—அசையும். கழை—(இங்கு) மூங்கிலின் தண்டு. நிவந்த—உயர்ந்த. பைம்—பசிய (பச்சையான). கண்—(மூங்கிலின்) கணு. மழை—மேகம். சென்னி—உச்சி. கோடு—மலைச்சிகரம். உயர்—உயர்ந்த. பிறங்கல்—செறிந்த மலை; (விளங்கும் மலை). கிழவோன்—உரியவன்.

79

CARESSING YET CRUEL

He is the chief of the highlands,
Where tall shafts of bamboo,
Green, smooth, and over-tall,
Waving in the wind
Tear the scudding clouds
As they flee past the crests
Of the mountains with towering peaks;
And where crystal cascades leap down
From the ridges of the lofty range of hills,
With groves of kino-trees whose blossoms seem
Like overlaying gold.
Caressingly, he took and laid your hands
Upon his eyes,
And stroked your fair brow
With gentlest hand,
And spoke soft words to you
Like a mother;
Yet, alas! he is as cruel
As a band of brigands.

HER FRIEND Narrinai-28 MUTUKŪRRANĀR

80 நினக்கோ அறியுநள் நெஞ்சே

பொரு இல் ஆயமோடு அருவி ஆடி,
நீர் அலைச் சிவந்த பேர் அமர் மழைக் கண்
குறியா நோக்கமொடு முறுவல் நல்கி,
முனைவயின் பெயர்ந்த காலை, நினைஇய
நினக்கோ அறியுநள்—நெஞ்சே! புனத்த
நீடு இலை விளை தினைக் கொடுங் கால் நிமிரக்
கொழுங் குரல் கோடல் கண்ணி, செழும் பல
பல் கிளைக் குறவர் அல்கு அயர் முன்றில்
குடக் காய் ஆசினிப் படப்பை நீடிய
பல் மர உயர் சினை மின்மினி விளக்கத்து,
செல் மழை இயக்கம் காணும்
நல் மலை நாடன் காதல் மகளே?

தலைமகன் நற்றிணை-44 பெருங்கௌசிகனார்

பொருவில்—ஒப்பில்லாத. ஆயம்—தோழியர் கூட்டம். ஆடி—நீராடி (குளித்து). நீரலைச் சிவந்த—நீரினால் அலைக்கப்பட்டுக் கலங்கிய. பேர்—பெரிய. அமர்—அமைதியை உடைய. மழைக் கண்—குளிர்ச்சி பொருந்திய கண். குறியா—எவ்வகை எண்ணத்தையும் வெளியிடாத. நோக்கம்—பார்வை. நல்கி—அளித்து. பெயர்ந்த—நீங்கிச் சென்ற. நினைஇய—கருதி வந்த. அறியுநள்—அறியத்தக்காள். புனத்த—கொல்லையில் உள்ள. நீடு—நீடிய; நீண்ட. விளை—முற்றிய. கொடும்—வளைந்த. கால்—தாள். கொழும்—செழித்த. குரல்—கதிர். கோடல்—கொண்டு போதல். கண்ணி—கருதி. பல—மிக்க. பல் கிளை—பல உறவினர்களை உடைய. அல்கு அயர்—தங்கி விளையாடுகின்ற. படப்பை—தோட்டம்; புழைக்கடை. சினை—கிளை. செல்—(ஆகாயத்தில்) செல்லும். இயக்கம்—போக்கு. காதல்-அன்புள்ள.

80 *O MY HEART!*

O my heart,
You were so mute
When you gazed at her
As she bathed in the waterfall
With her dear friends.
Her large and tranquil eyes,
So moist, and so gentle, were turbid,
Reddened by the slap
Of the falling water.
She left us a vague little smile
As she went back home.
Do you dare hope now
To know how she felt then?
She is the darling daughter
Of the chief of the mountain range
Where the hill-men flock together
With throngs of their kinsmen
To pluck the luscious sheaves
Of ripened corn
In the fields of the long-eared millet,
And gently let the stalks,
Which had been bent by their heavy load,
Straighten up again.
She now stands in the courtyard of her home,
And is looking at the rain-clouds
Scudding across the sky
By the light of the glow-worms
Shining from the branches
Of the tall bread-fruit trees,
Which stand in her back garden,
Bearing fruits as round as pots.

HE Narrinai-44 PERUNKAUCIKANĀR

81 மறவரைக் கண்டு அஞ்சாது, எமரைக்கண்டு ஒளித்தீர்

அன்றை அனைய ஆகி, இன்றும், எம்
கண் உள்போலச் சுழலும் மாதோ—
புல் இதழ்க் கோங்கின் மெல் இதழ்க் குடைப் பூ
வைகுறு மீனின் இனையத் தோன்றி,
புறவு அணி கொண்ட பூ நாறு கடத்திடை,
கிடின் என இடிக்கும் கோல் தொடி மறவர்
வடி நவில் அம்பின் வினையர் அஞ்சாது
அமரிடை உறுதர, நீக்கி, நீர்
எமரிடை உறுதர, ஒளித்த காடே.

தோழி | நற்றிணை-48 | பெருங்கடுங்கோ

அன்றை அனைய—அன்று தோன்றியதைப் போன்று. கண் உள்போல—கண்ணின் உள்ளே இருப்பதைப் போல. சுழலும்—மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருக்கும். புல்—புல்லிய; கீழ்த்தரமான. குடைப் பூ—குடை போன்ற வடிவமுடைய பூ. வைகுறு—காலை வேளையில் தோன்றுகின்ற. இனைய—என்பவை போல. புற அணி—வெளிப்படத் தோன்றும் அழகு. கடம்—கல் நெறி; கற்கள் சிதறிக்கிடக்கும் பாதை. 'கிடின்'—ஓசையைக் குறிக்கும் ஒலியுடைய சொல். இடிக்கும்—மோதும்; தாக்கும். கோல் தொடி—நன்கு செய்யப்பட்ட வீரவளை. வடிநவில்—கூர் மையாக உலையில் வடிக்கப்பட்ட. வினையர்—செயலையுடையவர். அஞ்சாது—அச்சம் இன்றி. அமரிடை—போர் செய்யும் பொருட்டு. உறுதர—நெருங்கி வர. நீக்கி—(அவரை வென்று) போக்கி. எமர்—எமது உறவினர். ஒளித்த—மறைந்து கொண்ட.

81 *BOLD AND AFRAID*

That forest scene
Still keeps revolving
Within my mind's eye
As clear as on the day
When I saw it, there.
The flowers of the ironwood tree,
Pretty, little umbrellas !
With sepals few and small,
And petals soft and clustering,
Shining like so many stars
In the early morning sky,
Making the forest glitter
With their gorgeous beauty ;
And filling with fragrance
The rock-strewa jungle path
Which we were treading together;
But Oh ! — On a sudden
There swooped upon us a band
Of terrible bandits of the wild—
How beautiful were their armlets !—
With ear-piercing yells,
And arrows whetted keen,
Tools of their murderous trade.
Boldly, they rushed upon us ;
And you fought them all
And drove them all away.
But, when mine elders came
Searching for us,
And sought to get at you,
You went and hid yourself !

SHE Narrinai-48 PĀLAI PĀTIYA PERUN KATUNKŌ

Note : The lady's feding for beauty is part of her joy in the company of her lover with whom she has eloped. It does not desert her even in the moment of danger. She is struck by the beauty of the armlets of the bandits. It may also be that that thought helps her to tide over that awesome recollection.

82 உயிர் பகுத்தன்ன மாண்பினேன்

'பகல் எரி சுடரின் மேனி சாயவும்,
பாம்பு ஊர் மதியின் நுதல் ஒலி கரப்பவும்,
எனக்கு நீ உரையாயாயினை; நினக்கு யான்
உயிர் பகுத்தன்ன மாண்பினேன் ஆகலின்,
அது கண்டிசினால் யானே' என்று, நனி
அழுதல் ஆன்றிசின்—ஆயிழை!—ஒலி குரல்
ஏனல் காவலினிடை உற்று ஒருவன்,
கண்ணியன், கழலன், தாரன். தண்ணெனச்
சிறு புறம் கவையினனாக, அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃது ஆகின்று, யான் உற்ற நோயே.

தலைவி | நற்றிணை-128 | நற்சேந்தனார்

சுடர்—விளக்கு. சாய—வாடித்தோன்ற. ஊர்—ஊர்ந்து கவரப் பட்ட. மதி—சந்திரன். நுதல்—நெற்றி. கரப்ப—மறைய. உரையாய்—சொல்லவில்லை. உயிர் பகுத்தன்ன மாண்பினேன்—ஓர் உயிரை இரண்டு உடல்களுக்குப் பங்கு வைத்தால் போல. கண்டிசின்—தெரிந்து கொண்டேன். நனி—மிகவும். அழுதல் ஆன்றிசின்—அழுது வருந்துகின்றதை நிறுத்திக்கொள். ஒலி குரல்—தலை சாய்த்த கதிர். ஏனல்—தினை(ப்புலம்). இடைஉற்று—வந்து தோன்றி. தண்எஷ்—குளிர்ச்சியுற. சிறுபுறம்—முதுகு. கவையினன்—அணைத்தான். இஃதாகின்று—இத்தன்மை உடையதாக உள்ளது.

82 *PALE, PALE, MY LOVE!*

'Your body looks as pale
As the flame of a lamp lit in the day;
Your gleaming forehead is as dull of sheen
As a moon eclipsed;
And yet you told me nothing:
But since we are to each other
As two bodies sharing one life,
I knew.
Oh! — Do not grieve, my jewelled darling!
Pray, do not cry!

HER FRIEND

While I was watching the heavy-eared millet
There came a man,
Flowers in his hair,
Warrior anklets on his feet,
Wearing-a garland.
He threw his cool arms around my neck,
Thereafter,—
My mind dwells on that alone;
This, this, my dear, is my malady.

SHE Narrinai-128 NARCENTANĀR

Compare

Viola :

My father had a daughter loved a man,
As it might be, perhaps, were I a woman,
I should your lordship.

Duke

And what's her history?

Viola

A blank, my lord. She never told her love,
But let concealment, like a worm i' the bud,
Feed on her damask cheek, she pined in thought
And with a green and yellow melancholy,
She sat like Patience on a monument,
Smiling at grief. Was not this love indeed?'

-Twelfth Night-II iv. SHAKESPEARE

83 காதல் தானும் கடலினும் பெரிதே

பொன்னும் மணியும் போலும், யாழ நின்
நன்னர் மேனியும் நாறு இருங் கதுப்பும்,
போதும் பணையும் போலும், யாழ நின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்.
இவை காண்தோறும் அகம் மலிந்து, யானும்
அறம் நிலைபெற்றோர் அனையேன் ; அதன்தலை
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்;
வினையும் வேறு புலத்து இலெனே; நினையின்,
யாதனின் பிரிகோ?—மடந்தை!—
காதல்தானும் கடலினும் பெரிதே!

தலைவன் நற்றிணை-166 (பெயர் காணவில்லை

மணி—நீலமணி. யாழ—முன்னிலை அசை. நன்னர்—நல்ல. மேனி—வடிவு. நாறும்—மணம் வீசும். இரும்—கரிய. கதுப்பு—கூந்தல். போது—மலர். பணை—மூங்கில். மாதர்—அழகு. உண்கண்—மை தீட்டிய கண். வனப்பின்—அழகுடைய. அக மலிந்து—உள்ளம் மகிழ்ந்து. பொலந்தொடி—பொன் வளை அணிந்த. பொய்தல்—சிற்றில் அமைத்து விளையாடுதல்.

83 *GOLD AND SAPPHIRE*

Look ! My beloved !
Like gold and sapphire
Gleam your dainty elegant limbs
And your dark and fragrant tresses :
Like blue-lilies and bamboos
Shine your black-tipped, enchanting eyes
And your arms, moulded in beauty.
Whenever I see these charms of yours,
My heart swells up
With joy and with pride;
And like the righteous
I attain heavens of delight.
Yet more than these,
Our little son, wearing armlets of gold,
Has learned to play
Many a childish prank :
No duty calls me any more from here
To a far-off, foreign land.
Look, my simple dear,
'What is there now
That could part me from your arms?'
Truly, my love for you
Is greater far than the wide, wide sea.

HE Narrinai-166 ANONYMOUS

84 கவின் எய்திய காப்பினள்

புள்ளும் பதி சேரினும், புணர்ந்தோர்க் காணினும்,
பள்ளி யானையின் வெய்ய உயிரினை,
கழிபட வருந்திய எவ்வமொடு பெரிது அழிந்து,
எனவ கேளாய், நினையினை, நீ நனி
உள்ளினும் பனிக்கும்—ஒள் இழைக் குறுமகள்,
பேர் இசை உருமொடு மாரி முற்றிய,
பல் குடைக் கள்ளின் வண் மகிழ்ப் பாரி,
பலவு உறு குன்றம் போல,
பெருங் கவின் எய்திய அருங் காப்பினளே.

தோழி நற்றிணை-253 கபிலர்

புள்ளு—பறவை. பதி—பறவைக் கூடு. பள்ளி—படுத்துக் கிடக்கும். வெய்ய—வெப்பம் மிக்க. உயிரினை—பெருமூச்சு எறிகின்றாய். கழிபட—மிகுதியாக. எவ்வம்—துன்பம். அழிந்து—மனம் உடைந்து. எனவ—யான் கூறுபவைகளை. நினையினை—நினைத்துக் கொண்டே இருக்கின்றாய். பனிக்கும்—நடுங்கும்; கண்ணீர் வடிக்கும். ஒள்—ஒளி பொருந்திய இழை—அணிகலன். இசை—முழக்கம். உரும்—இடி. குடை—பனை ஓலையால் செய்த ஏனம். வண்மகிழ்—கொடையால் மகிழ்கின்ற. பலவுஉறு—பலாமரங்கள் மிகுந்த. கவின்—அழகு. காப்பு—காவல்.

84 *UNDER ZEALOUS WATCH*

Should birds come winging home
To roost in their nests,
Or a pair of fond lovers
Be caressing seen,
You heave hot and heavy sighs
Like a couched elephant
Pent within his stall.
Intense is your heart-ache,
And great are the agonies you suffer.
Yet you pay no heed whatever
To the words I speak;
But fall into constant brooding.
And she, that dainty little fairy
Who wears jewels gleaming bright,
Has now grown into a woman
Of entrancing loveliness.
She shudders with fear
At the very thought of the dangers
You face in order to meet her in secret.
For she is now under a most zealous guard,
And is watched with anxious care
As are the Hills of Pari—
Pari who gives us all wine to drink
Out of a myriad palm-leaf cups,
And is supremely happy in the giving—
The Hills whereon do stand
Forests of fruited jack-trees,
And where the enveloping clouds,
Unfailing, pour their teeming rain
With loud claps of thunder.

HER FRIEND Narrinai-253 KAPILAR

85 அசுணம் கொல்பவர் கை

வாரல் மென் தினைப் புலவுக் குரல் மாந்தி,
சாரல் வரைய கிளையுடன் குழீஇ,
வளி எறி வயிரின் கிளி விளி பயிற்றும்
நளி இருஞ் சிலம்பின் நல் மலை நாடன்
புணரின், புணருமார் எழிலே ; பிரியின்,
மணி மிடை பொன்னின் மாமை சாய, என்
அணி நலம் சிதைக்குமார் பசலை. அதனால்
அசுணம் கொல்பவர் கை போல், நன்றும்,
இன்பமும் துன்பமும் உடைத்தே,
தண் கமழ் நறுந் தார் விறலோன் மார்பே.

தலைமகள் நற்றிணை-304 மாறோக்கத்து நப்பசலையார்

வாரல்—கொள்ளையிடுதற்கு உரிய. புலர்க் குரல்—முற்றின ஏனல். மாந்தி—தின்று. சாரல்—பக்கமலை. குழீஇ—ஒருமிக்கச் சேர்ந்து. வளி—காற்று. எறி—மோதுகின்ற. வயிர்—மூங்கில். விளி—அழைக்கும் குரல். பயிற்றும்—மீண்டும் மீண்டும் ஒலித்து அழைக்கும். நளி—நெருங்கிய. புணரும்—பொருந்தும். எழில்—அழகு. மணிமிடை பொன்—மணியைப் பொதிந்துள்ள பொன். மாமை—பசலை. சாய—தன்மை கெட. சிதைக்குமார்—கெடுக்கும். அசுணம்—ஒரு வகைப் புள். இசையால் கவரப்படும் என்பது நினைப்பு. தண்—குளிர்ந்த. நறும்—மணம் வீசும். தார்—மார்பில் அணியும் மாலை. விறலோன் — வலிமையுடைய தலைவன்.

85 *JOY AND SORROW*

He is the lord of a goodly range
Of mountains, dense and dark,
Where coveys of parrots, which had fed
On tender spikes of sprouting millet,
Flock with their kind upon the slopes of those hills:
And call oft to each other with shrill screeches
Which sound like bamboos whistling in the wind.
When he holds me close to him,
My glamorous loveliness increases:
But when he parts from me,
The sheen of my dark beauty is defaced
By an overspreading pallor,
As the bright sparkle of sapphire gems
Is often dulled by their gold embed.
The chest of that gallant man,
Wearer of cool and fragrant garlands,
Has been to me
Like the hand of an '*asuna*-hunter',
A source of extreme joy and of intense sorrow.

SHE Narrinai-304 MĀRŌKKATTU NAPPPCALAIYĀR

'The hand of an *asuna* - hunter' - The *asuna* is a mythical bird which is irresistibly attracted by music. The man who hunts the bird draws it from its lair by good music, and when it draws near enough kills it. This is the verse by which the poetess, whose real name we do not know, was given the sobriquet Nappacalaiyar (the lady of the goodly pallor) by which name alone we know her now.

6

PARIPATAL

பரிபாடல்

86 திருமால்

தீயினுள் தெறல் நீ: பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ் சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ.

பரிபாடல் iii 62-68 கடுவன் இளவெயினனார்
பெட்டகனார் இசை: பண்ணுப் பாலையாழ்

தெறல்—வெம்மை. நாற்றம்—நறுமணம். மணி—மணியாம் (இரத்தினமாம்) தன்மை அறம்—தருமம்; நீதி. அன்பு—மென்மை; அருள். மறம்—ஆண்மை. மைந்து—வன்மை. மறை—உபநிடதம். பூதம்—அடிப்படைப் பொருள்; பஞ்சபூதம். முதல்—ஆகாயம். வெஞ்சுடர்—சூரியன். திங்கள்—சந்திரன். அளி—அருள்.

86 *TO DIVINITY*

You are the heat within the fire ;
The perfume within the flower ;
The gem within the stone ;
The truth within the word ;
The mercy within justice ;
The might behind valour ;
The secret within the scripture;
The foremost among the elements ;
The splendour in the sun ;
The coolness in the moon ;
You are all, and each and every thing,
And their inner substance too.

Paripatal iii 63-68 KATUVAN ILAVEYINANĀR
Music by PETTAKANĀR : (Pan) Mode-Palai-yal

87 வையை

திரை இரும் பனிப் பெளவம் செவ்விதா அற முகந்து,
உர உரும் உடன்று ஆர்ப்ப, ஊர் பொறை கொள்ளாது,
கரை உடை குளம் எனக் கழன்று, வான் வயிறு அழிபு,
வரைவரை தொடுத்த வயங்கு வெள் அருவி—
இரவு இருள் பகலாக, இடம் அரிது செலவு என்னாது,
வலன் இரங்கு முரசின் தென்னவர் உள்ளிய
நிலன் உற நிமிர் தானை நெடு நிரை நிவப்பு அன்ன—
பெயலான் பொலிந்து, பெரும் புனல் பல நந்த,
நலன் நந்த, நாடு அணி நந்த, புலன் நந்த,
வந்தன்று வையைப் புனல்.

பரிபாடல்-vii 1-10 மையோடக்கோவனார்

திரை—அலை. இரும்—கரிய. பனி—குளிர்ச்சியுடைய. பௌவம்—கடல். செவ்விதா—நேராக. அற—வற்ற. உர—வலிய. உரு மேறு—சிறந்த இடி. வெகுண்டு—கோபித்து. ஆர்ப்ப—முழங்க. ஊர்—தன் மேல் ஏறிய. பொறை—பொறுத்தல்; தாங்குதல். வான்—மேகம். வரை—மலை. வயங்கு—விளங்கும். செலவு அரிது—மேற்செல்லுதல் எளிதன்று. வலன்—வலிமை; வெற்றி. இரங்கும்—ஒலிக்கும். தென்னவர் - பாண்டிய அரசர்பிரான். உள்ளிய—(கொள்ளக்) கருதிய. உற—அடைய. நிமிர்—பரக்கும். தானை—படை. நிரை - தொகுதி. நிரப்பு—நிமிர்ச்சி. நந்த—பெருக; சிறக்க; மிக. (நன்மை மிக; அழகு பெற; விளைய).

87 *THE VAIKAI*

Scooping deep into the billowy ocean,
Dark and cool,
The rain-cloud lifts its water up;
And since the burden is too heavy,
It breaks, and lets the confined waters down—
Like a lake which bursts its bund
And lets the escaping waters go,—
While its puissant thunder roars in fury.
Then, glistening white cascades
Festoon every hill,
Converting night's darkness into day.
Like the long and serried hosts
Of the Southern King,
Which find no terrain too difficult to cross,
And quickly overrun his enemies' land
To the victorious beat of the drums of war,
Those waters pour down.
Their streams gather into a flood,
Increasing human weal,
Enhancing the land's loveliness,
And enriching the fair fields of corn.
Thus come down the waters of the Vaikai.

Paripatal-7 (lines 1-10) : MAIYŌTAKKŌVANĀR
Music by PITTĀMATTĀR (Mode) Pan—Palai-yal

88 தைந் நீராடல்

கனைக்கும் அதிர்குரல் கார் வானம் நீங்க;
பனிப் படு பைதல் விதலைப் பருவத்து,
ஞாயிறு காயா நளி மாரிப் பின் குளத்து,
மா இருந் திங்கள் மறு நிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க,
புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப,
'வெம்பாதாக, வியல் நில வரைப்பு!' என
அம்பா ஆடலின் ஆய் தொடிக் கன்னியர்,
முனித் துறை முதல்வியர் முறைமை காட்ட,
பனிப் புலர்பு ஆடி, பரு மணல் அருவியின்
ஊதை ஊர்தர, உறை சிறை வேதியர்
நெறி நிமிர் நுடங்கு அழல் பேணிய சிறப்பின்,
தையல் மகளிர் ஈர் அணி புலர்த்தர,
வையை! நினக்கு மடை வாய்த்தன்று.
மையாடல் ஆடல் மழ புலவர் மாறு எழுந்து,
பொய் ஆடல் ஆடும் புணர்ப்பின் அவர், அவர்
தீ எரிப் பாலும் செறி தவம் முன் பற்றியோ,
தாய் அருகா நின்று, தவத் தைந் நீராடுதல்?
நீ உரைத்தி, வையை நதி!

பரிபாடல்-xi (74-92) ஆசிரியன் நல்லந்துவனார்

கனைக்கும்—முழங்குகிற. கார்—கரிய. வானம்—மேகம். படு—மிகுதல். பைதல்—குளிர். விதலை—நடுக்கம். காயா—வெம்மையால் சுடாத. நளிமாரி—கடைமாரி. பிற்குளம்—உத்திராட நட்சத்திரம். ஆதிரை—திருவாதிரை நட்சத்திரம். விரிநூல்—ஆகமங்களை உணர்ந்த. பொலங் கலம்—பொன்னால் அமைந்த அணிகலன் முதலியவற்றை. வெம்பாதாக—(வெம்பாமல்) மழையால் குளிர்வதாக. அம்பா ஆடல்—தைந் நீராடல் (தாயோடு ஆடப்படுதலின்). முனித்துறை—முனிவரின் துறையைச் சார்ந்த. புலர்—விடியற்காலை. அருவி—நீரூற்று; ஓடை. ஊதை—குளிர் காற்று; வாடை. ஊர்தர—வீச. உறைசிறை—கரையில் வாழும். நெறி—வேதநெறி. நுடங்கு அழல்—அசையும் நெருப்புச் சுவாலை. ஈர் அணி—ஈரமான (நனைந்த) ஆடை. மடை—தெய்வத்திற்கு

88 BATHE IN THE MORNING DEW

When the dark clouds cease to bellow
With loud and reverberent roar,
It is the time of early winter,
When the dew falls heavy and thick,
And people shiver in the bitter cold.
The sun does not blaze so fiercely,
And the cold rain pours down.
In that month of *Mārkali*
When the moon shines at the full,
Though dotted over with dark spots,
On the day when star *Ātirai* rules,
Wise men steeped in vast learning
Begin to celebrate the sacred feast;
And gentle Brahmins, who wear
The sacred thread of triple twist,
Receive gifts of golden jewels.
'May this spacious earth of ours
Never go parched, never get dry!'
Thus pray, fair, bangled maidens
Who take ceremonial baths,
Standing at their mothers' sides,
Watched by matrons skilled
In the proper use and wont.
While wintry winds do blow
Upon the waters of your stream,
Which flows over coarse grains of sand,
They bathe in the cold and dewy dawn;
They bow their heads reverently;
And gently dry their wet garments
Over the slender, tremulous flame
Rising up from the sacred fire
Kindled and fed with devout rites
By Brahmins proficient in Vedic lore,
And dwell upon the river's shore.
O Vaikai, you deserve will indeed

அளிக்கும் பலி. வாய்த்தன்று—வாய்ப்புடையதாக இருந்தது. மையாடல்—மையோலை. மழபுலவர்—இளைய பள்ளிச்சிறுவர். பொய்யாடல்—காமக்குறிப்பு இல்லாத விளையாட்டு. செறி தவம்—புலன்களை அடக்கிச் செய்யும் தவம். தவத் தைந் நீராடல்—தவமாகிய தை (மாத) நீராடல்.

The oblations of food made to you.
Those playful maids, as yet love-frees,
Engage in play with their girl-friends,
And set up a rival game
Against that played by the budding scholars,
Who hold the inked scroll.
O ! Tell me, Vaikai river,
Is all this the reward of penance done
By these girls in prior births,
Standing before the blazing fire
With senses held in full control,
That they now stand beside their mothers
And perform these holy rites,
And bathe in your limpid stream
In this dewy month of Tai ?

Paripatal-11 (lines 74-92)-Words by ĀCIRIYAN NALLAN TUVANĀR. Music by NĀKANĀR. MODE-PĀLAIYĀL.

Mārkali - the month from mid-December to mid-January. *Ātirai* - the star Betelgeuse in the constellation Orion. *Vaikai* - the river which flows by the city of Maturai. *Tai* - the month from mid-January to mid-February.

89 அவன் குன்றம்

மிசை படு சாந்தாற்றி போல, எழிலி
இசை படு பக்கம், இரு பாலும் கோலி,
விடு பொறி மஞ்ஞை பெயர்பு உடன் ஆட,
விரல் செறி தூம்பின் விடு துளைக்கு ஏற்ப,
முரல் குரல் தும்பி அவிழ் மலர் ஊத;
யாணர் வண்டினம் யாழ் இசை பிறக்க;
பாணி முழவு இசை அருவி நீர் ததும்ப;

பரிபாடல்-xxi 30-36 நல்லச்சுதனார்

சாந்தாற்றி—சிற்றாலவட்டம் (விசிறி). எழிலி—மேகம், இடி. தூம்பு—வங்கியம், குழல். கோலி—விரித்து. மஞ்ஞை—மயில். பெயர்பு—எழுந்து. பாணி—பாணி என்னும் தாளம். ஒருங்கு ஒலிக்கும்—ஒன்றாக ஒலிக்கும்.

89 *HIS HILL*

On either side raising up his wings
Which seem like uplifted fans
Which people wave
To dry the painted sandal paste,
The strutting peacock
With the spotted tail
Dances on the hill-slope
To the rhythmic rumble
Of the rolling thunder-cloud.
The bees with melodious voice
Humming beside the blossomed flowers
Evoke the music of the pipe
When skilled fingers play on it,
Now closing a hole,
And now opening another.
Fresh swarms of buzzing chafers
Make music as sweet
As the melody of the horp
Like the rhythmic beats of a drum
Sound the waters of falling cataracts.
All diverse things on earth
Sound with one accord
On a single harmonious chord,
Here upon his hill
Which resounds with the beats
Of his victorious drums.

-Paripātal-1 (lines 32-38) - WORDS BY NALLACCUTANĀR. MUSIC BY KANNĀKANĀR. MODE-KĀNTĀRAM.

90 நான் மாடக் கூடல்

உலகம் ஒரு நிறையா, தான் ஓர் நிறையா,
புலவர் புலக் கோலால் தூக்க,—உலகு அனைத்தும்
தான் வாட, வாடாத தன்மைத்தே, தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்.

பரிபாடல்—திரட்டு-6 (பெயர் காணாப் பாடல்)

நிறை—எடை. புலம்—அறிவு. கோல்—தராசு. வாட—எடை குறைவாகக் காண. வாடாத—செழுமை குறைவு படாத. தென்னவன்—பாண்டியன். நான்மாட—பல மாளிகை; உப்பரிகைகள் பல உடைய வீடு.

90 *MATURAI CITY*

When the wise poets of old
With their imagination under full control,
Weigh in the balance of their mind,
Placing the world in one scale-pan,
And Maturai city in the other,
They saw that the entire world proved the lighter,
Unfading Maturai is ever lush,—
Maturai the city of many-storied mansions
Of the Southern King.

Paripātal-Tirattu-6 UNKNOWN

7

PATIRRUPPATTU

பதிற்றுப் பத்து

91 வலம்படு வியன் பணை

புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே—
பெரிய தப்புநர் ஆயினும், பகைவர்
பணிந்து திறை பகரக் கொள்ளுநை ஆதலின்—
துளங்கு பிசிர் உடைய, மாக் கடல் நீக்கி,
கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன் பணை
ஆடுநர் பெயர்த்து வந்து, அரும் பலி தூஉய்,
கடிப்புக் கண் உறூஉம் தொடித் தோள் இயவர்,
அரணம் காணாது, மாதிரம் துழைஇய
நனந் தலைப் பைஞ்ஞலம் வருக, இந் நிழல் என,
ஞாயிறு புகன்ற, தீது தீர் சிறப்பின்,
அமிழ்து திகழ் கருவிய கண மழை தலைஇ,
கடுங் கால் கொட்கும் நன் பெரும் பரப்பின்,
விசும்பு தோய் வெண்குடை நுவலும்
பசும் பூண் மார்ப, பாடினி வேந்தே!

பதிற்றுப் பத்து—2—7 குமட்டூர் கண்ணனார்

புரைவது—ஒப்பது. தப்புநர்—தவறு செய்தவர். பகர—கொடுக்க. துளங்கு—துள்ளுகிற. பிசிர்—நீர்த் துளி. நீக்கி—கடந்து. கடம்பு—கடப்பமரம், காவல் மரம். வலம்படு—வெற்றி தரும். வியன்—பெரிய, அகன்ற. பணை—முரசு. பெயர்த்து—மீண்டும், இடம் விட்டு. கடிப்பு—முரசடிக்கும் குறுந்தடி. கண்—முரசின் (அடிக்கப் படும்) கண். தொடி—வளை. இயவர்—வாத்தியக்காரர். அரணம்—பாதுகாப்பான இடம். மாதிரம்—திக்கு. துழைஇய—துழாவிய; தேடிய, பைஞ்ஞலம்—பசுமை பொருந்திய நிலத்தில் உள்ளோர். புகன்ற—சொல்லிய. திகழ்—உள்ளடக்கிக் கொண்ட. கருவி—தொகுதி (மின்னல், இடி, முதலியவற்றின்). கணம்—தொகுதி. கொட்டுதல்—சுழலுதல், சூழ வருதல், நுவலும்—கூறும்.

91 *THE DRUM OF VICTORY*

O king with bevies of girls of song and dance!
Though your enemies are guilty
Of grave offences against you,
Yet if they offer you humble tribute
In open submission,
You accept it most graciously.
However much one may try, it is difficult
To find anything comparable to you.
Crossing the great and dark-blue ocean
Whose breakers shatter into shining spray,
You cut down your foemen's guarded emblem-tree,
And made of it a big war-drum
Whose very sound brings you victory.
Your drummers with golden bracelets on their arms,
Approach it dancing, strewing flowers.
They eye its drumsticks with eager longing;
Shouting, 'O ye people of this wide world,
Who anxiously look into every nook and corner,
Seeking in vain for a safe sanctuary,
Come hither into the shade of our royal white parasol.
Look! How it brushes against the vast and goodly
Heaven's vault, glorious, immaculate, and desired of the sun;
Where are gathered multitudinous clouds
Armed with thunder and lightning, and glistening rain-drops;
And where fierce winds whirl, and blow on and on.
Thus they sing of your gracious parasol,
And praising it, praise the might of your jewelled chest.

Patirruppattu—2—7 KUMATTŪRKKANNANĀR

92 தொடர்ந்த குவளை

சிதைந்தது மன்ற, நீ சிவந்தனை நோக்கலின்,
தொடர்ந்த குவளைத் தூ நெறி அடைச்சி,
அலர்ந்த ஆம்பல் அக மடிவையர்,
சுரியல் அம் சென்னிப் பூஞ் செய் கண்ணி
அரியல் ஆர்கையர், இனிது கூடு இயவர்,
துறை நணி மருதம் ஏறி, தெறுமார்,
எல் வளை மகளிர் தெள் விளி இசைப்பின்,
பழனக் காவில் பசு மயில் ஆலும்;
பொங்கை வாயிற் புனல் பொரு புதவின்,
நெய்தல் மரபின், நிரை கள், செறுவின்
வல் வாய் உருளி கதுமென மண்ட,
அள்ளல் பட்டு, துள்ளுபு துரப்ப,
நல் எருது முயலும் அளறு போகு விழுமத்துச்
சாகாட்டாளர் கம்பலை அல்லது,
பூசல் அறியா நல் நாட்டு
யாணர் அறாஅக் காமரு கவினே !

பதிற்றுப்பத்து—3—7 பாலைக் கௌதமனார்

சிதைந்தது—அழிந்தது. மன்ற—நிச்சயமாக. சிவந்தனை—கோபித்து. தொடர்ந்த—ஆண்டுதோறும் வித்திட வேண்டாமல் முளைத்து வரும். நெறி—புறஇதழ் ஒடித்த முழுப்பூ. அடைச்சி—கூந்தலில் செருகி. அக மடிவையர்—அக இதழ்களால் அமைந்த தழைஆடையைஅணிந்தவர். சென்னி—தலை. அரியல் ஆர்கையர்—கள்ளை உண்பவர். கூடு இயவர்-வாச்சியங்களை உடையோர் இயவர்—தோற்கருவியாளர். நணி—அருகில் உள்ள. தெறுமார்—ஓட்டும் பொருட்டு. எல்—ஒளி பொருந்திய. வாயில்—நீரை (வர) விடும் வாயில். புதவு—கதவு; மதகு. மரபு—தொடர்ச்சியாக வளர்ந்து வருகை. கள்—வண்டு. செறு—வயல். வல்—வலிய; திண்ணிய. உருளி—சக்கரம். மண்ட—நெருங்க. அளறு—குழைந்த சேறு. துரப்ப—செலுத்த. விழுமம்—துன்பம். சாகாடு—சகடு; வண்டி. கம்பலை—முழக்கம். பூசல்—ஆரவாரம். யாணர்—புதுவருவாய்.

92 *PERENNIAL BLOSSOMS*

The idyllic beauty of lovely lands
Where riches pour endlessly in,
Is destroyed quite, if you but look at them
With your eyes blazing an angry red.
On those lands gay green peacocks
Perched upon the boughs of trees
Standing at the edge of the drinking pool,
Hear the shouts, meant to scare them off,
Of bright-bangled girls who had stuck into their hair
Full-blown blossoms, their sepals stripped off,
Of perennial blue-lilies pure of petal,
Girls who wear skirts plaited of the petalled white lily
Woven nicely and criss-cross.
The birds take them to be the music of the flutes
Of the curly-haired, flower-chapleted ploughmen
Who had drunk deeply of the clear palm-wine,
And so, they come down, and dance upon the corn-fields
Made slushy by the waters of the pool
Which in their out-flowing rush
Press hard upon the outletting sluices.
No harsh noises are heard there
Other than those of the alert cart-drivers
Who seek to urge their straining bulls
Which struggle to pull the carts with strong-rimmed wheels
Out of the age-long and flower-rich slush.

Patirruppattu—3—7 PĀLAI-K-KAUCIKANĀR

93 நல் நுதல் விறலியர்

அட்டு ஆனானே, குட்டுவன்; அடுதொறும்,
பெற்று ஆனாரே, பரிசிலர் களிறே;
வரைமிசை இழிதரும் அருவியின், மாடத்து
வளி முனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்,
சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின்,
பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல,
நல் நுதல் விறலியர் ஆடும்
தொல் நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே.

பதிற்றுப் பத்து—4—7 பரணர்

அட்டு—(பகைவரைக்) கொன்று. ஆனான்—போதும் என்று அமையான். குட்டுவன்—கடல் பிறக்கோட்டிய சேரன். பரிசிலர்—பரிசுகளைப் பெறுபவர். வளியின்—காற்றிலே. அவிர்வரும்—விளங்குகின்ற. நுடங்கும்—அசையும். சுரை—திரிகுழாய். வழிபு—வழிந்து. உராலின்—பரவுதலால். பாண்டில் விளக்கு—காலையுடைய விளக்கு. பரூஉ—பருமனான. அழல—எரிந்து ஒளி வீச. வரைப்பு—எல்லை. உரை—புகழுரை. ஆனா—அளவில் அடங்கா; ஓயமாட்டா.

93 *FAIR-BROWED DANCER*

Countless are the deadly wars
Kuttuvan has waged;
And countless are the gifts of elephants
He has given his bards
After every war.
Within the precints of his ancient city
Gleaming white banners
Wave from every house-top
And flutter in the breeze
In every street.
They seem like cascades loaping down
From the crests of serried hills.
There, in the light
Of tall standard lamps
Burning bright with big tongues of flame,
As the feeding oil
Gushes in a rapid stream,
Bright-browed dancers
Like a stately bull protecting a herd,

* 'Nightingale'—'Angil' in the toxt is equated with nightingale in their Kuruntokai by Dr. Shanmugam and Luddes.

மாலைக் காலத்தின் வருகை

மான் கணம் மரமுதல் தெவிட்ட, ஆன் கணம்
கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர,
ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில்
ஓங்கு இரும் பெண்ணை அக மடல் அகவ,
பாம்பு மணி உமிழ, பல் வயின் கோவலர்
ஆம்பல் அம் தீம் குழல் தெள் விளி பயிற்ற,
ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட, வள மனைப்
பூந் தொடி மகளிர் சுடர் தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயர, கானவர்
விண் தோய் பணவைமிசை ஞெகிழி பொத்த,
வானம் மா மலைவாய் சூழ்பு கறுப்ப, கானம்
கல்லென்று இரட்ட, புள்ளினம் ஒலிப்ப,
சினைஇய வேந்தன் செல் சமம் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ—

தெவிட்ட—திரள. பயிர்—அழைக்கும். ஏங்கு—ஊதுகின்ற, வயிர்—ஊதுகொம்பு. கொடு—வளைந்த. பெண்ணை—பனை. அகவ—அழைக்க. வயின்—இடம். சுடர்—விளக்கு. தலைக் கொளுவி—ஏற்றி. அயர—நிகழ்த்த. தோய்—தீண்டுகின்ற. ஞெகிழி—கடைக் கொள்ளி. பொத்த—பிறப்பிக்க. வானம்—மேகம். வாய்—இடம். இரட்ட—மாறிக் கூப்பிட. சினைஇய—சினந்த; கோபமுற்ற. துன்னுதல்—நெருங்குதல்.

He escorted us down to the ancient city gates
Where hangs the never silent drum.
At the drinking pool he left us
Returning the way he came.
From then on,
With a love as great as at the first meeting,
Every day, habitually,
He comes to us at night.
And, whenever he comes.
Should the watchmen hasten on their rounds,
Or shouldst you awake from sleep,
Or should the moon appear,
Denied to him is the sweet rest
On her soft shoulders fair as the bamboo.
If we of our assignation fail, he grows not impatient.
He is in the full prime of manhood;
And his riches have not made him play false
And be untrue to himself.

தலைவன் பெயர்ந்த நிலை

"நேர் இறை முன்கை பற்றி, நுமர் தர,
நாடு அறி நல் மணம் அயர்கம்; சில் நாள்
கலங்கல் ஓம்புமின், இலங்குஇழையீர்!" என,
ஈர நல் மொழி தீரக் கூறி,
துணை புணர் ஏற்றின், எம்மொடு வந்து,
துஞ்சா முழவின் மூதூர் வாயில்,
உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்.

இறை—முன்கையின் பொருத்து. அயர்கம்—நிகழ்த்துவோம். ஓம்பு—தவிர். துஞ்சா – அறாத. பெயர்ந்தனன்—மீண்டு போனான்.

Oft has he reflected on his stealthy entry
Into this city of ours, so full of perils:
And his mind is now made up.
Full of dangers is the night.
Giant tigers which block and fill their caves;
Monstrous leophants; bears;
Wild buffaloes with hollow horns; elephants;
And angry thunders cruel and murderous
And destructive in their might;
Malignant deities;
Deadly serpents creeping after their prey;
Cavernous pools, dark and deep,
In whose eddying waters crocodiles, alligators,
And other dreadful beasts lie in wait;
Gruesome spots where fell bandits
Pile their slain victims in a heap:

தலைவன் வரும் வழியின் அருமை நினைந்து, தலைவி கலங்குதல்

அதற் கொண்டு,
அன்றை அன்ன விருப்போடு, என்றும்,
இரவரல் மாலையனே; வருதோறும்,
காவலர் கடுகினும், கத நாய் குரைப்பினும்,
நீ துயில் எழினும், நிலவு வெளிப்படினும்,
வேய் புரை மென் தோள் இன் துயில் என்றும்
பெறாஅன்; பெயரினும், முனியல் உறாஅன்;
இளமையின் இகந்தன்றும் இலனே. வளமையின்
தன் நிலை தீர்ந்தன்றும் இலனே. கொன் ஊர்
மாய வரவின் இயல்பு நினைஇ, தேற்றி,
நீர் எறி மலரின் சாஅய், இதழ் சோரா
ஈரிய கலுழும், இவள் பெரு மதர் மழைக்கண்,
ஆகத்து அரிப் பனி உறைப்ப, நாளும்,
வலைப் படு மஞ்ஞையின், நலம் செலச் சாஅய்,
நினைத்தொறும் கலுழுமால், இவளே—

இரவல்—இரவுக் குறியிலே வரும். மாலையன்—(தொடர்ந்த) இயல்பினன். கதம்—கோபம். வேய்—மூங்கில். புரை—ஒத்த. பெயரினும்—நாங்கள் மனையின் உள்ளே சென்றாலும். முனியல்—கோபித்தல். இகந்து—கடந்து. வளமையின்—செல்வச் செருக்கால். கொன்—அச்சம். மாய வரவு—பொய்யான இரவுக் குறி. தேற்றி—வரைந்து கொள்ள முடிவுசெய்து. எறி—எறிந்துதாக்கிய. சாய்—அழகுகெட்டு. இதழ் சோரா—இமைகள் சோர்ந்து. கலுழும்—கலங்கும். மதர்—மதர்த்த; செழித்துச் செருக்கிய. அரிப் பனி—அரித்து விழும் கண்ணீர். நலம் செல—நலம் போம்படி.

Slippery paths; and blind cul-de-sacs;
Horrible goblin shapes; and pythons huge;
These,
And many other hazards far deadlier than they,
Teem in the depths of the caves of his hill,
Where lofty peaks jostle each other.
Her large and wanton eyes, soft as dew,
Wilt like a flower struck by heavy drops of hail.
Her eyelids droop,
And her inflamed eyes are wet with tears.
From their straining lashes
Tears deop like rain upon her bosom.
Day after day, her beauty is passing away
Like that of a peacock caught in a snare.
She quails and thembles, again and again,
Whenever she thinks of his dangers,
This is our story, mother dear.

—Kurinchi-p-pāttu —KAPILAR

---

* Tradition heart that Kapilar sang this idyll to tell a northern prince about the course of love in the Tamil country. But some scholars dispute that it was Kapilar who sang this piece.

இரவில் தலைவன் வரும் வழியின் அருமை

கங்குல்,
அளைச் செறி உழுவையும், ஆளியும், உளியமும்,
புழற் கோட்டு ஆமான் புகல்வியும், களிறும்,
வலியின் தப்பும் வன்கண் வெஞ் சினத்து
உருமும், சூரும், இரை தேர் அரவமும்,
ஒடுங்கு இருங் குட்டத்து அருஞ் சுழி வழங்கும்
கொடுந் தாள் முதலையும், இடங்கரும், கராமும்,
நூழிலும், இழுக்கும், ஊழ் அடி முட்டமும்,
பழுவும், பாந்தளும், உளப்படப் பிறவும்,
வழுவின் வழாஅ விழுமம், அவர்
குழு மலை விடரகம், உடையவால் எனவே'

குறிஞ்சிப்பாட்டு —ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது

அளை—முழைஞ்சு; குகை. உழுவை—புலி. உளியம்—கரடி. புழல்—உள்ளீடு உடைய. கோடு—கொம்பு. ஆமா—காட்டுப் பசு. தப்பும்—கெடுக்கும். வன்—தறு கண்மையை உடைய; கொடிய. வெ—வெம்மையையுடைய. சூர்—கொடும் தெய்வம். அரவம்—பாம்பு. அரு—போதற்கு அரிய. வழங்கும்—திரியும். கொடுந் தாள்—வளைந்த காலையுடைய. முதலை, இடங்கர், கராம்—முதலை இனத்தைச் சார்ந்தவை. நூழில்—வழி பறிப்பார் கொல்லும் இடம். இழுக்கு—வழுக்கு நிலம். ஊழ் அடி—நடந்து தடமாகிய. முட்டம்—பக்கம். பழு—பிசாசு. பாந்தள்—பெரும் பாம்பு. விழுமம்—இடும்பை; துன்பம்.

PATTINAPPALAI

KAVIRI THE OCEAN GOER

Venus, the shining star of impeccable renown,
Might swerve from its course and southwards wend:
Or the black cloud might belie itself and cease to rain.
Letting the birds which sing its praises,
And has fed on falling raindrop droop now in agony.
But she, Cauveri, the ocean-gover,—
Whose head lies among the high mountains,
She will never belie herself;
But with her spreading waters raise the golden corn;
Upon the broad fields there,
Ever fertile of harvests.
There tall-stemmed water-lilies,
Standing amidst the watered fields,
Scorched by the furnace heat
Of the mills that press
The fragrant juice
Of the dark red sugar-cane,
Let their flowers droop :
And languish in their loveliness.
And yond, upon the medows,
Weaned and full grown calves,
Of full-bellied buffaloes,
Having crowned
Upon the red-paddy crops
Teeming with grain,
Sleep and rest
In the shade of lofty barns
There, the cocoanut palms
Stand laden with fruit;
And the cluster-fruited pantains.
Theres, grow the fruit-bearing areca-palms;
And the turmeric, which seents the air;
There, the mangoes stand, the choicest of their kind;
And the tufted palm trees, with Bunch on bunch of fruit;—

பட்டினப்பாலை

காவிரியின் சிறப்பு

வசை இல் புகழ், வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்,
தற் பாடிய தளி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி,
வான் பொய்ப்பினும், தான் பொய்யா,
மலைத் தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்—

சோழ நாட்டின் சிறப்பு

விளைவு அறா வியன் கழனி,
கார்க் கரும்பின் கமழ் ஆலைத்
தீத் தெறுவின், கவின் வாடி,
நீர்ச் செறுவின் நீள் நெய்தற்
பூச் சாம்பும் புலத்து ஆங்கண்,
காய்ச் செந்நெல் கதிர் அருந்து
மோட்டு எருமை முழுக் குழவி,
கூட்டு நிழல், துயில் வதியும்—
கோட் தெங்கின், குலை வாழை,
காய்க் கமுகின், கமழ் மஞ்சள்,
இன மாவின், இணர்ப் பெண்ணை,
முதற் சேம்பின், முளை இஞ்சி -
அகல் நகர் வியல் முற்றத்து,
சுடர் நுதல், மட நோக்கின்,
நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங் காற் கனங் குழை,
பொற் காற் புதல்வர் புரவி இன்று உருட்டும்,
முக் காற் சிறு தேர் முன் வழி விலக்கும்—
விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா,
கொழும் பல் குடிச் செழும் பாக்கத்து,
குறும் பல் ஊர் நெடுஞ் சோணாட்டு—

வசை—குற்றம். தற்பாடிய—தன்னைப்(மழைத் துளியை) புகழ்ந்த புள்—வானம்பாடிப் பறவை. தேம்ப—புலர; வருந்த. புயல்—மேகம்; மழை. தலைஇய—தலையையுடைய. புனல்—நீர். கொழிக்கும்—தெள்ளி ஒதுக்கும்,

There, thrive the kales with spreading root,
And the tender-shooted ginger.
Far flung cola land kings
Many rich family and fertile seaside towns,
And of villages too full may,
Which close to each other nestle.
There, in the spacious countyards
Of mansions rich and wide
Finely jeweled young maidens
Whose brows gleam bright, and eyes cast innocent glances,
Fling their heavy pendants of gold to chase off
The feeding hens, which peck at the drying grain.
And those pendants like a thwart the track
Of the tiny three-wheeled toycraft not horse-drawn,
But wheeled along by little children wearing golden anklets.
Save children's quarrels no other quarrel
Of calamitous war in unknown in the land.
Like stabled horses standing in a row,
Fastened by tethering ropes to pegs,
In the backwaters skirting the city
Stand the hard-bottomed boats,
Which sailing out to vend the white salt
Like the stars of Magha
Clasping the moon's disc
In a dark blue sky
Void of any cloud
Lies the high and curving lake bund
Strong and beautiful,
And the goodly lake, on whose broad expanse
Fragrance-dwelling flowers
Oppose their many hues,
Gleams bright with coloured loveliness.
Its twin matched lakes
Fulfil the two-fold desire.

The many-planked doors
Of the city
Have returned with chargoes of paddy.
Flowery groves thrive beyond luxuriant woods
abundant yield produces more and more insolent wealth,

நகரச் சிறப்பு

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல் லாய்ப் பஃறி,
பணை நிலைப் புரவியின், அணை முதல் பிணிக்கும்
கழி சூழ் படப்பை, கலி யாணர்ப்
பொழில் புறவின் பூந்தண்ட லை,

பட்டினப்பாலை—1-33 —உருத்திரங்கண்ணனார்

அறா—அற்றுப் போகாத; நீங்காத. வியன்—அகன்ற. கார்—பசிய; கரிய. ஆலை—அடுகின்ற கொட்டில். தெறு—சூடு. கவின்—அழகு. செறு—செய். சாம்பும்—வாடும். குறும்—சிறிய; ஒன்றற்கு ஒன்று அணிமையில் உள்ள. மோட்டு—பருமனான; மடமையுடைய. முழுக் குழவி முன்னால் ஈன்றிருந்த கன்று. கூடு—திரள்; குவியல். கோள்—குலைகளையுடைய. கமம்—மணம் வீசும். மா—மாமரம். இணர்—குலைகளையுடைய. பெண்ணை—பனைமரம். முதல்—அடி பரந்த. நகர்—மாளிகை. வியன்—அகன்ற. உணங்கு—உலர்கின்ற; உலர்த்தப்படும். உணா—உணவு. எறிந்த—வெருட்டிப் போக்கிய. கொடும்—வளைந்த. குழை—மகரகுண்டலம். பொன் கால்—காலில் பொன்னால் செய்த அணிகளை அணிந்த. புரவி—குதிரை. முக்கால்—மூன்று சக்கரங்களையுடைய. தேர்—சிறு வண்டி. விலக்கும்—தடுக்கும்; நீக்கும். விலங்கு பகை—தடுத்து அகலச் செய்யும் இடையூறு. கலங்கு—கலக்குகின்ற. கொழும்—செழுமை மிக்க. பாக்கம்—பக்கத்தில் உள்ள ஊர்.

கொள்ளை—விலை. வல்வாய்—வலிய இடம். பஃறி—படகு; ஓடம். பணை—பந்தி; வரிசை. நிலை—நிற்றல். அணை—கட்டுதல்; அணைத்தல். பிணிக்கும்—கட்டும். படப்பை—பக்கம்; தோட்டம். கலி—செருக்கை அளிக்கும். யாணர்—புது வருவாய். பொழில்—தோப்பு. புறவு—புறம்பான இடம். தண்டலை—சோலை; பூந்தோட்டம்.

NANNAN'S GIFTS

When you politely take leave, and start to go
He will at once give
The leader of your trough
A cotus of gold to wear upon his chest
And to your dancers jewels of great beauty;
And to you a fleet of tall chariots which run
As swift and smooth as flowing
And plephants tale as huge waters;
As mountains standing free,
And herds of milch-cows;
And bulls with clanging bells;
And houses with toummed manes
And trappings of puse gold;
And some of the enormous treasures
Which he about down where as food for mud;
And much else besides.

Pattuppattu-Malaipatukatam : lines 568-575

மலைபடுகடாம்

மெல்லெனக் கூறி விடுப்பின், நும்முள்
தலைவன் தாமரை மலைய, விறலியர்
சீர் கெழு சிறப்பின் விளங்குஇழை அணிய,
நீர் இயக்கன்ன நிரை செலல் நெடுந் தேர்,
வாரிக் கொள்ளா வரை மருள் வேழம்,
கறங்கு மணி துவைக்கும் ஏறுடைப் பெரு நிரை,
பொலம் படைப் பொலிந்த கொய் சுவற் புரவி,
நிலம் தினக் கிடந்த நிதிய மோடு, அனைத்தும்,

மலைபடுகடாம்—568-575

விடுப்பின்—அவனை விட்டு நீங்கினால். இழை—அணிகலன். நீர் இயக்கு—நீரின் போக்கு (ஓட்டம்). வாரி கொள்ளா—கட்டுப் படுத்தப் படாத. வாரி—யானை படுக்கும் இடம். வேழம்—யானை. கறங்கு—ஒலிக்கின்ற. துவைக்கும்—ஆரவாரிக்கும். நிரை—பசுத்திரள். பொலம்—பொன். படை—கலனை (சேணம்) முதலியவை. கொய்—திருத்தமாக வெட்டப் பட்ட. சுவல்—கழுத்து (மயிர்). நிலம்—மண். தின—தின்னும்படி. நிதியம்—பொருள்; திரள்.

9

PURANANOORU

புறநானூறு

நிலைத்து வாழ்வாயாக

மண் திணிந்த நிலனும்,
நிலன் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்,
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம் பெரும் பூதத்து இயற்கை போல—
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்,
வலியும், தெறலும், அளியும், உடையோய்!
நின் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண் தலைப் புணரிக் குட கடற் குளிக்கும்,
யாணர் வைப்பின், நல் நாட்டுப் பொருந!
வான வரம்பனை! நீயோ, பெரும!
அரங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ,
நிலம் தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈர்-ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய,
பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்!
நாஅல் வேத நெறி திரியினும்,
திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி,
நடுக்கின்றி நிலியரோ அத்தை—அடுக்கத்து,
சிறு தலை நவ்விப் பெருங் கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங் கடன் இறுக்கும்
முத் தீ விளக்கின், துஞ்சும்
பொற் கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!

புறநானூறு—2 : —முரஞ்சியூர் முடிநாகராயர்

திணிந்த—செறிந்த. விசும்பு—ஆகாயம். தைவரு—தடவி வரு. வளி—காற்று. தலைஇய—தலைப்பட்ட. முரணிய—மாறுபட்ட. போற்றார்—பகைவர். சூழ்ச்சி—ஆலோசனை. தெறல்—அழித்தல். அளி—அருள். பெயர்த்தும்—பின்னும். புணரி—அலை. சினைஇ—கோபித்து. தலைக்கொண்ட—தன்னிடத்தே கொண்ட. பொலம்—பொன். பொருது—சண்டை செய்து. களம்—போர்க்களம். ஒழிய—சாக. பதம்—உணவு. வரையாது—அளவே இல்லாதபடி. நெறி—ஒழுக்கம். திரியினும்—வேறுபடினும். சுற்றம்—கிளை; உறவினர். சேண்—நெடுந்தூரம். நடுக்கு—நடுக்கம். நிலீயர்—நிலை பெறுவாயாக. அத்தை—ஒரு முன்னிலை அசை. அடுக்கம்—அரைமலை. நவ்வி—மான்குட்டி. மாப்பிணை—பெண்மான். அந்தி—அந்திக்காலம். அரும்—செய்தற்கு அருமையான. கடன்—கிரியை. இறுக்கும்—பண்ணும். துஞ்சும்—தூங்கும். கோடு—சிகரம். பொதியம்—பொதியில் மலை.

LONG LIVE OUR GLORIOUS KING

The land of elemental Earth compact;
The Ethereal sky which that land holds high;
The Air which scours the skys expanse;
The Fire which leaps up in that air;
The water which fights the scorching fire;
These are the five primordial elements.
Your inherent nature. O glorious King,
Partakes of the intrinsie qualities of all these.
Oh! You are
Patient with your enemies;
Broad in your policies;
Mighty;
Fiery;
And yet tender and gracious.
The sun out of your own ocean born
Rises up and speeds across the sky to dip again
In to the white-crested waves of your western sea,
O great warrior !
The cities in gour fair domain
Bring you plenteous riches, fresh and new;
The sky is the limit of your territory;
When the twice-fifty princes,
Who had usurped the realm,
Were wroth with the princes five,
And their battle-chargers flung and tossed
Their waving mane and plume in bold challenge;
And who, wearing emblematic battling flowers;
Fought and died to a man
Upon the gory battle plain,
Then you fed every one with much food.
The sweetest milk may turn sour;
Or the bright orb of day turn dark;
Or the code of the eternal Vedas.
May lapse from virtue's path :
But your loyal counsellors would never err.

இருகலக்கூடங்கள்

இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,
கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே
பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,
கொல் துறைக் குற்றிலமாதோ—என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல் எம் கோமான், வைந் நுதி வேலே

புறநானூறு—95 : —ஔவையார்

இவ்வே—இவையே. பீலி—மயிலின் தோகை. கண்—கணு. நோன்—வலிமை. காழ்—காம்பு. திருத்தி—செவ்விதாக்கி. கடி—காவல். வியல்—அகலம். நகர்—மாளிகை. கோடு—பக்கம். நுதி—நுனி. குற்றில்—குறிய கொட்டில். பதம்—உணவு. ஒக்கல்—சுற்றம்; உறவினர். வை—கூர்மை. நுதி—நுனி.

May you and they shine gloriously on the earth
For ever and for ever,
Firm as the gold-crested Himālayas,
And the Potiyil Hill on whose middle slopes
Large-eyed deer with their small-headed fawns,
Sleep in the light of the triple fire,
When at evening's close
Holy men perform their onerous, sacred rites!

'Twice fifty princes'—the Kauravas of the Mahābhārata.
'Princes five'—the Pandavas, their cousinly foes.
'Vedas'—Ancient, sacred Hindu scriptures.
Potiyil—A southern hill, the traditional abode of Agastya, the sage of the Tamil land.
'Triple-fire'—the group of three holy fires at which Brahmins perform their sacred rites.

THE TWO ARMOURIES

These spears are well adorned with peacock plumes,
And decked with fresh garlands;
Their thick strong shafts are finely wrought,
And are nicely oiled;
And these are housed well.
In a well-guarded stately mansion.
But those, through goring his enemies,
Have their edges blunted, tip and side;
And mostly lie at the blacksmith's little forge—
They, the spears of our chief,
Who when he has plenty
Lavishes rich food on us;
And when he has not,
Shares what little he has with us—
He, the liege lord
Of all the poor and their kinsfolk,
That great nobleman.

Purananūru—95 : —*AVVAIYĀR*

இளையன் என இகழாதீர்

போற்றுமின், மறவீர்! சாற்றுதும், நும்மை:
ஊர்க் குறுமாக்கள் ஆடக் கலங்கும்
தாள் படு சில் நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்னை
நுண் பல் கருமம் நினையாது,
'இளையன்' என்று இகழின், பெறல் அரிது, ஆடே.

புறநானூறு—104 : —ஔவையார்

போற்றுமின்—பாதுகாமின். சாற்றுதும்—அறிவிப்போம். அட்டு—கொன்று. ஈர்ப்பு—இழுத்தல். கராதது—முதலையை உடையது. என்னை—என் இறைவன். ஆடு—வெற்றி.

BEWARE!

Hear me, O Warriors, have a care,
I warn you all, 'Beware!'?
In shallow waters ankle-deep.
Muddied by the play of village urchins,
Might lurk a crocodile
Which could attack and drag down
A mighty elephant
And kill it too.
Even so is my chief.
If you ponder not on his deeds of valour,
And scorn him as young in years,
I warn you all,
You will surely rue it,

Purananūru—104 : —*AVVAIYĀR*

This is one of her poems in praise of her patron Atiyamān Neṭumān Anci.

நீரினும் இனிய சாயல்

சேயிழை பெறுகுவை—வாள் நுதல் விறலி!
தடவு வாய்க் கலித்த மா இதழ்க் குவளை
வண்டு படு புது மலர்த் தண் சிதர் கலாவப்
பெய்யினும், பெய்யாது ஆயினும், அருவி
கொள் உழு வியன் புலத்துழை கால் ஆக,
மால்புடை நெடு வரைக் கோடுதோறு இழிதரும்
நீரினும் இனிய சாயற்
பாரி வேள்பால் பாடினை செலினே.

புறநானூறு—105 : —கபிலர்

இழை—அணிகலன். வாள்—ஒளி. நுதல்—நெற்றி. தடவு—சுனை. வாய்—இடம். கலித்த—தழைத்த. மா—கரிய. படு—மொய். தண்—குளிர்ந்த. சிதர்—துளி. கலாவ—கலக்க. வியன்—பரந்த. கால்—நீர் ஓடும் வாய்க்கால். மால்பு—கண்ணேணி. கோடு—சிகரம். வரை—மலை. சாயல்—மென்மை; அழகு.

RED GOLD JEWELS

Red-gold jewels you will have,
O bright-browed dancer fair,
If you go to him singing,
To Pari the Patron, of the Velir clan.
On his tall range of hills
Bamboo ladders cling to crags
And whether the rains do, or do not, pour,
Cascades leap from every ridge,
And run a criss-cross as hourishing streams
To water the wide, ploughed fields of grain;
Dark-petalled blue water-lilies
Cluster thick in its spacious tarns;
Cool drops of rain floating down from the sky
Gently alight and mingle on the blossomed flowers
Swarming with tribes of happy bees.

Puranānūru—105 ; *—KAPILAR*

அன்றும் இன்றும்

தீம் நீர்ப் பெருங் குண்டு சுனைப் பூத்த குவளைக்
கூம்பு அவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல்,
ஏந்து எழில் மழைக் கண், இன் நகை, மகளிர்
புல் மூசு கவலைய முள் மிடை வேலி,
பஞ்சி முன்றில், சிற்றில் ஆங்கண்,
பீரை நாறிய சுரை இவர் இருங்கின்,
ஈத்து இலைக் குப்பை ஏறி, உமணர்
உப்பு ஒய் ஒழுகை எண்ணுப மாதோ:
நோகோ யானே: தேய்கமா, காலை!—
பயில் பூஞ் சோலை மயில் எழுந்து ஆலவும்,
பயில் இருஞ் சிலம்பில் கலை பாய்ந்து உகளவும்,
கலையும் கொள்ளாவாக, பலவும்
காலம் அன்றியும் மரம் பயம் பகரும்
யாணர் அறாஅ வியல் மலை அற்றே
அண்ணல் நெடு வரை ஏறி, தந்தை
பெரிய நறவின், கூர் வேற் பாரியது
அருமை அறியார், போர் எதிர்ந்து வந்த
வலம் படு தானை வேந்தர்
பொலம் படைக் கலிமா எண்ணுவோரே.

புறநானூறு—116 : —கபிலர்

தீம்—இனிய. குண்டு—ஆழமுடைய. குவளை—செங்கழுநீர். கூம்பு—முகை; மொட்டு. முழுநெறி—புற இதழ் ஒடித்த முழுப் பூ. புரள்வரும்—அசையும். ஏற்று எழில்—மிக்க அழகு. மழைக்கண்—குளிர்ச்சி பொருந்திய கண். மூசு—மொய்த்த. கவலை—கவர்த்த வழி. மிடை—நெருங்கிய (நெருக்கம்). முன்றில்—முற்றம். பீரை—பீர்க்கு. இவர்—படர்ந்த. ஈத்திலை—ஈச்சமரத்தின் இலை. உமணர்—உப்பு வாணிகர். ஒய்—செலுத்தும். ஒழுகை—சகட ஒழுங்கு. காலை—வாழ்நாள். பயில்—நெருங்கிய. ஆல்—ஆட. இரும்—பெரிய. சிலம்பு—மலை. கலை—ஆண் குரங்கு. ஆய்ந்து—எண்ணிப் பார்த்து. உகள—(துள்ளித்)தாவ. கொள்ள—பறித்து உண்ண விரும்பாத. பயம்—பழம். யாணர்—புதுவருவாய். அறா—அற்றுப் போகாத. வியன்—அகன்ற பரப்பையுடைய. அற்று—அத் தன்மையை உடையது. பெரிய—மிக்க. நறவு—மது; கள். அருமை—பெருமை; சிறப்பு; வலிமை. வலம்படு—வெற்றியைப் பெறுகின்ற. தானை—சேனை; போர்ப் படை. பொலம் படை—பொன்னால் செய்யப்பட்ட அணிகலங்களை அணிந்த. கலிமா—குதிரை.

THEN AND NOW

Around the slim waists
Of these maidens of enchanting loveliness,
With tender, dew-soft eyes,
And charming delightful smiles,
Sway the full buds just about to blossom
Of the purple water lilies
Gleaming upon the sweet waters
Of the broad and deep mountain pools
Hedges of thorn intersected here and there
By footpaths over grown with grass,
Sumound their little hut,
Whose front court is littered everywhere
With the wisps of cotton of the silk-cotton tree.
There,
Beside the creeping sponge-gourd
And the climbing calabash
Withued leaves of the date-palm
Lie piled in heaps.
These dainty princess climb upon them
And alas! count as they pass by
The carts of pebbly salt
Of the salt-vendors' caravan.—
Ah! Woe is me!
May my days perish forthwith!
    These are the maids who in former days
Stood upon the tall commanding peaks
Of their father's broad and fertile mountain range,
Where strutting peacocks danced
In their favourite glades amidst flowery groves,
And when leaping monkeys gambolled;
And where the fruits yielded even out of season,
Such surfiet of frint
That the cloyed monkeys do not wish to pluck
    From that gorgeous, glorious vantage height them
These maidens were went to count
The gold panoplied chargers of kings,
Who came with mighty armies
To offer battle to their father
Unaware of his unconquerable might—
To Pari of the sharp lance,
Pari the generous, ever prodigal of wine

Puranānūru—116 : ***—KAPILAR***

தந்தை நாடு

மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்,
வயலகம் நிறைய, புதல் பூ மலர,
மனைத்தலை மகவை ஈன்ற அமர்க் கண்
ஆமா நெடு நிரை நன் புல் ஆர,
கோஒல் செம்மையின் சான்றோர் பல்கி,
பெயல் பிழைப்பு அறியாப் புன்புலத்ததுவே—
பிள்ளை வெருகின் முள் எயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய் தொடி அரிவையர் தந்தை நாடே.

புறநானூறு—117 : —கபிலர்

மைம்மீன்—சனி. தூமம்—புகை : தூமகேது. வெள்ளி—சுக்கிரன். ஆமா—காட்டுப் பசு. ஆர—உண்ண. ஆய்—நுண்மை. தொடி—வளை.

THEIR FATHERLAND

The dark planet may smoulder;
Or the earth be enveloped in smoke;
Or the silver planet fly southwards;
Yet crops teem there in the fields,
And flowers blossom on the shrubs,
And herds of tender-eyed kine
With their calves tethered in the homestead
Browse at ease on lush grass.
Wise and good men throng there evenmore;
The welcome rain never fail, his fields;
And green-leaved jasmine abounds with buds
Sharp and white like kittens' teeth
In the glorious father-land
Of these charming maidens bangled bright
Since the secptre of their father
Is ever straight.

Puranānūru—117 : —*KAPILAR*

---

dark planet—Saturn. Silver planet—Venus.

பிறர்க்கு என முயலுநர்

உண்டால் அம்ம, இவ் உலகம்—இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழி எனின்,
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி
தமக்குஎன முயலா நோன் தாள்,
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே.

புறநானூறு—182 : —கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி

உண்டால்—உண்டே தான். துஞ்சலர்—மடிந்திரார். அயர்வு—மனக்கவற்சி. நோன்தாள்—வலிய முயற்சி.

WHY THE EARTH STAYS SECURE

No wonder the earth stays secure's
For it has noble men
Who never feast by themselves
Even if the fare should be
Divine ambrosia :
Men without anger, or hate,
Or idle sloth,
Or the fears and apprehensions
Of common humanity;
Men who would for glory's sake
Give up their very life;
Men who would scorn
The gift of the entire world
Should the least dishonour taint the gift.
Since such men of spirit and daring,
With no thought for themselves,
Live and work for others,
The earth stays secure

Puranānūru—182 : *—ILAMPERUVALUTI WHO DIED IN THE SEA*

The poet's personal name is unknown. The ascription is to 'The young Great Pāntiya who died in the sea'- Somebody like the Black Prince perhaps.

COMPARE

1. Epitaph on an Army of Mercenaries—*A. E. HOUSMAN*
These in the day when heaven was falling,
The hour when earth's foundations fled,
Follow'd their mercenary calling,
And took their wages and are dead.
Their shoulders held the sky suspended;
They stood, and earth's foundations stay;
What God abandoned, these deferded,
And saved the sum of things for pey.

யானை புக்க புலம்

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மா நிறைவு இல்லதும், பல நாட்கு ஆகும்;
நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போல,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

புறநானூறு—184 : —பிசிராந்தையார்

மா—நிலஅளவை வகை. செறு—வயல். தமித்து—தனித்து. யாத்து—ஈட்டிக் கொடுத்து. நந்தும்—செழித்து விளங்கும். மெல்லியன்—அற்ப குணங்களை உடையவன். கிழவன்—தலைவன். வைகலும்—நாள்தோறும். வரிசை—தரம். கல்லென்—ஆரவாரத்தை உடைய. சுற்றம்—உறவினர், சூழ இருப்போர். பரிவு—அன்பு. தப—கெட. நச்சின்—விரும்பினால்.

2. The year's at the spring,
The day is at the morn;
Morning's at seven;
The hill-side's dew-pearled;
The lark's on the wing;
The snail's on the thorn;
God's in his heaven—
All's right with the world !

—*Pippa Passes, Part I* —*ROBERT BROWNING*

THE TRAMPLING ELEPHANT

Cut the paddy corn
When it is ripe,
And make it into balls of rice,
And the yield of a small field,
Barely a fraction of a cent,
Will feed an elephant
For many a day
But if the brute
Should step into a field,
And trampling eat,
Even a hundred acres
Will not serve,
For the feet will spoil
More than the mouth could eat.
So, if a wise king
Levies his taxes justly,
His kingdom will yield him millions,
And will greatly prosper as well.
But, if weak and thoughtless,
He gathers around him,
Day after day,
A crowed of noisy courtiers,
Foolish and flattering,
And unjust to a degree,
And avidly wrings his uttermost,
Losing his people's love—
Then,
He is sure to be starved of his riches,
And like the elephant—trampled field,
His kingdom too will be ruined.

Puranānūru—184 : —*PICIRĀNTAI*

பகைக் கூழ் அள்ளல்

கால் பார் கோத்து, ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு கைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்,
பகைக் கூழ் அள்ளற் பட்டு,
மிகப் பல் தீ நோய் தலைத்தலைத் தருமே.

புறநானூறு—185 : —இளந்திரையன்

கால்—உருளை; சக்கரம். பார்—வண்டியின் அடிப்பாகத்தில் உள்ள நெடுஞ் சட்டம். ஞாலம்—உலகம். காவல்—காப்புடைய. சாகாடு—சகடம்; வண்டி. உகைப்போன்—செலுத்துவோன். மாணின்—சிறந்தவனாக இருந்தால். ஊறு—இடையூறு; துன்பம். யாறு—ஆறு; வழி. படும்—அமையும்; செல்லும். உய்த்தல்—செலுத்துதல். தேற்றான்—தெரியாதவன். அள்ளல்—சேறு. பட்டு—அகப்பட்டு. தீநோய்—தீயகேடு. தலைத்தலை—இடம் இடமாக; ஒவ்வோர் இடத்திலும்.

THE CHARIOT-DRIVER

A chariot on scout patrol,
With wheels on an iron axle-tree,
Will meet with no accidents on its way,
And will go nicely on a normal course,
If its piloting charioteer
Is well skilled in his art.
But if he does not know
How to steer it well in its course,
It will surely get caught
In the grip of the soft slush
Of the inimical ooze :
And, again and again,
And at every turn,
Will give endless trouble.

Puranānūru—185 : *TONDAIMAN ILANTIRAIYAN*

மன்னன் உயிர்த்தே உலகம்

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்;
அதனால், யான் உயிர் என்பது அறிகை
வேல் மிகு தானை வேந்தற்குக் கடனே

புறநானூறு—186 : —மோசிகீரனார்

உயிர்த்து—உயிராக உடையது. தானை—படை.

THE WORLD

No, it is not the paddy-corn,
Which sustains the world
Nor is it even the water
Which sustains it.
It is the king
Who is the sustaining life-breath
Of this wide, wide world.
And so,
It is the bounden duty
Of the monarch who commands
Great armies of spearmen
To realise to the full
That he alone is
'The life and very breath of the world.

Puranānūru—186 : *—MŌCIKĪRANĀR*

வாழிய நிலனே

நாடா கொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ் வழி நல்லவர் ஆடவர்,
அவ் வழி நல்லை; வாழிய நிலனே!

புறநானூறு—187 : —ஔவையார்

ஒன்றோ—ஓர் இடத்தில். அவல்—பள்ளம். மிசை—மேடு. ஆடவர்—ஆண்மக்கள்.

LONG MAY YOU LIVE, O LAND

O Land !
You may be a flourishing kingdom
Or a wild jungle;
You may be a hollow depression,
Or a high table-land;
These matter not.
Wherever the men are good,
There you are good.
So, long may you live,
O Land !

Puranānūru—187 —*AVVAIYĀR*

இளமையின் இரகசியம்

'யாண்டு பல ஆக, நரை இல ஆகுதல்
யாங்கு ஆகியர்?' என வினவுதிர்ஆயின்,
மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்,
யான் கண்டனையர் என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே

புறநானூறு—191 : —பிசிராந்தையார்

மாண்ட—மாட்சிமைப்பட்ட; சிறப்புடைய. நிரம்பினர்—கல்வி கேள்விகளை நிரம்பப் பெற்றுள்ளனர். கண்டனையர்—கருதியவற்றை அவை போலவே கருதுபவர். இளையர்—ஏவல் செய்வார். அல்லவை—முறையல்லாதவற்றை. ஆன்று—அகன்று; நற்குணங்களால் அமைந்து. அவிந்து—ஐம்புலன்கள் அவியப்பெற்று; பணிந்து. அடங்கிய—அடக்கம் உடைய; தக்கோரிடத்துப் பணிவுடைய. சான்றோர்—அறவொழுக்கங்களால் சிறந்தவர்.

THE SECRET OF YOUTH

'Your years are many we've heard,
Yet not a hair of your head is grey,
What's your secret?' You ask me. —
My noble wife and all my children
Are greatly learned and full of wisdom;
My servants anticipate every wish of mine;
My king does no evil at all;
But protects all his subjects evermore.
I have companions in plenty
In the village where I live,
Men who are wide in their learning,
With their passions all quenched,
And with humility and modesty in all their ways.

Puranānūru—191 : *—PICIRĀNTAI*

இனிய காண்க

ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்
ஈர்ந் தண் முழவின் பாணி ததும்ப;
புணர்ந்தோர் பூ அணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்!
இன்னாது அம்ம, இவ் உலகம்;
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே.

புறநானூறு—194 : —பல்குடுக்கைநன்கணியார்

நெய்தல்—சாக்காட்டுப் பறை. ஈர்ந்தண்—மிகக் குளிர்ந்த. பாணி—ஓசை. ததும்ப—மிக ஒலிப்ப. பைதல்—துன்பம். உண்கண்—மை தீட்டிய கண். வார்பு—ஒழுக; வெளியிட. உறைப்ப—துளிக்க; உதிர. இன்னாது—கொடிது.

DISTIL ITS SWEET

In this house
A funeral drum harshly, dolefully beats;
In that house
The pleasing notes of a wedding tabor
Ripples sweetly.
Here brides adorn themselves
With flowers
And there the weeping eyes of mourning women
Overflow with tears.
Thus perversely has He fashioned things
Alas! Bitter is this world.
Knowing all this,
Learn to distil its sweet.

Puranānūru—194 : —*PALKUDUKKAI NANKANIĀR*

சான்றோர்

பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய
மா மலை பயந்த காமரு மணியும்,
இடைபடச் சேயஆயினும், தொடை புணர்ந்து,
அரு விலை நன் கலம் அமைக்கும்காலை,
ஒரு வழித் தோன்றியாங்கு—என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

புறநானூறு—218 : —கண்ணகனார்

துகிர்—பவளம். மன்னிய—நிலைபெற்ற. காமரு—விரும்பத்தக்க. இடைபட—இடையே நிலப்பகுதி மிக உள்ளதாக. சேய—தொலைவில் உள்ளவை. தொடை புணர்ந்து—கோத்துப் பொருத்தப்பட்டு. அரு—அரிய; உயர்ந்த. நன்கலம்—நல்ல அணிகலம். ஒரு வழி—ஒரே இடத்தில். பாலர்—பக்கத்தில் உள்ளோர். ஆப—ஆவார். சாலார்—அமைதி இல்லாதவர். ஆகுப—ஆவார்.

GOLD, CORAL, AND PEARL

Gold, coral, and pearl,
And the lovely gems
Which mighty mountains bear,
Have all distant homes
Far from one another.
Yet worked into a jewel
Rich and rare
They cling together
And blend as one.
Even so,
Do men of worth
Ever link themselves
With worthy men,
And worthless folk
Do but consort
With the worthless—

Puranānūru—218 : *—KANNAKANĀR*

முல்லையும் பூத்தியோ?

இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல் யாழ் மருப்பின் மெல்ல வாங்கி,
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல் வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?

புறநானூறு—242 : —குடவாயிற் கீரத்தனார்

மருப்பு—(யாழின்) கோடு. வாங்கி—வளைத்து. கடந்த—கொன்று வென்ற. மாய்ந்த—இறந்த. ஒல்லையூர்—கோனாட்டில் உள்ள ஒலியமங்கலம் என்னும் ஊர் (உ.வே.சா.)

WHY DO YOU BLOSSOM?

Young men will not wear you;
Nor bangled maidens pick you;
Nor singing minstrels gently bend
Your slender vines with crooks
Of their fair lutes to wear you;
Dancing songstresses will not string
Your flowers to deck their lovely tresses :
For the glorious king is dead,
He who laid low with his mighty spear
Many a warrior host.
Why then, O Jasmine,
Why do you blossom in vain
In his bereaved domain?

Puranānūru—242 : —*KUTAVĀYIL KĪRATTANĀR*

Compare :

Ye flowery banks of bonny Doon
How can ye blume sae fair !
How can chant, ye little birds
And I sae fu' o' care !—*BURNS*

இன்னும் வாழ்வல்

யாங்குப் பெரிதுஆயினும், நோய் அளவு எனைத்தே,
உயிர் செகுக்கல்லா மதுகைத்து அன்மையின்?
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளிடைப் பொத்திய விளை விறகு ஈமத்து,
ஒளி அழற் பள்ளிப் பாயல் சேர்த்தி,
ஞாங்கர் மாய்ந்தனள், மடந்தை.
இன்னும் வாழ்வல்; என் இதன் பண்பே!

புறநானூறு—245 : —சேரமான் மாக்கோதை

யாங்கு—எப்படி. செகுக்கல்லா—போக்கமாட்டாத. மதுகைத்து—வலிமையுடையது. உயிர் செகுக்கல்லாமைக்குக் காரணம் மதுகை உடைத்தல்லாமை (பழைய உரை). போகிய—செறிந்து வளர்ந்த. களரிஅம் பறந்தலை—புறங்காடு. வெள்இடை—வெளிஇடம்; வெற்றிடம். பொத்திய—மூட்டிய. விளை விறகு—சிறிய விறகு. ஈமம்—பிணம் சுடுதற்கு அடுக்கும் விறகு அடுக்கு. ஒள்—ஒளிவீசும். அழல்—தீ. பள்ளி—இடம்; துயிலிடம்; படுக்கை. சேர்த்தி—பொருந்தப்பண்ணி. பாவை சேர்த்தி—உடம்பை அழகுபடப் பள்ளியுட் கிடத்தி (மிகப் பழைய உரை). மாய்ந்தனள்—மறைந்து போயினள். வாழ்வல்—உயிர் இருந்து வாழ்வேன்.

TOO, TOO FEEBLE GRIEF

Great, very great, is my grief, I claim.
But what is the measure of its strength?
It has proved too, too weak and feeble
To cut off my miserable life.
Yonder, in a bare and barren tract
Overgrown with straggling spurge
Upon a wretched pile of jungle twigs
For a funeral pyre,
Upon a bed of flame
I gently laid my love all dolled up,
And her lovely young form
Vanished in a trice from my sight;
And I am still alive!
What means all this?

Puranānūru—245 : —*MĀKKŌTAI*
(Who died at Kulamurram)

In literature there are very few lamonts by men on the death of their wives. Aja, and Ruru (Sanskrit), Orpheus (Greek) are rare exceptions.

அன்னை யாங்கு ஆகுவள்?

இளையரும் முதியரும் வேறு புலம் படர,
எடுப்ப எழாஅய், மார்பம் மண் புல்ல,
இடைச் சுரத்து இறுத்த மள்ள! விளர்த்த
வளை இல் வறுங் கை ஓச்சி, கிளையுள்,
'இன்னன் ஆயினன், இளையோன்' என்று,
நின் உரை செல்லும் ஆயின், 'மற்று
முன் ஊர்ப் பழுனிய கோளி ஆலத்து,
புள் ஆர் யாணர்த்தற்றே, என் மகன்
வளனும் செம்மலும் எமக்கு' என, நாளும்
ஆனாது புகழும் அன்னை
யாங்கு ஆகுவள்கொல்? அளியள் தானே!

புறநானூறு—254 : —கயமனார்

படர—விலங்கிப் போக. எடுப்ப—துயிலைப் போக்க. புல்ல—பொருந்தியிருக்க. இடைச் சுரம்—சுரத்திடை. இறுத்தல்—வீழ்ந்து கிடத்தல். விளர்த்த—வெள்ளிதான, ஒளி மழுங்கிய. ஓச்சி—உயர்த்தி. கிளை—(உன்)சுற்றத்தார். நின் உரை—உன்னைப் பற்றிய செய்தி. முன்ஊர்—ஊரின்முன். பழுனிய—பழுத்த; முதிர்ந்த; பொது இடத்தில் உள்ள. கோளி—பூவாது காய்க்கும் மரம். ஆர்—உண்ணுதல்; நிறைதல். அற்று—தன்மை யுடையவை. வளம்—செல்வம். செம்மல்—தலைமை. ஆனாது—நிறுத்தாமல். அளியள்—இரங்கத் தக்கவள்.

O WHAT ABOUT HER?

Warriors young and old
Have abandoned this field and gone;
I try to wake and rouse you,
But you do not rise up;
And with your chest pressing the earth
You lie motionless on this no-man's land
O my hero!
If I lift up my pale,
Bare and unbangled arms
And cry out,
And news of you should reach your clan
That their young hero
Has alas! come to this,
O what will become of her, your mother,
Who day after day praised you incessantly
Saying,
'Like the village banyan tree
Modestly flowerless, but full or ripe fruit,
A sanctuary for all the birds
Is my son to us,
With his riches and his lordliness!'
O What will become of her?

Purananūru—254 : *—KAYAMANĀR*

ஈன்ற ஞான்றினும் உவந்தனள்

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள்,
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படை அழிந்து, மாறினன்' என்று பலர் கூற,
'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்
முலை அறுத்திடுவென், யான்' எனச் சினைஇ,
கொண்ட வாளொடு படு பிணம் பெயரா,
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறு ஆகிய
படு மகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!

புறநானூறு—278 : —காக்கை பாடினியார் நச்செள்ளையார்

உலறிய—வற்றிய. நிரம்பா—தசை நிரம்பாத; மெலிந்த. முளரி—முள்ளுள்ள சுள்ளியுடைய செடி. மருங்கு—பக்கம். அழிந்து—விலகி; ஒதுங்கி. மாறினன்—அயலில் சென்றனன். மண்டு—முனையும். அமர்க்கு—போருக்கு. உடைந்தனன்—(தோற்று) ஓடினன். சினைஇ—கோபித்து. படு—பட்ட; இறந்த. பெயரா—பெயர்த்து. கிடக்கை—கிடந்ததை. உவந்தனள்—மகிழ்ந்தனள்.

THE HEROIC MOTHER

The veins stood out
On her hollow shrunken shoulders:
And her thin flanks
Were gnarled twigs of thorny shrub;
So old was she.
They told her that her son
Had turned and fled from battle.
Her wrath blazed out;
And she vowed,
'If from the shock of battle
My son had shrunk,
I shall cut off these breasts of mine'
Which gave that coward suck.
So, sword in hand, she searched
The field of battle, red with the gore of the dead.
She saw her son's mangled corpse
With all its limbs severed by the sword.
On that day of his death
The mother's heart rejoiced far more
Than on the day she gave him birth.

Purananūru—278 :—KĀKKAIPĀTINIYĀR NACCELLAIYĀR

பாசறை உளன் என வெரூஉம்

இரும்பு முகம்சிதைய நூறி, ஒன்னார்
இருஞ் சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே;
நல் அரா உரையும் புற்றம் போலவும்,
கொல் ஏறு திரிதரு மன்றம் போலவும்,
மாற்று அருந் துப்பின் மாற்றோர், 'பாசறை
உளன்' என வெரூஉம் ஓர் ஒளி
வலன் உயர் நெடு வேல் என்னைகண்ணதுவே.

புறநானூறு—309 : —மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்

இரும்பு—படைக்கலம் (வால், வேல் முதலியவை). நூறி—வெட்டி. ஒன்னார்—பகைவர். இரும்—பெரிய. சமம்—போர். ஏனோர்க்கும்—மற்றவர்களுக்கும். நல்அர—நல்ல பாம்பு. புற்றம்—புற்று. ஏறு—காளை; இடபம். மன்றம்—(பசுக்கள் தங்கும்) பொது இடம். மாற்றரும்—தாங்கி (எதிர்த்து) நிற்க முடியாத. துப்பு—வலிமை. மாற்றோர்—பகைவர். ஒளி—பிறர்க்கு அச்சம் உண்டாதற்குக் காரணமான நன்மதிப்பு. உயர்—உயர்த்தும். என்னை—என்னுடைய தலைவன்.

HIS CAMP OF WAR

119 It is easy for everybody
As it is for him
To slaughter their foemen,
Blunting the edges of their weapons of steel;
And so to win a big battle.
But he alone, my king,
With his long lance raised in victory
Has such a unique halo of glory
That even his camp of war
Strikes such utter terror
Even into the dauntless hearts
Of men of supremest courage,
As does the anthill's hole
Within which a deadly serpent lodges,
Or the open village common
Where on roams a fierce killerbull.

Puranānūru—309 : —*MATURAI ILANKANNI-K KOCIKANṈR*

மரம் படு சிறு தீ

நுதி வேல் கொண்டு நுதல் வியர் துடையா,
கடிய கூறும், வேந்தே: தந்தையும்,
நெடிய அல்லது, பணிந்து மொழியலனே:
இஃது இவர் படிவம்: ஆயின், வை எயிற்று,
அரி மதர் மழைக் கண், அம் மா அரிவை,
மரம் படு சிறு தீப் போல,
அணங்கு ஆயினள், தான் பிறந்த ஊர்க்கே.

புறநானூறு—349 : —மதுரை மருதன் இளநாகனார்

நுதி—நுனி; முனை. நுதல்—நெற்றி. வியர்—வேர்வை. துடையா—துடைத்து. நெடிய—தம் மேம்பாட்டை உணர்த்தும். படிவம்—விரதம்; கொண்ட முடிவு. வை—கூர்மை. எயிறு—பற்கள். அரி—செவ்வரி படர்ந்த. மதர்—செருக்கு; ஒளி; அழகு. மழை—ஈரம்; குளிர்ச்சி. அம்மா—அழகால் சிறந்த: அழகுள்ள மாமை (சற்றே கரிய) நிறமுடைய. அரிவை—இளமை வளம் மிக்க பெண். மரம்படு—ஒரு மரத்தில் பற்றிய. அணங்கு—வருத்தும் தெய்வம்.

AN ANGEL, YET

The prince wipes his sweating brow
With the edge of his sharp spear,
And speaks fierce words in anger.
Her father too speaks no soft words either.
And is naughty and unbending.
If both of them stick
To their inflexible resolve,
This maiden most wondrous fair
With sharp and glistening teeth,
And red-veined, wanton, dew-soft eyes,
Would, like a tiny spark of flame
Shooting out of a single tree
Setting a forest ablaze,
Be an angel of destruction
To her native city.

Purananūru—349 : *—MATURAI MARUTAN ILANĀKANĀR*

Compare

1. Like, another Helen, fired another Troy—DRYDEN
2. Helen, whose beauty summoned Greece to arms,
   —*Conquests of Tamburlaine*—CHRISTOPHER MARLOWE

INDEX OF AUTHORS

Number – Numbers of Pages

ஆசிரியர் அட்டவணை

(எண்கள்—பக்க எண்கள்)

INDEX OF FIRST LINES

Number—Numbers of verses

முதல் அடிகளின் அட்டவணை

எண்—பாட்டு எண்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

		ரூ. பை
1.	தமிழில் விடுகதைகள்	12 00
2.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?	6 00
3.	தமிழர் தோற்கருவிகள்	10 00
4.	தமிழும் தமிழரும்	5 00
5.	தமிழர் இசை	70 00
6.	ம.பொ.சி யின் இலக்கிய நூல்கள் - ஓர் மதிப்பீடு	20 00
7.	இளங்கோவின் இலக்கிய உத்திகள்	12 00
8.	திராவிட மொழி இலக்கியங்கள்	35 00
9.	தமிழ் இலக்கியக் கொள்கை-9	20 00
10.	தொல்காப்பியம்-பெயரியல்	12 00
11.	தொல்காப்பியம்-வினையியல்	20 00
12.	தன்வந்தரி குழந்தை வாகடம்	14 00
13.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	6 00
14.	தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்	12 00
15.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-1	12 00
16.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-2	22 00
17.	இஸ்லாம் வளர்த்த தமிழ்	15 00
18.	தமிழரின் தாயகம்	10 00
19.	பாவாணரும் தனித்தமிழும்	12 00
20.	தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு	10 00
21.	செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள்	25 00
22.	மொழிபெயர்ப்பியல்	10 00
23.	தமிழர் திருமணம்	25 00
24.	தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்	35 00
25.	தமிழ் தந்த வ.உ.சி.	15 00
26.	மகாமதிப்பாவலர்	11 00
27.	உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு	15 00
28.	உலக முதன்மொழி தமிழ்	12 00
29.	மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை	15 00
30.	தொல்காப்பியம்-இடையியல்	22 00
31.	வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை	15 00
32.	வாத்திய மரபு	20 00
33.	A study of Perunkathai	12 00
34.	Dissertations on Tamilology	10 00
35.	Siddha Medicine (Heritage of the Tamils)	45 00
36.	Literary Heritage of the Tamils	50 00
37.	Tamil Drama	20 00
38.	Tamil Writers Directory	10 00
39.	Tamil-Text (An Auto Instructional Course)	25 00
40.	Siddha Medical Manuscripts in Tamil	8 00
41.	Heritage of the Tamils - Temple Arts	50 00
42.	Heritage of the Tamils - Education & Vocation	50 00